www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
පක්කම් 20
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
ஜூலை 05–11,1998
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 264

## உச்சி மாநாடு
# மாநகரத் தலையிடி






## பொலிஸ் நிலையங்கள் புலிகளிடம்

## நடிகை விசித்திரா 'திடுக்' தகவல்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அவலம் பெருகினால் நன்று!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வடபகுதிக்கான நிவாரணத்தில்
வெட்டப் போவதாக
அரசாங்கம் அறிவித்திருந்தது!
வடக்கில் உள்ள மக்களை
புலிகளிடம் இருந்து
விடுவிக்கப் போவதாக
அரசு முன்னர் கூறியது!
இப்போது நிவாரணத்தை
வெட்ட முன்வந்ததைப்
பார்க்கும்போது,
புலிகளிடம் இருந்து
விடுவித்தது
பட்டினி போடத்தானா,
என்று கேட்கும் நிலை
தோன்றியுள்ளது!
நியாயமான தீர்வு
வழங்குவது தவிர,
ஏனைய சகல விடயங்களிலும்
இன்றைய அரசும்
படு சுறுசுறுப்பாகவுள்ளது!
தமிழ் மக்களைப்
பாதிக்கும் முடிவுகளை
துரிதமாக எடுப்பதில்
அரசுக்கு எவ்வித
தயக்கமும் இருப்பதாகத்
தெரியவே இல்லை!
இதுவரை புலிகளின்
கட்டுப்பாட்டில் உள்ள
பகுதிகளை மட்டுமே
நிவாரண இழுத்தடிப்பால்
பாதிக்கச் செய்தனர்!
இப்போது தமது
பூரண கட்டுப்பாட்டுப் பகுதியிலும்
நிவாரண வெட்டை
அமுல்படுத்த முன்வந்துள்ளனர்!
யாழ் குடாநாட்டில்
நிவாரணக் குறைப்பு
செய்யப்பட்ட பின்னர்தான்
தமிழ்க் கட்சிகள்
இது ஏதோ புதிய
விவகாரம்போல
அறிக்கைகள் விட்டிருந்தன!
மொத்தம் பத்து
நாடாளுமன்ற உறுப்பினர்களை
கொண்டுள்ள வங்கியன்றோ
யாழ்ப்பாணம்!
அதுதான் யாழ்ப்பாணம்
பாதிக்கப்படும்போது
தமிழ்க் கட்சிகள்
போட்டி போட்டபடி
அறிக்கைகள் விடுகின்றன!
'அரசுடன் பேசி
பரிகாரம் செய்துள்ளோம்!'
என்று கூறி
விளம்பரம் பெறுவது
அடுத்த தேர்தலுக்கு
உதவும் அல்லவா?
வன்னியில் பட்டினிச்சாவுகள்
நடந்தபோது
இக் கட்சிகள்
எங்கே போயின?
கிழக்கில் பல பகுதிகளில்
நிவாரணப் பொருட்களுக்கும்
தடை விதிக்கப்பட்டபோது
இவை என்ன செய்தன?
மட்டக்களப்பு, அம்பாறை
மாவட்ட போக்குவரத்தை
தடைசெய்ய முனைந்தபோதும்
இக் கட்சிகள்
வாயே திறக்கவில்லை!
இன்றுகூட திருமலை
மூதூரில்
நிவாரணப் பொருட்களை
மொத்தமாக எடுத்துச்செல்லத்
தடை இருக்கிறது!
உணவை, மருந்தை,
நிவாரணப் பொருட்களை
ஆயுதமாகப் பாவிக்கும்
அரசின் உத்தி,
இன்று- நேற்று ஆரம்பமானதல்ல!
இந்த உத்தி,
தோன்றியபோதே எதிர்த்திருந்தால்
தொடர்ந்து கையாள
அரசு துணிந்திருக்காது!
வெறும் அன்றாடப் பிரச்சனை
போல இதனைச் சித்தரித்து
அரசின் உள்நோக்கத்தை
சில கட்சிகள் மறைக்கின்றன!
இனப்பிரச்சனைக்கான
இராணுவத் தீர்வு முனைப்போடு
இரண்டறக் கலந்ததே
இந்த உத்திகளாகும்!
இதனை அரசு சிறிது
தளர்த்துவதாக அறிவித்தாலும்கூட
மறைமுகமாகத் தொடரலாம்!
எனவே-
போரை நிறுத்தி
அரசியல் தீர்வு காண
மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தத்தை கோருவதே
நிரந்தரப் பரிகாரமாகும்!
அன்றாடப் பிரச்சனைகளின்
தீர்வுக்காகப் பாடுபடுவதாகக்கூறி
தங்கள் சரணடைவு அரசியலை
நியாயப்படுத்த முனைவோர்
அரசியல் தீர்வுக்கான
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை
கோருவதற்குத் தயங்குவது
ஆச்சரியமல்ல!
அன்றாட அவலங்கள்
பெருகிக்கொண்டே இருந்தால்தானே
தமிழ்க் கட்சிகள்
அரசியல் நடத்தலாம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## ஆலயம் தொழுவோம்

ஆலயம் என்பது நமது உடலைப் போன்றது. ஆலயத்திலுள்ள திருக்கல்யாண மண்டபம், யாக மண்டபம், வியாகரண மண்டபம், நிருத்த மண்டபம், அர்த்த மண்டபம் முதலிய ஆறு மண்டபங்களும் நமது உடம்பிலுள்ள மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆதாரங்களைப் போன்றதாகும்.

இதயக் கமலமாகிய கர்ப்பக்கிரஹத்தில் பரமாத்மாவான ஜீவாத்மா கோயில் கொண்டுள்ளார்.

கோவிலின் கொடிமரம் நமது உடம்பிலுள்ள முதுகெலும்பு. இவ்வாறு எல்லா வகையிலும் எமது உடலானது ஆலய அமைப்பினைக் கொண்டுள்ளது.

ஆலயத்திற்கு தூய்மை வேண்டும். அதேபோல் நமது உடம்பிற்கும் தூய்மைவேண்டும். ஆலயத்தில் பக்தி வளரும். நமது உள்ளுணர்வு-உடம்பிலும் பக்தி பரவ வேண்டும்.

ஆலயத்தில் அனுதினமும் ஐந்து வகையான வழிபாடுகள் நடைபெறும். அதேபோல் நாமும் ஐம்புலன் அடக்கத்துடன் ஒழுகுதல் வேண்டும்.

இந்த நிலையில் மனித வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைவது ஆலயமும் இறைவழிபாடும்தான். இதனையே ஔவைப் பிராட்டியாரின் அமுத வாக்கு நமக்கு புகட்டுகிறது- 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று.

தொகுப்பு: அ. அரசரெத்தினம்-சேனையூர்-06.



## லுக்மானின் நுண்ணறிவு

ஹஸ்ரத் லுக்மான் ஹக்கீம் (அலை) அவர்கள் தமது சிறு பிராயத்தில் ஒரு வீட்டு வேலைக்காரனாக இருந்தார்.

ஒருநாள் இவரின் எஜமான் இதர வேலையாட்களையும் லுக்மானையும் அழைத்து தனது தோட்டத்தில் உள்ள பழங்களைப் பறித்து வருமாறு கூறினார்.

பழங்களைப் பறிக்கச் சென்ற வேலையாட்கள் அவற்றின் சுவை யறிந்து அவற்றில் அதிக பழங்களை தின்று தீர்த்துவிட்டு அப்பழத்தில் ஒன்றையேனும் சுவையாத லுக்மான் மீது பழியைச் சுமத்தினர்.

நுண்ணறிவு பெற்ற லுக்மானோ தன் எஜமானிடம் "வாய்மையே வெல்லும்! வல்ல நாயகன் துணையெனக் கூறி எங்கள் அனைவருக்கும் வெந்நீரை குடிக்கக் கொடுங்கள். பின் ஒரு குறிப்பிட்ட தூரம் வரை ஓட வையுங்கள்" என்றார்.

இதைக்கேட்ட எஜமான் ஆச்சரியமுற்று அவ்வாறே செய்தார். எல்லோரும் வயிறு குமட்டி வாந்தி எடுத்தனர். பழங்களை புசித்தவர்களின் வாந்தியில் பழங்களின் அம்சங்கள் காணப்பட்டன. ஆனால் ஹஸ்ரத் லுக்மானின் வாந்தியில் அவ்வாறு காணப்படவில்லை.

உண்மை உணர்ந்து கொண்ட எஜமான் ஒரு நிரபராதியை காப்பாற்றிய அல்லாஹ்வுக்கு "அல் ஹம்துலில்லா" என்றார்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.261

### பரிசுக்குரிய கவிதை

### எது?



வெலிக்கடையா...
களுத்துறையா?
ஐயா தந்தது
ஒன்று;
அம்மா தந்தது
இன்னொன்று!
அவரவர் பங்குக்கு
தந்து கொண்டுதான்
இருக்கிறார்கள்-
தங்களால் முடிந்ததை!
பு. இளமுருகன்-உடபுசல்லாவ.

### இனமும் இடமும்

இதுதான்-
லங்கா மாதா
தமிழருக்குக் கொடுத்த
புகலிடம்!
கு. சுரேஸ்குமாரன்-தம்பிலுவில்-02.

### அடக்குதல்

கடிப்பாக...
மெல்லுவாக....
ஒருநாளும்-
துப்பமாட்டாக!!
எஸ். பிரபா- பதுளை.

### தமிழன்

அட(!)
இலங்கையில்
நாம்!
சுபா வரன்-கண்டி.

### போரரக்கன்

கோரப்பல்லும் குண்டுக் கண்ணும்.
இரத்த வெறியும் உருவத்திலேந்தி,
போரரக்கன் வாய்திறந்து,
பார்முழுவதும் விழுங்குகின்றான்;
யார் தடுப்பார் இதையிங்கே?
ஆரையம்பதி-இதயம்.


### சேவை

அவசரகால சட்டத்தின்
தமிழின சேவை
ஆகா! அற்புதம்!!
சு. வனிதா-உரும்பிராய்.

### முகமூடி

வண்ண வண்ண முகமூடி-
பெண்ணும் பெரிய முகமூடி-
உயிர் குடிக்கும் முகமூடி
உலகை ஏமாற்றும் முகமூடி!
சி. சிவபரீஸ்வரன்-சுழிபுரம், யாழ்ப்பாணம்.

## கவிதைப் போட்டி இல.264



**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 11.07.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.264,
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

### மறையும் உண்மை

உலகின் கண்கள்
உற்று நோக்க-
நீதியின்றி
மறைக்கப்படும்
உண்மைகள்!
ம. திருவரசுராசா-
வவுனியா.

### பலி...!

போர்ப் பிரியர் சங்கூத,
போர் வணிகர் நிதிருவிக்க,
போரரக்கன் விழுங்குகின்றான்-
பூப்போன்ற மக்களினை!
அ. சந்தியாகோ-அசோகா
வித்தியாலயம், கண்டி.

### எச்சரிக்கை


இருண்ட தீவில்
செய்தித் தணிக்கை;
அவசரகால சட்டத்தின்
இன்னொரு அவதாரம்!
செல்வன் அ. அச்சுதன்-
சேனையூர்-06.

## ஜெட் வேகம்



'மேக்-அப் புன்னகை' வெகு நேர்த்தியான தொடர். பட்டுக்கோட்டை பிரபாகரின் எழுத்து நடை ரசமானது. புதிய தொடர் 'மேற்கே ஒரு குற்றம்' முதல் அத்தியாயமே ஜெட் வேகம். சுஜாதா என்றால் சொல்லவும் வேண்டுமோ? அபாரம்!

கி. மிஹாளினி,
கொழும்பு-06.




## மாயைகள் மயக்கங்கள்

பாராளுமன்ற மாயைகளை உருவாக்கி, தங்களை பாராளுமன்ற ஆயுட்கால உறுப்பினர்களாக மாற்றிக் கொள்வதுதான் தமிழ்க் கட்சித் தலைமைகளின் ஆசை. அதுதான் பாராளுமன்றத்தில்தான் தீர்வுக்கான சாவிக் கொத்து இருப்பதாக கதை விடுகிறார்கள். இந்த மாயைகளில் மயங்கியது அந்தக் காலம்.

சு. சிரிதரன், யாழ்ப்பாணம்.

## தேர்தல் தேவையா?

"மாகாணசபைத் தேர்தலை தள்ளிப்போட்டுவிட்டு இலட்சியத்தை நிறைவேற்று" என்கின்றனர் பௌத்த குருமார். "வடக்கு-கிழக்கிலாவது தேர்தல் நடத்தி எங்களுக்கு பதவி தந்துவிட்டு உங்கள் இலட்சியத்தை நிறைவேற்றுங்கள். நாங்கள் என்ன குறுக்கேயா வரப் போகிறோம்?" என்கின்றன தமிழ்க் கட்சிகள். யார் செத்தால் என்ன? தினம் பலியாகும் மனிதரின் தியாகத்தில் குளிர்காய்ந்துகொண்டு எத்தனை கூத்தடிக்கின்றன தமிழ்க் கட்சிகள்.

மா. தயாளன், திருமலை.

## மொட்டையடிக்க ஆசை

மாநகர சபையில் மேயராக
ஆசை,
மாகாண சபையில்
முதல்வராக ஆசை,
பாராளுமன்றத்தில் பதவி பெற ஆசை,
தமிழ் மக்கள் தலையை மொட்டையடிக்க ஆசை, ஆசை
(காதிலை பூ கந்தசாமியாரின் கவிதையில் சிறுமாற்றம்.)
ஜெ. ராதா, யாழ்ப்பாணம்.

## பயன்படுத்தலாம்

பாராளுமன்றத்தை பயன்படுத்துவது எப்படி என்பதை உரிய கட்டத்தில் உதாரணத்துடன் விளக்கியிருந்தார் இராஜதந்திரி. பாராளுமன்றத்தால் உரிமைகள் கிடைக்காது என்பது ஜி.ஜி., செல்வா, அமிர் போன்ற மேதைகளால் முடியாதபோதே கண்ட உண்மைதான். பாராளுமன்ற பதவிகளை பயன்படுத்தி வெளியுலகுக்கு உண்மைகளைக் கூறவும், தமிழ் மக்களிடம் இந்த அரசை, அம்பலப்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் முயற்சிக்கட்டும். அதுதான் பயன்படுத்தல்.

க. நந்தமித்திரன், மட்டக்களப்பு.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

கிரிக்கெட், உதைபந்தாட்ட அலசல்கள் பிரமாதம். நாரதரே நாம் உமது வாசகர்கள். உமது ஆய்வு பற்றி அறிவோம்தானே!

ஏ. சிவநேசராஜா, சிலாபம்.

# வாசக(ர்)சாலை

அன்பின் முரசுக்கு,

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். இடி அமீனின் இடித் தொடர் எம்மை முற்றிலும் அசத்துகிறது. அத்துடன் நாம் அறியாத பல செய்திகளைத் தரும் முரசுக்கு எமது உள்ளம் கனிந்த வாழ்த்துக்கள்.

ச. நவரத்தினம், வவுனியா.

முரசே!

உனது அனைத்து அம்சங்களும் எனது மனதைக் குளிர வைக்கின்றன. இதில் இடி அமீனின் இனிய தொடர் கதை சூப்பர். முரசின் சேவை தொடர எனது வாழ்த்துக்கள்.

ச. வடிவேல், நிவிதிகலை.

### அரசு-முரசு

குடிமக்களுக்கு தேவை நல்ல-அரசு
மன்னருக்கு தேவை பொன்-முரசு,
படைகளுக்குத் தேவை போர்-முரசு,
படிக்க வாராந்தம் தேவை தின-முரசு!
அ. பேரின்பராஜ், மூதூர்-07.

'காதிலை பூ கந்தசாமியார்' சிரிக்க வைப்பதோடு சிந்திக்கவும் வைக்கிறார். மனதைக் கவரும் புன்னகையோடு உலா வந்த இலண்டன் ரோஜாவின் வாழ்க்கை எத்தனை சோகமானது என்பதை 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' மூலம் உணர முடிகின்றது.

மாத்தறை மாலியா முஹாஜிரீன்.

### இவர்களுக்கு இல்லை

தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்படும் அட்டூழியங்களை அம்பலப்படுத்தாமல், தமிழ்க் கட்சிகள் மௌனம் சாதிப்பதை எடுத்துக்கூறிய இராஜதந்திரியின் கட்டுரை பிரமாதம். அண்டைய நாட்டு தமிழ் கட்சிகள் இலங்கை தமிழர் பிரச்சனை பற்றி கொண்டுள்ள அக்கறை நம்நாட்டு தமிழ் கட்சிகளுக்கு இல்லை என்பதே கவலையாக உள்ளது!

பி. ஆர். அசோக்குமார், டிக்கோயா.

இனிய முரசே!

உன்னில் பிரியம் கொண்டிருக்கும் இரசிகர்களில் நானும் ஒருத்தி. ஆனால் நீண்ட நாட்களுக்குப் பின் மடல் வரைகிறேன். பட்டுக்கோட்டை பிரபாகர் எழுதிய தொடர் நாவல் நான் எதிர்பார்த்த வண்ணமே முடிவுற்றது. இதையிட்டு அளவில்லா மகிழ்ச்சி அடைந்தேன். மற்றும் சகல அம்சங்களும் சூப்பர்!

நுவரெலியா வாசகி, ரஞ்சனி.

'முரசின், அரசியல் விமர்சனங்கள், அலசல்கள்' கடந்த காலத்தை நினைவூட்டுவதுடன், எதிர்கால நடப்புக்களையும் முன்னறிந்து தரும் துல்லியம்தான் எம்மையெல்லாம் வியக்கச் செய்கிறது. அதற்காகத்தான் வாரா வாரம் தவம் இருக்கிறோம்.

க. அஜந்தன், அக்கரைப்பற்று-07.

"440 வோல்ட் 'திக் திக்'" தொடரை இத்தனை சீக்கிரத்தில் 'நச்'சென்று முடித்த ராஜேஸ்குமாரின் தலையில் நந்தினியின் மண்வெட்டியாலேயே டமாரென்று...? (எமது பாராட்டுக்களைத் தான்)

முரசபிமானிகள்
பேனா. சுப்பிரமணியன்,
நவஜோதிரமணன், ஊட்டுவள்ளி குரூப்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# போர் நிறுத்தம், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
# பரந்துபட்ட போராட்டம் நடத்த யோசனை!

"போரை நிறுத்தி, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசியல் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்!" இவ்வாறு கோரி தமிழ்ப் பிரதேசங்களிலும் கொழும்பிலும் போராட்டங்கள் நடத்த கட்சி சார்பற்ற தமிழர் அமைப்புக்கள் சில யோசித்து வருகின்றன.

தமிழ்க் கட்சிகள் அரசுக்கு வழங்கும் ஆதரவை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்றும் அவை வலியுறுத்தவுள்ளன.

ஏற்கனவே தமிழர் நடவடிக்கைக்குழு கொழும்பில் கூடி சில முடிவுகளை எடுத்திருந்தது. அக் குழுவினரும் தமது கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை நடத்துவது குறித்து ஆலோசித்துள்ளனர்.

மட்டக்களப்பு, திருமலை, வன்னி போன்ற பகுதிகளில் உள்ள கட்சி சார்பற்ற வெகுஜன அமைப்புக்களும் போர் நிறுத்தத்தை முன்வைத்தும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரியும் போராட்டம் நடத்த தயாராகிவருகின்றன.

### பழைய பல்லவி

ஜனாதிபதியிடம் எடுத்துரைப்பு, பாராளுமன்றத்தில் முறையீடு என்ற பழைய பல்லவிகளையே தமிழ்க்கட்சிகள் பாடிக் கொண்டிருந்தது போதும். அரசுக்குத் தெரியாமல் எக்காரியமும் நடக்கவில்லை. அதனால் அரசுத்தலைவர்களுக்கு தமிழ்க் கட்சிகள் எடுத்துரைத்தும் எதுவும் நடக்கப்போவ தில்லை.

உலகின் முன்பாக தமிழர் தம் அவலத்தை ஒரே குரலில் எடுத்துரைத்து, போரை நிறுத்தி அரசியல் தீர்வு காணும் நிர்ப்பந்தத்தை அரசுக்கு ஏற்படுத்துவது ஒன்றே உரிய வழியாகும்.

(நமது நிருபர்)

அதற்கு முதற்கட்டமாக, அரசில் தாம் நம்பிக்கை இழந்துவிட்ட செய்தியை இக் கட்சிகள் சர்வதேச சமூகத்திற்குத் தெரியப் படுத்த வேண்டும்.

அரசியல் தீர்வை காலம் தாழ்த்த-அரசாங்கம் வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளும் தேர்தல்கள், அபிவிருத்தி பற்றிய ஆரவாரங்கள் போன்றவற்றை தமது குறுகிய அரசியல் நலன் கருதி- பயன்படுத்துவதை தமிழ்க் கட்சிகள் நிறுத்த வேண்டும்.

மேற்கண்டவாறு வெகுஜன அமைப்பு ஒன்றின் பிரமுகர் தெரிவித்தார்.

### மகஜர்

கிளிநொச்சி வெகுஜன ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்திற்கு மகஜர் ஒன்றை அனுப்பி இருந்தது.

"செய்தித்தடையின் பின்னால் மக்கள் படும் அவலங்களை உங்களுக்கு எடுத்துக் கூறு கிறோம். எங்கள் துயரக்குரல் உலகின் செவிக்கு எட்டவேண்டும். உலகம் தன் மௌனத்தைக் கலைக்க வேண்டும்!" என்ற வேண்டுகோளுடன், அங்குள்ள நிலை குறித்தும் விபரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
## இந்தியாவின் சங்கடம்

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இலங்கை இனப்பிரச்சனைக்குத் தேவை என்பதை இந்தியா வலியுறுத்த முடியாத நிலையில் உள்ளது.

இந்தியாவின் சொந்த நலனே அவ்வாறான நிலைப்பாட்டுக்கு முக்கிய காரணமாகும்.

காஷ்மீர் பிரச்சனையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்ற கோரிக்கையை இந்தியா நிராகரித்துள்ளது. அதுபோல பாகிஸ்தானுடனான பிரச்சனையைத் தீர்க்கவும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியமில்லை என்று இந்தியா நிராகரித்துள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்பதற்கு இந்தியா பகிரங்கமாக ஆதரவு தெரிவிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆனால் தமிழ் பேசும் தரப்பு தனது நலனை முன்னிட்டு முன்வைக்கும் நிலைப்பாடுகள் இந்தியாவின் நிலைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

## மீன்பிடிக்க நிபந்தனை
## புலிகளுக்கு எதிராக ஊர்வலம்

புலிகளுக்கு எதிராக ஊர்வலம் நடத்துமாறு தாம் நிர்ப்பந்திக்கப் பட்டதாக யாழ் கடற்தொழிலாளர்கள் மாகாணசபை அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனராம்.

"யாழ் குடாநாட்டில் கரையில்-அதுவும் பகல் வேளைகளில் மட்டுமே மீன் பிடிக்க அனுமதிக்கப்படுகிறது. இதனால் சீராக தொழில் செய்ய முடியவில்லை.

மீன்பிடிக்க சிறப்பான நேரம் அதிகாலை மூன்று அல்லது நான்கு மணியே. ஆனால் நாம் காலை ஆறுமணிக்குப் பின்னரே மீன் பிடிக்க அனுமதிக்கப்படுகிறோம். அதுவும் கரையில் இருந்து 500 மீட்டர் தூரம்வரை மட்டுமே அனுமதிக்கப்படுகிறோம்," என்றும் மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.

தம்மை மீன்பிடிக்க அனுமதிக்குமாறு கேட்டபோதே, புலிகளுக்கு எதிராக ஊர்வலம் நடத்துமாறு கோரப்பட்டதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

மீனவர் பிரச்சனைக்குத் தீர்வு கண்டு விட்டதாக தமிழ்க் கட்சிகள் அறிக்கை விடுவது பத்திரிகைகளுக்காக. அச் செய்திகளைப் போடும் பத்திரிகைகளும் அவற்றின் உண்மை பொய்யை அறிந்து கொள்வதில்லை.

ஏதோ மீனவர் பிரச்சனை தீர்ந்துவிட்டதாக்கும் என்றே ஏனைய மக்களும் நினைக்கின்றனர். ஆனால் எப்பிரச்சனைகளும் தீர்க்கப்பட வில்லை என்றும் யாழ் கடற்தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## தமிழ்க் கட்சிகளின் ஆதரவு பெறத் தி[illegible]ம்!
## ஐ.தே.கட்சியின் இழுத்தடிப்புத் தந்திரம்

அரசின் தீர்வு யோசனைகளில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதால், தாம் ஒரு யோசனையை முன்வைத்து தமிழ் வாக்காளர்களைக் கவருவதற்கு ஐ.தே.கட்சி திட்டமிட்டு வருகிறது.

குறிப்பிட்ட காலத்திற்கு வடக்கு-கிழக்கு தொடர்ந்து இணைந்திருப்பது, பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது போன்றவை ஐ.தே.கட்சியின் யோசனைகளில் அடங்கியுள்ளன.

அரசு இப்போதே பிரிக்கத் திட்டமிடுகிறது. எதிர்க்கட்சி சில வருடங்களின் பின்னர் வடக்கு-கிழக்கைப் பிரிக்கத் திட்டமிடுகிறது. இரண்டு கட்சிகளின் அடிப்படை நோக்கமும் ஒன்றாகவே உள்ளது. எனினும் இன்னமும் சில ஆண்டுகள் சென்று பிரிக்க முனைந்தால் தற்போதைய எதிர்ப்பு தமிழ்த் தரப்பில் இருக்காது. சுலபமாகப் பிரித்துவிடலாம் என்று ஐ.தே.கட்சி கருதுவதாகத் தெரிகிறது.

இன்றைய காலகட்டத்தில் தமிழ் பேசும் தரப்பு அடித்துப் பேசக்கூடிய நிலையில் இருப்பதால், இறுதித் தீர்வைத் தள்ளிப்போட வேண்டும். இடைக்காலத் தீர்வாக பதின்மூன்றாவது திருத்தச் சட்ட அமுலாக்கல் என்று திசைதிருப்பிக் கொண்டிருக்கலாம், என்பதே ஐ.தே.கட்சியின் திட்டம் என்று தெரிகிறது.

தமது யோசனைகளுக்கு தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஆதரவு திரட்ட ஐ.தே.கட்சி பிரமுகர்கள் சிலர் தீவிர முயற்சி செய்து வருகின்றனர். சில தலைவர்களையும் சந்தித்துள்ளனர்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டம், வடக்கு-கிழக்கு தற்காலிக இணைப்பு என்பவை ஐ.தே.கட்சி ஆட்சியால் கொண்டு வரப்பட்டவை என்பதால் ஆளும் அணி ஒருபோதும் அவற்றை ஏற்கப்போவதில்லை, என்பதும் உறுதியாகத் தெரிகிறது.

எதிர்வரும் தேர்தல் எதுவாக இருந்தாலும் அதனைச் சந்திக்க ஐ.தே.கட்சி தயாராக உள்ளது. தமிழ் பேசும் வாக்காளர்களை தம் பக்கம் இழுப்பதில் ஐ.தே.கட்சி கூடிய கவனம் செலுத்த உள்ளது.

கொழும்பு கைதுகள் தொடர்பாக ஐ.தே.கட்சி தலைவர்கள் சிலர் கண்டனம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ■

## பலியானோர் 1567
## காயம் பத்தாயிரம் பேர்!

கடந்த ஒரு மாத காலத்தில் வன்னிப் போர்முனையில் காயமடைந்தோர் 1416 பேர் என்று இராணுவ தணிக்கையாளர்கள் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளனர். பலியானோர் 316 பேர். சண்டே ரைம்ஸ் கொடுத்த எண்ணிக்கையை வெட்டி விட்டு தணிக்கையாளர்கள் கொடுத்த எண்ணிக்கையே அதுவாகும்.

12 நாள் யுத்தத்தில் மட்டும் 1475 பேர் காயமடைந்தனர் என்று ஜெனரல் ரத்வத்தை பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

1997 மே முதல் 28.06.98 வரை பலியானோர் தொகை 1567 என்றும் இராணுவத் தணிக்கையாளர்கள் குறித்துள்ளனர். பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

## இடம்பெ[illegible]ரும் அவலம்– தமிழ்க் கட்சிகள் மௌனம்!

கிழக்கிலும் மக்கள் இடம்பெயர்வதும், அல்லல்படுவதும் மீண்டும் பாரியளவில் ஆரம்பமாகியுள்ளன. "இப்போதே இதற்குக் காரணமான நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோராமல், பின்னர் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளில் தமிழ்க் கட்சிகள் அரசியல் நடத்த முற்படக்கூடாது!" இக் கருத்தையே கிழக்கில் உள்ள மக்கள் பலர் முரசு நிருபரிடம் கூறியுள்ளனர்.

கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட பாரிய இடம்பெயர்வை உருவாக்கக்கூடிய நடவடிக்கைகளைக் கண்டும் காணாமல் இருந்து வருகின்றனர்.

அன்றாட அவலங்களை உருவாக்கும் அரசின் அணுகுமுறைகளை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டும். அதனைச் செய்யாமல் பின்னர் "அன்றாட அவலங்களைத் தீர்க்கவே தேர்தலில் போட்டியிடுகிறோம்" என்று கூறிக் கொண்டு வாக்கு வேட்டைக்கு வருவதே தமிழ்க் கட்சிகளது அரசியலாகிவிட்டது, எனவும் கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் பொருமுகின்றனர். ●

## 'போரை நிறுத்து! நிவாரணத்தை வழங்கு!'
## செயலக வளாகத்தில் ஆர்ப்பாட்டம்

யாழ் குடாநாட்டில் நான்கு தமிழ்க் கட்சிகள் இணைந்து நிவாரண வெட்டை எதிர்த்துப் போராட்டம் நடத்தின.

சுமார் நானூறு பேர்வரையானோர் இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ் அரச செயலக பொலிஸ் காவலையும்மீறி செயலக வளாகத்திற்குள் சென்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, கூட்டணி ஆகிய கட்சிகள் இணைந்து ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தன.

"ஆயுதம் தாங்கிய கட்சிகளுடன் இணைந்து கொள்ள மாட்டோம்!" என்று கூறிவந்த கூட்டணியினர் தற்போது யாழ்ப்பாணத்தில் இணைந்து செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வு காணுமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

'போருக்கு ஒதுக்கீடு, நிவாரணத்திற்கு குறைப்பா?', 'போர்ச் செலவைக் குறைத்து நிவாரணத்தை வழங்கு!' போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. எனினும் அரசை நேரடியாகச் சாடும் கோஷங்கள் தவிர்க்கப் பட்டிருந்தன. ■

## நிரந்தர நியமனம் – ஜூன் இறுதியில் பரீட்சை

சுபீட்சத் (சமுர்த்தி) திட்ட ஊக்குவிப்பாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் பொருட்டு நாடெங்கும் அவர்களுக்கு அவ்வப் பிரதேச செயலாளர்களினால் ஜூன் மாத இறுதியில் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டன.

தற்சமயம் பணியிலீடுபட்டுக் கொண்டிருக்கும் சுபீட்சத் திட்ட ஊக்குவிப்பாளர்களை நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்துமாறும் புள்ளிகளை வழங்கி அதனடிப்படையில் முன்னுரிமைப் பட்டியலொன்றைத் தயாரித்து அனுப்பி வைக்குமாறும் கேட்டு சுபீட்ச, இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை அமைச்சு சகல மாவட்டச் செயலாளர்களுக்கும் சுற்று நிருபமொன்றை அனுப்பி வைத்திருந்தது.

இதனடிப்படையினல் அனுமதிக்கப்பட்ட பணியாளர் தொகைக்கேற்ப முறையான நியமனங்களை அந்தந்தப் பிரதேச செயலாளருடாக விரைவில் வழங்குவதற்கு இலங்கை சுபீட்ச அதிகாரசபை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது என்றும் அந்தச் சுற்று நிருபம் மேலும் கூறுகிறது.

"நாடெங்குமுள்ள 23 ஆயிரம் சுபீட்சத் திட்ட ஊக்குவிப்பாளர்களில் 14 ஆயிரம் பேருக்கு நிரந்தர நியமனமும் ஏனைய 7 ஆயிரம் பேருக்குப் படிப்படியாகவும் நியமனம் வழங்கப்படும். ஆனால் ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. இனருடன் சேர்ந்து குழப்ப வேலைகளிலீடுபடும் 2 ஆயிரம் பேர் வேலை நீக்கம் செய்யப்படுவர்" என்றும் 07.06.98 அன்று மொனறாகலையில் இடம்பெற்ற ஜனாதிபதி மக்கள் சேவையில் பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக மேற்படி அறிவிப்பைச் செய்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாட்டிலுள்ள சுபீட்ச ஊக்குவிப்பாளர்கள் அனைவரும் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் மற்றும் அதற்கு ஆதரவு வழங்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களால் மாத்திரமே சிபார்சு செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ■

## ஈ.பி.டி.பி. இருவர் பலி

யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவில் பகுதியில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டுவில் ஐங்கரன் வாசகசாலைப் பகுதியில் ஈ.பி.டி.பி.யின் பெயரைப் பயன்படுத்தி கொள்ளைச் சம்பவம் ஒன்று நடைபெற்றதாகவும், அதனை விசாரிக்கச் சென்ற போதே இருவரும் கடத்திச் செல்லப்பட்டதாகவும் தெரிகிறது.

இரண்டுபேர் ஆயுதத்துடன் வந்தே அவர்களைக் கடத்திச் சென்றனர். வந்தவர்களில் ஒருவர் பெண் புலி.

கடத்திச் செல்லப்பட்ட இருவரது உடல்களும் மறுநாள் காலையில் புத்தூர் முடக்கடி ஆயத்தடி என்னும் இடத்தில் கிடந்தன.

காளிதாஸ், குணதாஸ் ஆகிய ஈ.பி.டி.பி. உறுப்பினர்களே பலியானோர் ஆவர். ■

## கடிதமும்–விலகலும்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் இருவர் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பதவி விலக வேண்டும் என்று 'விடுதலை விரும்பிகள்' என்ற பெயரில் அனுப்பப்பட்ட கடிதத்தை அடுத்தே அவர்கள் பதவி விலகியுள்ளனர்.

சகல உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள போதிலும், சிலர் அதனை வெளியே சொல்லாமலும், தமக்குக் கடிதம் வராதது போலவும் காட்டிக் கொள்கின்றனர். ■

## விமானக்குண்டு வீச்சில் 4 புலிகள் பலி!
## பதிலடிக்குத் தயாராகிறார்கள் புலிகள்!

ஜூன் 22ம் திகதி அதிகாலை 4 மணிக்கு புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வாகரை மீது படையினர் நடவடிக்கை மேற்கொண்டு கடல், தரை, ஆகாய மார்க்கமான தாக்குதலைத் தொடுத்து, பல முனைகளிலிருந்து முன்னேறி பிற்பகல் 4 மணியளவில் வாகரையைக் கைப்பற்றினர்.

மட்டக்களப்புப் பகுதியிலிருந்தும், திருக்கோணமலைப் பகுதியிலிருந்தும் முன்னேறிய படையினருக்குப் புலிகள் இயக்கத்தினர் அப்பகுதியில் பாரிய எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. எனினும் அடையாள எதிர்ப்பாக காலை 10.30 அளவில் பனிச்சங்கேணிப் பகுதியில் சிறு தாக்குதல் நடந்தது.

கதிரவெளியில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலின்போது நான்கு புலிகள் இயக்கத்தினர் கொல்லப்பட்டார்கள். மேலும் 17 பேர் காயமடைந்தார்கள் என்று தெரியவருகிறது.

முன்னர் வாகரைப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர், முதற்கட்டமாக-கடைசியாக 1995 மே மாதம் 30ம் திகதி அங்கிருந்து வெளியேறினர், இரண்டாவது கட்டமாக மே 31ம் திகதி முற்றாக வெளியேறினர்.

தற்சமயம் வாகரையில் படையினர் நிலைகொண்டுள்ளனர். அதேவேளை படையினர் முன்னர்-1995ம் ஆண்டு காலப்பகுதியில் நிலைகொண்டிருந்த முக்கியத்துவம் வாய்ந்த இடங்களான காயாங்கேணிப்பாலம், மாங்கேணி, கஜூவத்த, மற்றும் பனிச்சங்கேணி ஆகிய இடங்களிலும் தற்காலிகமாக நிலைகொண்டுள்ளனர்.

இதனிடையே வாகரையில் படையினர் நுழைந்து கொண்டதும் பெரியளவான எதிர்ப்புகள் எதனையும் காட்டாத புலிகள், தற்சமயம் அந்தப் பகுதியில் பதிலடிக்குத் தயாராவதாக சொல்லப்படுகிறது. புதிதாகப் பயிற்சி பெற்ற புதிய அணியொன்று தாக்குதலுக்குத் தயார்படுத்தப்படுவதாக தகவல்கள் கூறுகின்றன.

## சாவடியில் சோதனை –மக்கள் படும் வேதனை!

மட்டக்களப்பு-பதுளை வீதி-செங்கலடியில் இருந்த புளொட் இயக்க முகாமும், இராணுவ முகாமும் மே 24ம் திகதி புலிகள் இயக்கத்தினரின் தாக்குதலுக்குள்ளானது தெரிந்ததே.

அத்தாக்குதலின் பின்னர் பதுளை வீதிப் போக்குவரத்தைப் படையினர் சில நாட்களுக்குத் தடைசெய்திருந்தனர். தற்சமயம் அவ் வீதி பொதுமக்களின் போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளது. ஆயினும் புலிகளின் வசமுள்ள மேற்படி பதுளை வீதியிலிருந்து நகருக்கு வரும் பொது மக்களில் வயோதிபர், நோயாளிகள், பெண்கள், கர்ப்பவதிகள், சிறு குழந்தைகள் என்போர் தயவு தாட்சண்யமின்றி கொதிக்கும் வெய்யிலில் நீண்டநேரம் நிற்க வைக்கப்படுவதாக அப்பகுதிப் பொது மக்கள் வேதனை தெரிவிக்கிறார்கள்.

தங்களை மணிக்கணக்கில் கொதிக்கும் வெய்யிலில் நிறுத்தி வைக்குமளவுக்கு சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது, வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் பழிவாங்கல் என்று மக்களால் வேதனை தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு முன்னர் கறுத்தப்பாலம் சோதனைச் சாவடியில் இந்தவித நெருக்கடிநிலை இருந்ததில்லையென்றும் மக்கள் கூறுகின்றார்கள்.

இது ஒருபுறமிருக்க, செங்கலடி- பதுளை வீதியால் செல்லும் வாகனக்காரர்கள் மீதும் தாக்குதலின் தாக்கம் தெரிகிறது. ஒவ்வொரு வாகனக்காரரும் ரூபா 550/= பெறுமதிக்கு சீமெந்தையும் மற்றும் கேட்கப்படும் பொருட்களையும் வாங்கித் தருமாறு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்கள். தாக்குதலின்போது இடிபாடுகளுக்குள்ளான தமது கட்டடங்களைச் செப்பனிடவே சீமெந்து பெறப்படுவதாக அறியப்படுகிறது. ●

## இராணுவ லொறி குடைசாய்ந்தது

மட்டக்களப்பு-வாகரையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைக்காகக் கொண்டு வரப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிப்பொருட்களும் நிறைந்த இராணுவ லொறிகளிலொன்று வீதியிலிருந்து விலகி பல்முறை குடைசாய்ந்து விபத்திற்குள்ளானது.

கொழும்பு-மட்டக்களப்பு நெடுஞ்சாலையிலுள்ள புணானையில் ஜூன் 21ம் திகதி இவ்விபத்து இடம்பெற்றது. லொறியிலிருந்த ஆறு படைவீரர்கள் பலத்த காயங்களுக்குள்ளானார்கள். அதிஷ்டவசமாக வாகனத்திலிருந்த குண்டுகள் ஏதேனும் அமுக்கத்தினால் வெடிக்காமல் இருந்தது ஆச்சரியத்திற்குரியது. அவ்வாறு விபத்து நேர்ந்திருந்தால் பாரிய சேதங்கள் ஏற்பட்டிருக்கும் என்று படை அதிகாரியொருவர் சொன்னார்.

## திட்டமிட்ட குடியேற்றம்–திருமலையில் முயற்சி

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை நகர எல்லைக்குள் அமைந்துள்ள தில்லைநகர் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த நான்கு ஏக்கர் காணி அரசால் சுவீகரிக்கப்பட்டு மீனவர் குடியேற்றத் திட்டம் அமைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சிக்கு அப்பகுதி மக்களிடமிருந்து பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன.

கிருஷ்ணா படமாளிகைக்குப் பின்புறமாக உட்துறைமுக வீதியை அண்டிய நிலப்பரப்பே இவ்வாறு சுவீகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இங்கு வாழும் சுமார் முன்னூறு தமிழ், சிங்கள,முஸ்லிம் குடும்பங்கள், நீரியல் வளத் துறை அமைச்சருக்கு- சகலரும் கையெழுத்திட்ட மகஜர் மூலம் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளன. ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆகியோருக்கும் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

மேற்படி கடிதத்தில் "நாங்கள் முப்பது வருடங்களுக்கும் கூடுதலாக மூன்று இன மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம். இந்த நிலையில் எங்களை அகற்றிவிட்டு மீனவர் குடியேற்றம் என்ற பெயரில் வெளியாரைக் குடியமர்த்த முயல்வது நீதியான செயலாகாது," என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பாரிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் ஒன்றுக்கே முயற்சிகள் நடப்பதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே இப்பகுதி மக்களைக் குடியெழுப்புவதற்கும் பலரால் பலதடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மக்களது பலத்த எதிர்ப்பால் அவைகள் கைவிடப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

# தொண்டா ஆடும் நாடகம்

## செல்வாக்கை தக்கவைக்கக் கூட்டு

**இ.தொ.காவுடன் இணையப் போகும் சிறிய அமைப்புகளுக்கு ஓர் உருக்கமான வேண்டுகோள்.**

அதிகாரத்தை தன்வசம் தக்கவைத்துக் கொள்வதற்காக திரு. தொண்டமானும் அவரது சகாக்களும் ஆடும் நாடகத்தில் தயவு செய்து விழுந்துவிடாதீர்கள். பிரதேச சபைகளில் அவர்கள் தோல்வி கண்டது சகலரும் அறிந்த விடயம். இப்போது மலையகப் பகுதிகளில் முக்கியமாக தமிழ் பேசும் மக்களிடையே இ.தொ.காவின் செல்வாக்கு-சொல்வாக்கு குறைந்துவருகிறது.

தான் செருப்பை வைத்து ஒட்டு போடச் சொன்னாலும் மலையக மக்கள் ஒட்டுபோடுவார்கள் என்ற காலம் மலையேறிவிட்டது. அதை திரு.தொண்டமானும் சகாக்களும் நன்கு அறிவர்.

கௌரவ அமைச்சரின் வெகுசன தொடர்பு அதிகாரிகள், கோயில்களுக்கு ஒதுக்கப்பட்ட சிமெந்தியை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் வாங்கி என்ன செய்தனர் என்பதும் மக்களுக்குத் தெரியும்.

தனது செல்வாக்கை நிருபிப்பதற்காகவே இப்போதைய கூட்டு, நாடகம், தனித்துப் போட்டியிட்டால் அங்கத்தவர் தொகை குறையலாம். சேர்ந்து போட்டியிட்டால் உங்கள் வாக்குகள் அவர்களின் மொத்த வாக்குகளுடன் சேரும்.

உதாரணமாக கௌரவ கந்தையா அவர்கள் 1994 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு பின்வருமாறு வாக்குகளைப் பெற்றார். அதேபோல் திரு.இராமையா அவர்களும் பெற்றார்கள். இருவரும் பொதுசன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்டனர். பட்டியல் இதோ:

வேறு, அமைச்சர் பதவி போன்ற அதி இலாபகரமான பதவிகள் வந்தால் தாங்கள் சுருட்டிக் கொள்வார்கள்.

ஆகவே கௌரவ தொண்டமான் ஆடும் நாடகத்தில் பகடைக்காய்கள் ஆகிவிடாதீர்கள். இவ்வளவு காலமும் சமுதாயத்தில் இல்லாத அக்கறை இப்போது மட்டும் ஏன் வந்தது? முதலாவது மாகாணசபை தேர்தலில் இப்படிச் சேர்ந்து போட்டியிட்டிருக்கலாம். அந்நேரத்தில் ஒருங்கிணைப்பைப் பற்றி கதைத்தார்களா? அப்போதைய காலகட்டத்தில் திரு.தொண்டமானின் செல்வாக்கு கொடிகட்டிப் பறந்தது. அதனால் சிறிய அமைப்புகளின் மேல் அக்கறை கொள்ளவில்லை.

இப்போது அவர்களின் அதிகாரம் சிதையும் கட்டத்தில் இருக்கிறது. இவ்வளவு காலத்தில் மலையகத்திற்கு ஏதாவது செய்திருக்கிறார்களா? நீங்களும் அரசியல்வாதிகள் தான். சற்று சிந்தித்துப் பாருங்கள்.

கேட்டால், "பிரஜா உரிமை வாங்கி கொடுத்தோம்" எனக் கூறுகிறார்கள். இ.தொ.கா. அரசியலை சொந்த நலனுக்காக பாவித்துக் கொண்டு இருக்கிறது. இனியும் பாவிக்கும் என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

நீங்கள் சிறிய கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து போட்டியிடுங்கள். இன்று இ.தொ.கா.மேல் உள்ள நம்பிக்கை மக்கள் மத்தியில் இல்லாமல் போய்விட்டது. ஆகவேதான் திரு. தொண்டமான் தான் ஒரு அரசியல் சாணக்கியவாதி என காட்டுவதற்காக உங்களை எல்லாம் ஒன்று சேர்க்கிறார். மயங்கிவிடாதீர்கள்! எங்கள் எதிர்காலத்தை பாழ் படுத்திவிடாதீர்கள்.

இ.தொ.கா.வின் அரசியல் ஏமாற்றுக்களுக்கு வேலை நிறுத்தத்தை பாதியில் முடித்ததே தக்க உதாரணமாகும்.

| | தபால் | நுவரெலியா | கொத்மலை | வவுனகுளகந்த | வலப்பனை | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| திரு கந்தையா | 37 | 8249 | 328 | 172 | 322 | 9108 |
| திரு இராமையா | 56 | 6919 | 739 | 131 | 193 | 8035 |

ஆகவே, நீங்கள் சுயேச்சையாக போட்டியிடினும் வெற்றி வாய்ப்பு உள்ளது. நீங்கள் அவர்களுடன் சேர்ந்து போட்டியிட்டால் உங்களின் வாக்குகள் அவர்களின் மொத்த வாக்குகளுடன் சேரும். உங்கள் இரு கட்சிகளுக்கும் ஒரு அங்கத்தவர் மாத்திரமே கொடுப்பார்.

இன்று மலையக மக்களும், இளைஞர்களும் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். இதனை உணர்ந்துதான் சிறிய அமைப்புக்களைத் துணைக்கு இழுக்கிறார்.

உங்கள் வாக்காளன்,
பி.ஏ. கந்தையா.

# கோயில் கட்டும் சிங்களப் படைவீரர்!

(மட்டக்களப்பு நிருபர்)

தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் விளைவுகளால் விரோத உணர்வுகள் விரிசலடைந்து வரும் இவ்வேளையில், ஆங்காங்கே இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்ட சமரச சன்மார்க்க சிந்தனைகளும் தலைகாட்டுகின்றன.

பெரேரா எனும் சிங்களப் படை அலுவலர் ஒருவர் தீவிர பிள்ளையார் பக்தர். இவர் மட்டக்களப்பு- பிள்ளையாரடி படை முகாமில் இருந்தபோது அவ்விடத்தில் அவரது முழுமுயற்சியினால் ஒரு சிறிய பிள்ளையார் கோயிலைக் கட்டி முடித்தார். பின்னர் அதைக்கோலாகலமாகத் திறந்தும் வைத்துள்ளார். தற்சமயம் சோதனை முடித்து அவ்வழியால் செல்லும் பயணிகள் அந்தக் கோயிலிலும் வழிபடுகிறார்கள். அக்கோயிலின் உபயம் பெரேரா 'ஆமி' என்று எழுதப்பட்டுள்ளது.

இப்பொழுது இந்தப் படை அலுவலரான பெரேரா மாவடிவேம்புக்கு இடமாற்றலாகியுள்ளார். எனினும் அவர் தனது பக்திப் பரவசத்தைக் கைவிடவில்லை. அங்கும் ஒரு சிறிய பிள்ளையார் கோயிலை அமைத்து வருகிறார். காலையில் எழுந்ததும் பூப்பறித்துப் பிள்ளையாரைத் தொழுதுவிட்டே கடமைக்குச் செல்கிறார். எதுவித விரோத வித்தியாச மனப்பான்மையுமில்லாத இந்தப் படை வீரரின் பக்திப் பரவசத்தை மக்கள் தினமும் கண்டுகொள்ளத் தவறுவதில்லை.

# தடைநீக்கமில்லை!

(மன்னார் நிருபர்)

வெளியிடங்களில் இருந்து மன்னாருக்கு கொண்டுவரப்படும் மின்சார சாதனங்களுக்கு பின்பற்றப்பட வேண்டிய பாஸ் நடைமுறை 1991ஆம் ஆண்டு முதல் இருந்து வருகின்றது.

மின்சாரத்தில் இயங்கும் தொலைக்காட்சி, வானொலி, அயன்பொக்ஸ், மற்றும் கமரா போன்ற பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு ஏழு வருடங்களாகியும் இதுவரை நீக்கப்படவில்லை.

ஆனால் இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொதுமக்கள் கொண்டுவரவேண்டிய பொருட்கள் மன்னார் நகரில் தாராளமாகக் கிடைக்கின்றன.

கொழும்பு போன்ற இடங்களிலிருந்து குறைவான விலையில் கொண்டுவர வேண்டிய இப்பொருட்கள் கூடுதல் விலைகொடுத்து மன்னாரில் வாங்க வேண்டியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சாதாரண கமரா கூட பாஸ் இன்றி கொண்டுவர முடியாது. அவ்வாறு கொண்டு வரப்படும் பொருட்கள் தந்திரிமலை சோதனைச் சாவடி அல்லது மன்னாரில் உள்ள சாவடிகளில் பறிமுதல் செய்யப்பட்டு விடுகின்றன.

இதேவேளை வவுனியாவுக்கு கொண்டு செல்ல வேண்டிய பொருட்கள் மட்டுப்படுத்தப்படவில்லை.

# சொந்தத் தேவைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கஞவாஞ்சிக்குடி பிரதேசத்தில் நீர்ப்பாசன திணைக்களத்தின் செயற்பாடு மிக முக்கியமானதாக அமைகிறது. கடந்த வன்செயலில் அழிந்துபோன இத்திணைக்களம் களுவாஞ்சிக்குடியில் மீண்டும் அழகாக கட்டியெழுப்பப்பட்டு காட்சி தருகின்றது. ஆனால் இக்கட்டடம் எவரும் குடியிருக்காமல் பாழடையும் நிலையிலுள்ளது.

அலுவலகத்திற்கு மட்டக்களப்பிலிருந்து வாகனத்தில் (ஜீப்) ஒரு அலுவலர் 10.00 மணியளவில் வந்து மீண்டும் 2.00 மணிக்கு கிளம்பிச் செல்கிறார். பொறியியலாளர் கட்டாயம் இருக்க வேண்டும் என்பதற்காக கட்டப்பட்ட கட்டடம் அது. நீர்ப்பாசன வேலைகள் ஒழுங்காக கவனிக்கப் படுவதில்லை. கூடுதலாக தங்கள் சொந்தத் தேவைகளே கவனிக்கப்படுகின்றன.

செ.பாஸ்கரலிங்கம்.

# ரூபராணியின் கதைகள்

## தொகுப்பு வந்துவிட்டது!

ரூபராணி ஜோசப் எழுதிய சிறுகதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. 'ஒரு வித்தியாசமான விளம்பரம்' என்ற பெயரில், அழகான முகப்போவியம், மற்றும் கட்டமைப்போடு வெளியாகியுள்ளது. 'துரைவி' பதிப்பக துரை விஸ்வநாதன் இதனைப் பதிப்பித்துள்ளார். சிரத்தையான முயற்சி தெரிகிறது.

தினமுரசில் ரூபராணி எழுதிய 40 கதைகள் இத் தொகுப்பில் தடம்பதித்துள்ளன. முகப்போவியத்தை அழகாக வடிவமைத்திருப்பவர் ஸ்ரீதர் பிச்சையப்பா.

ரூபராணியின் முதலாவது நூலான 'ஏணியும் தோணியும்' தேசிய சாகித்திய விருது பெற்றது. இது ரூபராணியின் இரண்டாவது படைப்பு.

பெறவிரும்புவோர் தொடர்புகொள்க:
85,ஸ்ரீ இரத்தினசோதி சரவணமுத்து மாவத்தை.
கொழும்பு-13.
தொ.பே.இ: 331596

# போனது திரும்பவில்லை!

(மன்னார் நிருபர்)

எருக்கலம்பிட்டி பிரதான அஞ்சலகத்தில் பொருத்தப்பட்டிருந்த தொலைத்தொடர்புக் கருவிகளை 14.09.97 அன்று படையினரின் உதவியுடன் டெலிகொம் அதிகாரிகள் கழற்றிச் சென்றனர்.

தள்ளாடி இராணுவ முகாமில் பொருத்தப்படுவதற்காகக் கொண்டு செல்லப்பட்ட இக்கருவிகள் இதுவரை மீண்டும் கொண்டு வந்து பொருத்தப்படவில்லை.

சூரிய சக்தியினால் இயங்கும் இத் தொலைபேசி சாதனம் நினைத்தவுடன் கொண்டு செல்லப்படுவதும், நினைத்தால் மீண்டும் இங்கு பொருத்தி விடுவதும் சர்வ சாதாரணமாகிவிட்டது.

டெலிகொம் நிறுவனம் வேண்டுமென்றே இந்த அலுவலகத் தொலைத் தொடர்பு கருவியை கழற்றிச் செல்வதாக இப்பகுதி மக்கள் கூறுகின்ற அதேவேளை, இராணுவத்தினரின் பாவனைக்காகவே இது கொண்டு செல்லப்படுவதாக டெலிகொம் அதிகாரிகள் கூறுகின்றனர்.

1992ம் ஆண்டுக்குப்பின் மிகவும் வறிய மக்கள்-குறிப்பாக பாமர மக்களே இக் கிராமத்தில் வசித்து வருவதால் தட்டிக் கேட்க எவருமில்லை என்ற துணிவிலேயே இச்சாதனம் அடிக்கடி இடம்மாறுகின்றது. தற்போது அஞ்சலகம் வாடிக்கையாளர்களின் தொலைபேசித் தேவையை நிவர்த்திக்க முடியாமல் கவலைக்கிடமாக காட்சி தருகிறது. பெருத்தப்படுமா தொலைத் தொடர்புக் கருவிகள்?


விளம்பரப் பகுதி

## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை
**கீழ்க்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்**

**ஓட்டமாவடி ஜூலை 2ம் திகதி மட்டும்**
Dr. முகைதீன் டிஸ்பென்செரி ஓட்டமாவடி
T.P. 065-57345

**கல்முனையில் ஜூலை 4,5ம் திகதிகளில்**
T.M.M. பாமசியிலும் T.P. 065-29329
மற்றைய நாட்களில் Dr. Arumugam
No. 33, Tissa Weerasingam sq, Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்

**வவுனியாவில் ஜூலை 11,12ம் திகதிகளில்**
வவுனியாவில் 2ம் குறுக்குத் தெரு ஞான வைரவர் கோவில் வீதி,
VANNI INNல் சந்திக்கலாம் T.P. 024-22074 ல் முன்கூட்டியே பதிவு செய்வும்.

**கொழும்பில் ஜூலை 19 முதல் 26ம் திகதிவரை**


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**கிர்ஷிக்கா சுந்தரலிங்கம் 02.07.1998**

புளத்சிங்கள, கோவில் வீதியில் வசிக்கும் சுந்தரலிங்கம்-சுசிலா தம்பதியினரின் செல்வப் புதல்வி கிர்ஷிக்கா தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் 02.07.1998 அன்று வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அம்மா-அப்பா, தாத்தாமார், பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார் மற்றும் மத்துகம-பந்தியில் வசிக்கும் பாட்டி, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணன்மார், அக்காமார், மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.


## அரிய வாய்ப்பு! கம்பியூட்டர் வகுப்புக்கள்!

**D.S. COMPUTER STUDIES**


எளிமையான முறையில், குறுகிய காலத்தில், நியாயமான கட்டணத்தில் கம்பியூட்டர் கற்க விரும்புகிறீர்களா?
நீங்கள் விரும்பும் பாடங்களை, விரும்பிய நேரத்தில் கற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**இல. 06, நீர்கொழும்பு வீதி, வத்தளை.**

குறிப்பு: 260ம் இலக்க பஸ்ஸில் வரலாம். நீர்கொழும்பு வீதியிலிருந்து ஹெய்கித்த வீதிக்கு திரும்பும் முதலாவது பஸ்தரிப்புக்கு முன்பாக எனது நிலையம் அமைந்துள்ளது.

## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, பாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**
**P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

## NISACO STEEL FURNITURE



Special Discount on This Month Only
Open on Every Sunday 8.am to 8.pm

**நிசாகோ இன்டஸ்ட்ரீஸ்**

204, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவல. Tel: 074-201727 Fax: 561367
(Opposite Buddagosha Vidyalaya)
FACTORY & SHOW ROOM
391/1, Millagaha Estate, Aturugiriya Road, Hokandara North, Hokandara. Tel/Fax: 561367
(Near the telecommunication Exchange Hokandara)

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218

## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை
**SHAKTHY SARAVANA,**
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை
**SHAKTHY SARAVANA,**
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

நன்மை பயப்பவை மட்டுமே செய்துதரப்படும்.

## RAJA VAJEEKARANA (Rasayana) LEGIUM
## ராஜா வஜீகரண (ரசாயன) லேகியம்



(முஸ்லீம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)

சலாமிசிரி, பதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுணையானதுஸ்திரீ புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி சுறுசுறுப்பையும் தேக காந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும். மூலச் சூட்டைப் போக்கும். இருமல் மார்பு இடுப்புவலி. கால் கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும், சிறுவர் சிறுமியருக்கும் சிறந்தது.

நாள்பட்ட பீனிசம், இளைப்பு இருமல் மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம், பத்தியமில்லை.

**500 gram 300/= 250 gram 150/=**
வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

**Ayur Dr. K. ASivasubramaniam**
**முருகானந்த வைத்தியசாலை**
G/02. கொழும்பு மத்திய சுப்பர் மார்கெட்,
மீன்கடை மேல் (நிலமாடி) கொழும்பு - 11




படிப்பகம்

www.padippakam.com

# கைமாறும் – கெரில்லா பிரதேசங்கள்

கொழும்பில் சார்க் உச்சி மாநாட்டை நடத்தி முடிக்க அரசு ஒற்றைக் காலில் நிற்கிறது.

மாநாடு நெருங்கும்போது கொழும்பில் உள்ள தமிழ் மக்களை சந்தேகப் பார்வைகளும், கைதுகள் போன்ற நெருக்கடிகளும் நெருங்கப் போகின்றன.

கொழும்பு மாநகரத்தை பாதுகாப்பு வலயமாக ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார். இதுவும் உச்சி மாநாட்டு பாதுகாப்புக்கான முன்னேற்பாடுகளில் ஒன்றுதான்.

பாதுகாப்பு வலயத்திற்குள் தமிழ் மக்கள் நிலை கவலைக்கிடமாக மாறாவிட்டால் சரிதான்.

சார்க் உச்சி மாநாட்டை நடத்தி முடிப்பது மூலம் வெளியுலகிற்கு இலங்கையின் தலைநகரம் பாதுகாப்பாக இருக்கிறது என்ற செய்தியை தெரிவிக்கலாம். அதன் ஊடாக முதலீட்டாளர்களை அச்சமின்றி வரவைக்கலாம் என்பது அரசின் நோக்கம்.

உள்நாட்டில் தேர்தல் தோல்வியால் தனது இமேஜ் பாதிக்கப்படும் என்று பயந்து மாகாணசபைத் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு படாதபாடுபடும் அரசு, அதற்கு கூறும் காரணம் பாதுகாப்புப் பிரச்சனை.

ஆனால் சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு கொழும்பில் பாதுகாப்பு கொடுப்பது என்பது பத்து மாகாண சபைத் தேர்தல்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு ஈடானது.

எனவே, சார்க் உச்சி மாநாட்டை நடத்த முன்வந்துள்ள அரசாங்கம், மாகாண சபைத் தேர்தல்களை நடத்த பாதுகாப்பு பிரச்சனையை காரணம் கூறுவது முன்னுக்குப்பின் முரணாக உள்ளது.

இன்னொரு விடயம்: வடக்கு-கிழக்கில் மாகாண சபைத் தேர்தலையோ, வேறு தேர்தல்களையோ நடத்தும்போது இருக்கக்கூடிய பாதுகாப்புப் பிரச்சனைகளுடன் ஒப்பிட்டால், தெற்கில் தேர்தல் நடத்தும் போது ஏற்படும் பாதுகாப்புப் பிரச்சனைகள் பெரிதல்ல.

வடக்கு-கிழக்கில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் மட்டுமன்றி, ஒவ்வொரு வேட்பாளரும் புலிகளின் இலக்குத்தான்.

அதனால் கட்சித் தலைவர்களுக்கு மட்டுமன்றி வேட்பாளர்களுக்கும் பாதுகாப்பு தேவை. ஒவ்வொரு பொதுக் கூட்டத்திற்கும் பாதுகாப்பு தேவை. பின்னர் தேர்தல் தினத்தில் வாக்குச் சாவடிகளுக்கு பாதுகாப்பு தேவை. இவ்வாறு பலவிதமான பாதுகாப்பு பிரச்சனைகள் எழும்.

ஆனால், வடக்கு-கிழக்குக்கு வெளியே சிறீலங்கா என்று புலிகளால் அழைக்கப்படும் பகுதிகளில் தேர்தல்கள் நடப்பதை புலிகள் இடையூறு செய்ததும் கிடையாது. செய்யப் போவதும் கிடையாது.

எனவே, வேட்பாளர்கள் பிரசாரம் செய்யவோ, கூட்டம் நடத்தவோ, வாக் களிப்பு நாளில் பாதுகாப்புக் கொடுக்கவோ வழக்கத்தைவிட அதிகமான பொலிசார் தேவைப்படமாட்டார்கள். தற்போதுள்ள பொலிஸ் பலமே போதும்.

தென்னிலங்கை தேர்தல்களைப் பொறுத்தவரை முக்கிய பிரமுகர்களே புலிகளின் இலக்காக இருப்பர். ஜனாதிபதி, பிரதிபாதுகாப்பு அமைச்சர் போன்றோர் கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கே பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும்.

ஜனாதிபதியும், பிரதி பாதுகாப்பு அமைச்சரும் தற்போதும் புலிகளின் குறியில்தான் உள்ளனர். அதற்காக தற்போது அவர்கள் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் இருக்கவில்லை. அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்படாமலும் இல்லை. மாகாண சபைத் தேர்தல் என்பதால் ஜனாதிபதி சகல கூட்டங்களிலும் கலந்துகொள்ள வேண்டியதும் இல்லை.

தென்னிலங்கை தேர்தல்களில் புலிகளின் தந்திரோபாயம் என்ன? ஆட்சியில் உள்ள அணி அசுர பலம் பெறுவதை தடுப்பதுதான் புலிகளின் நோக்கமாக இருக்கும்.

அதனை நிறைவேற்ற முக்கிய பிரமுகர்களை தீர்த்துக்கட்டுவது, அரசின் கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்தக்கூடிய பாரிய தாக்குதல்களை நடத்திக் காட்டுவது போன்ற தந்திரோபாய நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் மாகாணசபைத் தேர்தல் நடக்கிறதோ இல்லையோ நாடெங்கும் பாரிய தாக்குதலை எதிர்பார்த்துக் கொண்டுதான் பாதுகாப்புத் தரப்பினர் இருந்தாக வேண்டியுள்ளது.

எனவே வடக்கு-கிழக்கு தவிர்ந்த மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதால் தற்போதுள்ளதைவிட புதியதும் பெரியதுமான பாதுகாப்பு பிரச்சனைகள் எவையும் ஏற்பட்டு விடப்போவதில்லை.

ஆக, சார்க் உச்சி மாநாட்டை இங்கு நடத்துவதன் மூலம் வெளியுலகில் தன் 'இமேஜை' உயர்த்திக் காட்ட நினைக்கும் அரசு, உள் நாட்டில் தனது தேர்தல் வெற்றிக்கு காலம் கனியும் வரை மாகாணசபைத் தேர்தலை ஒத்தி வைக்க நினைக்கிறது என்பதே உண்மை. உண்மையிலும் உண்மை.

மாகாணசபைத் தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்றெல்லாம் தினசரிகள் கேள்வி எழுப்பி வருகின்றன. நடக்க வேண்டிய திகதியில் நடத்த அரசு தயாராக இல்லை என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது!

சார்க் உச்சி மாநாட்டை நடத்தி முடித்துவிட்டால், வெளியுலகில் மேலும் நிதி உதவிகளைப் பெறலாம், இராணுவ தளபாட உதவிகளை நாடலாம் என்பதும், அதனை வைத்து களத்தில் ஒரு கரைகாணலாம் என்பதும் அரசு போட்டுள்ள கணக்கு.

உச்சிமாநாட்டை நடத்த தேதி குறித்து விட்டால் பின்னர் தலைநகரம் பதற்றத்தின் உச்சியில்தான் இருக்கவேண்டும்.

சுதந்திர தினத்தை நெருங்கும்போது தலதா மாளிகைக்குள் குண்டு லொறி புகுந்தது. உச்சி மாநாட்டை நெருங்கும்போது எந்த லொறி எங்கு வருமோ என்று தலைநகர் 24 மணிநேர உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும்.

உச்சிமாநாட்டு தலைவர்களுக்கு புலிகளால் ஆபத்து எதுவும் ஏற்படமாட்டாது என்பது தெரிந்த விஷயம். ஆனால் அரசு அதனை கூறி புலிகளுக்கு நல்ல பெயர் தேடிக் கொடுக்காது. எனவே தலைவர்களுக்கு பலத்த பாதுகாப்பு கொடுப்பதுபோல காட்டி 'புலிகள் பயங்கரமானவர்கள்' என்ற எண்ணத்தை வெளிநாட்டு தலைவர்களுக்கும் ஏற்படுத்துவர்.

முன்புபோல பொதுமக்களை இலக்கு வைத்து புலிகள் குண்டுத் தாக்குதல் நடத்துவதில்லை. அவ்வாறு ஒரு தாக்குதல் நடக்குமானால் சார்க் நாட்டு தலைவர்கள் மத்தியில் புலிகளின் மீது வெறுப்பை ஏற்படுத்த அதனை பயன்படுத்திவிடும் அரசு.

ஆனால் புலிகள் இப்போதெல்லாம் பொது மக்கள் பாதிக்கப்படாதளவுக்கு தாக்குதல் நடத்துவதாக சிங்கள மக்களே பேசிக் கொள்ளும் அளவுக்கு இலக்குகளையும், தாக்குதல் நடத்தும் தினத்தையும் புலிகள் தெரிவு செய்து வருகின்றனர்.

உச்சிமாநாடு நடைபெறும் நாட்களில் தாக்குதல் நடப்பதைவிட, மாநாடு நெருங்கும் நாளில் தாக்குதல் நடத்தக்கூடும். அல்லது மாநாடு நடத்தி முடித்த களிப்போடு அரசு உள்ளபோதும் குண்டு வாகனங்கள் வெடிக்கக் கூடும்.

எனவே, உச்சி மாநாடு நடைபெறும் நாட்களில் மட்டுமல்ல அதற்கு முன்னரும், பின்னரும்கூட பதற்றத்தின் பிடியில்தான் தலைநகரம் சிக்கி இருக்கப்போகிறது.

●●

மாங்குளத்தின் இருபுற உட்பாதைகளால் சுற்றிச் சுழன்று மாங்குள நகரை முற்றுகையிடும் வேகத்தில் முன்னேறிய 'ஜயசிக்குறுய்' படையினரால் இதுவரை இலக்கை எட்ட முடியவில்லை.

புலிகளின் மோட்டார் ஷெல்கள் படையணிகளை நோக்கி சகல முனைகளிலும் பறந்து வருகின்றன.

கடந்த வாரமும் விமானப் படையினருக்கு இழப்பு. எம் 24 ரக ஹெலி பறந்து வந்து வவுனியா நகரில் தரையிறங்க முன்பே தீப்பற்றி எரியத் தொடங்கி விழுந்து நொறுங்கியது.

கள முனையில் இருந்தே இக் ஹெலி வேகமாக பறந்து வந்தது என்று கூறப்படும் வேளையில் 'இது விபத்தே' என்று படையினர் கூறியுள்ளனர். அதனால் புலிகள் கூறிய தகவலை வெளியிட தணிக்கை இடமளிக்காது.

குறுகிய காலத்தில் மாங்குளத்தில் இருந்து பிரமாதமான செய்திகள் கிடைக்காத குறையை ஈடுசெய்யும் விதமாக அரச ஊடகங்களில் கிழக்கு களமுனைச் செய்திகள் தலைப்புச் செய்திகளாக கூறப்படுகின்றன.

கிழக்கில் புலிகள் மரபுப் படையணியாக, மரபுச் சண்டை ஒன்றுக்கு தயாரில்லை. முழுக்க முழுக்க கெரில்லா உத்திகளையே கையாளுகின்றனர்.

எதிரி பலமாக உள்ளபோது விலகிவிடு என்பது கெரில்லா உத்தி. எதிரியை தடுத்து நிறுத்தி பாரிய சண்டையில் ஈடுபடுவது மரபுப் போர் முறை.

ஆட்பலம், பூகோள நிலை, கனரக ஆயுத பலம் போன்றவை மரபுப்போர் முறைக்கு தேவை.

தவிர, கட்டாயம் தக்கவைத்தே ஆக வேண்டும் என்று கட்டாயமில்லாதபோது, ஆட்பலத்தை தக்கவைக்க அகன்று விடுவதும் கெரில்லாக்களின் உத்தி.

கெரில்லா தளம், தளப் பிரதேசம் என்பவை வெவ்வேறு குணாம்சம் கொண்டவை.

கெரில்லா தளம் என்பது அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். எதிரி முன்னேறும்போது கெரில்லாக்கள் அகன்றுவிடுவர். அதனையே கெரில்லா தளம் அல்லது கெரில்லாப் பிரதேசம் என்று அழைப்பர்.

பிரதான தளம் என்பது கெரில்லாத் தளத்தை விட உயர்ந்தது. அங்கு நிரந்தர இராணுவமும் இருக்கும். எதிரியுடன் மரபுப் போர் நடத்தக் கூடியதாக விளங்கும். சமருக்கான விநியோக மையம் மற்றும் கட்டளைப் பீடம் போன்றவையும் பிரதான தளத்திலேயே இருக்கும்.

புலிகளைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம் முன்னர் பிரதான தளமாக இருந்தது. தற்போது வன்னி பிரதான தளமாக இருக்கிறது. ஏனைய பகுதிகளில் புலிகளின் அணிகள் நிலை கொண்டிருந்தாலும் அவை அடிக்கடி கை மாறக்கூடிய கெரில்லா பிரதேசங்களாகும்.

கெரில்லா பிரதேசங்களுக்கு உரிய முக்கிய குணம், அது அடிக்கடி கைமாறிக் கொண்டே இருக்கும். அவற்றை தக்கவைக்க கெரில்லாக்கள் அதிக முயற்சி எடுக்கமாட்டார்கள்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் மட்டுமன்றி திருமலை மாவட்டத்தில் மூதூர் போன்ற பகுதிகளிலும், யாழ் குடாநாட்டில் புங்குடுதீவு, நாகர்கோவில் போன்றவையும் புலிகளின் கெரில்லா பிரதேசம் என்று அழைக்கப்படக் கூடியவை. தளப்பிரதேசங்கள் அல்ல.

கெரில்லாப் பிரதேசங்களை மரபுப் படையணிகள் பலப் பிரயோகம் மூலம் கைப்பற்றுவதைவிட, தக்கவைத்தல் என்பதுதான் சவால்.

–□□–

புலிகளின் கப்பல் ஒன்றில் டாங்கி எதிர்ப்பு ஆயுதம் வந்து கொண்டிருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏதோ டாங்கி எதிர்ப்பு ஆயுதம் தற்போது புலிகளிடம் இல்லை என்பதுபோலவும், இனி மேல்தான் வரவேண்டும் என்பதுபோலவும் அந்தச் செய்தி அர்த்தப்படுகிறது.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

தற்போதும் புலிகளிடம் போதிய டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் உள்ளன.

ஆர்.பி.ஜி, மற்றும் கிரனைட் லோஞ்சர், போன்றவை டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள்தான். அவற்றை புலிகள் பயன்படுத்தியும் உள்ளனர்.

டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் பல ரகங்களில் உள்ளன. புலிகளிடம் உள்ள டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் எங்கும் விலை கொடுத்து வாங்கப் பட்டவை அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் இருந்தால் மட்டும் போதாது. டாங்கிகளை நெருங்கவும் வேண்டும் அப்போதுதான் தாக்கலாம்.

இதற்கிடையே மற்றொரு தகவல், சண்டே ரைம்ஸ் வெளியிட்டுள்ளது. மோட்டார்கள் எங்கிருந்து ஏவப்படுகின்றன என்பதைக் கண்டறியும் ராடர் கருவிகளை 2 கோடி 20 இலட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்துள்ளது அரசு.

புலிகள் 81 எம்.எம். மோட்டார்களையே படையினருக்கு எதிராக அதிகம் பயன்படுத்துகின்றனர். இந்த ரக மோட்டார்கள்கூட புலிகள் பணம் கொடுத்து வாங்கியவையல்ல.

இந்த மோட்டார்களில் உள்ள சாதகம் என்னவென்றால், சுலபமாக எடுத்துச் செல்லக் கூடியதும், அதிக சேதம் தரக் கூடியதுமான மோட்டார் இதுதான். 81 எம்.எம். மில்லி மீட்டருக்கு அப்பாற்பட்ட மோட்டார்கள் நகர்த்திச் செல்லச் சற்றுக் கடினமானவை.

81 எம்.எம். மோட்டாரை நிமிஷத்திற்கு நிமிஷம் இடமாற்றி வைத்துக் கொண்டு இருக்கலாம். இலக்குக்கு நெருங்கி வந்தும் ஏவி விட்டு அதே வேகத்தில் அகன்று விடலாம்.

81 எம்.எம். மோட்டார் கனரக படைக்கல வகையைச் சேர்ந்தது அல்ல. கெரில்லாக்களும் பயன்படுத்தக்கூடியவை.

அமெரிக்க விசேஷ கொமாண்டோக்கள் அதிரடி நடவடிக்கைகளுக்கு விரும்பி பயன்படுத்துவது 81 எம்.எம். மோட்டார்கள்தான்.

புலிகளின் பீரங்கிப் படையணியின் முதுகெலும்பாக இருப்பது 81 எம்.எம். மோட்டார்களே. நிமிஷத்துக்கு நிமிஷம் இடம் மாறும் அவற்றை கண்டுபிடிப்பது முடிகிற காரியமா?

நா ர த ர்

## இரண்டாவது சுற்று

விளையாட்டு அலசல் இல்லாவிட்டால் எப்படி? உதைக்க வந்துவிடுவீர்கள். அதனால் சுருக்கமாக.

இரண்டாவது சுற்றில் பிரேஸில் அணியும் சிலியும் மோதின. இரு அணியும் சளைக்காமல் ஆடின. பந்து தலைக்கு மேலாக பறந்து திரிந்தது. அந்தளவுக்கு விறுவிறுப்பு.

பறந்த பந்து மைதான மையத்தில் வைத்து அடிவாங்கி எழுந்து வானில் சுழன்று பறந்து மைதானத்தின் எல்லையில்போய் விழுந்தது.

கோல் போகாமல் தடுத்தார் சிலி கோல் கீப்பர்.

தொடர் விறு விறு ஆட்டத்தில் பிரேஸில் வென்றது. இனி கால்இறுதி. வெற்றி யாருக்கு? கோல் போஸ்ட் ஒரு திசையில் இருக்க வேறு திசையில் பந்தை உதைத்து 'ஷோ'க் காட்டும் அணிகளும் உள்ளன. அவை இறுதி போட்டியில் நுழைவது சந்தேகம்தான்.



## டாங்கி எதிர்ப்பு ஆயுதம்

புலிகள் இயக்க உறுப்பினர் கையில் ஏந்தியிருப்பது கிரனேட் லோஞ்சர். டாங்கிகளை தாக்க வல்லது. இதில் தன்னியக்க ரகமும் உண்டு. அது சற்றுப் பெரியது. அதுவும் புலிகளிடம் இருக்கிறது.

## 81 எம். எம். மோட்டார்





இதுதான் 81 எம்.எம். மோட்டார். குறுந்தூர கள ஆயுதம். ஷெல் ஏவும். பாரம் குறைந்தது. ஆனால் அதிக சேதம் உண்டாக்கக் கூடியது.

இதன் அதிக கூடிய சுடுதூரம் 5 கிலோ மீட்டர்.

படம் ஒன்று: அமெரிக்க விசேஷ கொமாண்டோக்கள் 81 எம்.எம். மோட்டாரை வைத்து பயிற்சி எடுப்பதை காணலாம். படம் இரண்டு: புலிகள் 81 எம்.எம். மோட்டார் அருகில். ●

## அதிரடி அய்யாத்துரை



யாழில் நீலக்கட்சிக்காரரை அழைத்துச் சென்று தட்ட முற்பட, அவர் ஓடியிருக்கிறார். துரத்திச் சென்று சுட்டுள்ளனர். சூடு வாங்கிக்கொண்டும் சுட்டவர்களை துரத்திச் சென்றவர் என்று 'திரில்'லாக கதை கட்டிப்போட்டினம். அந்த நேரத்தில் சூடுபட்டவர் மந்தாரமாகவும் காணப்பட்டாராம். தினமும் மந்தாரமாகவே தென்படுவாராம். ரெண்டு எழுத்தார் ஒரு வாரகாலமாக அந்தப் பக்கம் நடமாடியவையாம்.

இரண்டே இரண்டு பேரைத்தவிர கூட்டான கட்சியின் குட்டிச்சபை பிரதிநிதிகள் யாவரும் கூண்டோடு விலகிவிட்டனர். புதிதாகப் பெயர் கொடுத்த பலருக்கு ரெண்டு எழுத்தார் கடிதம் போட்ட விஷயம் தெரியாதாம். ஊருக்குப் போய் நின்றால்தான் வெளிக்கும்! அம்மையாருடன் சூடுபட்ட 'சிவமும்' பதவியைத் தூக்கி சுழற்றி எறிந்துபோட்டாராம்.

கூட்டான கட்சியினர் அகிம்சைவாதிகள் என்றால், ஏனைய கட்சிக்காரருக்கு சூடு விழும்போது ஏன் பாருங்கோ குரல் கொடுக்காமல் இருக்கினம்? ஏனைய தமிழ்க் கட்சிகள் கூட்டான கட்சியின் மரணச் சடங்கில் முன்னணியில் நின்றவை. கழகத்தினர்தான் வாழைமரம் கட்டுவது முதற்கொண்டு வாகன வசதிவரை செய்து கொடுத்தவை. அதே கழகப் பிரமுகர் பலியானதுக்கும் சரி, வெகுஜன பிரதிநிதி வீடு தாக்கப்பட்டதற்கும் சரி கூட்டான கட்சியினர் மூச்சுக் காட்டவேயில்லைப் பார்த்தியளோ!

யாழ் மகா சபையின் முதற் கூட்டத்திலேயே 'முரசு'மீது புதியவர் மறைமுகச் சாடல் நடத்தினவராம். அது கிடக்க, "ரெண்டு எழுத்தாருடன் அதிகாரத்தரப்பார் பேசவேண்டும்" என்று தீர்மானம் போடவும் விரும்பினவராம். தற்காப்புக்காக அப்படி ஒரு தீர்மானத்தை போட்டு வைத்தால், 'தம்பிமார் கோபப்பட மாட்டினம்', என்று நினைக்கிறாராக்கும். 'படிப்பது தேவாரம், இடிப்பது கோயில்' என்பது கூட தெரியாதளவுக்கு தம்பிமார் இருப்பினம் என்று நினைத்ததுதானே இவை தொன்று தொட்டு விட்டுவரும் தவறு!

மலையக தொண்டரின் அனுபவம் நல்லா வேலை செய்யுது. 'ஐக்கியம்' என்ற பெயரில் தூண்டிலில் இரைபோட்டு சின்ன மீன்களைப் பிடித்திருக்கிறார். பெரிய மீன் அவர்தானே? அப்ப, சின்ன மீன்களின் கதி என்னாகும்? பச்சை அணிக்கு மலைப்பகுதி வாக்குகள் செல்லாமல் தடுக்க, நீல அணியின் ஆசிர்வாதமும் தொண்டரின் முயற்சிக்கு இருக்கிறதாம். இனி மலைப்பகுதி தமிழ் வாக்குகள் தங்களுக்குச் சேராது. பச்சைக்கு போவதைவிட வேறு அணிக்குப் போகட்டும் என்று நினைக்கிறதாம் நீல அணி.

நயினாதீவு திருவிழாவுக்கு சென்றவர்கள் புங்குடுதீவில் பஸ்சில் இருந்து இறக்கப்பட்டு ரெண்டு எழுத்தாரால் கூர்ந்து கவனிக்கப்பட்டவையாம். மீசைகள் இல்லாதவை துருவப்பட்டவையாம். அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டனவாம்.

யாழ்ப்பாணத்தில் பிரதேச சபைத் தலைவர் ஒருவர் தனது காரில் தனது பதவியை எழுதிப் பொறித்தபடி பவனி வந்தவராம். சோதனை அரண்களில் சுலபமாகச் செல்லவும் வசதி. யாழில் கேட்ட வெடிச்சத்தத்தின் பின்னர் அந்தப் பெயர் பலகை போன இடம் தெரியவில்லை!

"மழை சீசனில் ஒருநாள் போட்டிகள் மாட்டப்போகுது" என்று நான் சொன்னதை ஞாபகம் வைத்திருந்து- 'கரிநாக்கு' என்று சில கிரிக்கெட் பிரியர்கள் திட்டித் திட்டி மடல் அனுப்பியிருக்கினம். அணிகள் மோதினால்தான் ஸ்கோர் சொல்ல வேணும் என்று சட்டமோ? ஒரு கணக்கை கற்பனையாகச் சொல்லிக்கொண்டு அணிகள் மோதும் காட்சியையும் கற்பனையில் இரசிக்க வேண்டியதுதானே! என்ன புரியுதுதானே!

தேனகத்தில் இருந்து பழைய நண்பர் கடிதம் போட்டிருக்கிறார். மீன்பிடிக்கலாம் என்று போனால் மீன்கள் எல்லாம் ஆழ் கடலுக்குள் போய்விட்டனவாம். மனுசி கோபப்படுவா என்று 'ஐந்து மீன் பிடித்தனான், பத்து மீன் பிடித்தனான்' என்று சொல்லிப் போட்டாராம். நழுவுவதும் பின்னர் துள்ளிப்பாய்ந்து விளையாட்டுக் காட்டுவதும் மீன்களின் கலையல்லோ?

இவ்வாரப் பொன்மொழி:

"நீ தைரியமான மனிதன்!
உன்னால் சாதிக்க முடியும்!
இதற்கு மேல்
ஒருவரை வாழ்த்த
வேறு வாசகம் தேவையில்லை!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

மட்டக்களப்பில் ஆரம்பமான இரண்டாம் கட்ட ஈழப்போர் வடக்கு-கிழக்கு எங்கும் பரவியது.

வடக்கு-கிழக்கில் பொலிஸ் நிலையங்கள் பல புலிகளால் முற்றுகையிடப்பட்டு அங்கிருந்த பொலிசார் அனைவரும் புலிகளால் கொண்டு செல்லப்பட்டனர்.

பொலிஸ், இராணுவத்தில் பணிபுரியும் அனைவரும் தம்மிடம் சரணடைய வேண்டும் என்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட புலிகளின் தளபதி கருணா அறிவித்தார்.

அந்த அறிவிப்புடன் கிழக்கில் புலிகளால் பிடிக்கப்பட்ட பொலிசாரில், ஜிகாத் அமைப்பில் இருந்தவர்கள் என்று தம்மால் சந்தேகிக்கப்பட்ட அனைவரையும் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

'ஜிகாத்' அமைப்பில் இருந்ததாக புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட முஸ்லிம் பொலிசாரில், அந்த அமைப்பைச் சேராதவர்களும் இருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரும் கிழக்கில் பொலிஸ் நிலையங்களை தாக்கியபோது முஸ்லிம் பொலிசாரை தனியாக பிரித்தெடுத்து சுட்டுத்தள்ளினார்கள்.

மாகாணசபைக் காலத்திலேயே அச் சம்பவம் நடைபெற்றிருந்தது.

அச் சம்பவம் தொடர்பாக மாகாண சபை முதல்வர் வரதராஜப் பெருமாள் கண்ணீர் விட்டதாகவும், "என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை, என் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விதத்தில் நடந்து விட்டது!" என்று கூறியதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் பின்னர் நினைவு கூர்ந்திருந்தார்.

அதேபோலவே புலிகளும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தம்மால் பிடிக்கப்பட்ட பொலிசாரில் முஸ்லிம் பொலிசாரை சுட்டுக் கொன்றனர்.

புலிகள் முஸ்லிம் பொலிசாரை கொலை செய்ததை ஈ.பி.ஆர்.எல்.எஃப். கண்டித்தபோது "நீங்கள் செய்ததை மறந்துவிட்டீர்கள். இவற்றைக் கண்டிக்கும் தார்மீகத் தகுதி உங்களுக்கு கிடையாது!" என்று ஈரோஸ் பாலகுமார் கூறியிருந்தார்.

ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் முஸ்லிம் பொலிசாரை புலிகள் சுட்டுக் கொன்றதை கண்டித்தன.

### புலிகள் அறிக்கை

14.06.90 அன்று விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

இலங்கை அரசுடன் பேச்சு முறிந்ததுக்கான காரணத்தை விளக்கும் விதமாக அந்த அறிக்கை வெளியானது.

"தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எமது ஒவ்வொரு நடவடிக்கையும் தமிழ் பேசும் மக்களைப் பாதுகாப்பதற்காகவும், தமிழீழ விடுதலைக்காகவும் அன்றி வேறல்ல.

தமிழீழ விடுதலைக்காகவும், சிங்கள, இந்திய ஆயுதப் படைகளின் தாக்குதல்களில் இருந்தும், சமூக விரோத, இனத் துரோகக் கும்பல்களின் துன்புறுத்தல்களில் இருந்தும் தமிழ் பேசும் மக்களைக் காப்பதற்காக இதுவரை ஆயிரத்தி ஐநூறுக்கும் மேற்பட்ட வீரர்கள் தமது இன்னுயிரை ஈர்ந்துள்ளனர். ஏராளமானோர் கைகால்களை இழந்துள்ளனர்.

இரண்டரை ஆண்டு காலமாக தமிழீழ மக்களுக்கு சொல்லொணா கொடுமைகளை இழைத்து தமிழீழ விடுதலைப் போரை ஒடுக்க நினைத்த இந்தியப் படையினரை, இந்த மண்ணைவிட்டு விரட்டியடிக்க, நிபந்தனையற்ற பேச்சுக்கு சிறீலங்கா அரசு அழைத்தது.

எமது இலட்சியத்திற்கு எவ்வித ஊறும் நேராத வகையில், எதுவித விட்டுக் கொடுப்பும் அற்ற நிலையில், சிறீலங்கா அரசுடன் யுத்த நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தை நடத்த முடிவெடுத்தோம்.

தமிழ் மக்களின் மீது பகைமை உணர்வுள்ள இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் இருப்பதில் பயனில்லை என்பதையும், அவர்களால் தமிழ் பேசும் மக்களுக்கு இன்னலும், இடையூறும்தான் தொடரும் என்பதையும் பேச்சுவார்த்தைகளின்போது தொடர்ந்து இடித்துரைத்தோம்.

இந்தியப் படையை எப்படியாவது வெளியேற்றியே தீர வேண்டும் என்ற நெருக்கடி நிலையில், தமிழீழப் பகுதிகளில் இருந்து சிங்களப் பொலிசாரை முற்றாக திருப்பி அழைப்பதற்கும், தமிழீழத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையையும் முகாம்களையும் குறைப்பதற்கும் சிறீலங்கா அரசு ஒப்புக் கொண்டது. சில பகுதிகளில் இருந்து சிங்களப் பொலிசாரையும் திரும்பப் பெற்றது.

ஆனால், இந்தியப் படை இங்கிருந்து அகற்றப்பட்ட பின்னர் சிறீலங்கா அரசுதான் ஒப்புக்கொண்டபடி செயற்படாதது மட்டுமல்ல, மேலும் ஆயிரக்கணக்கான ஆயுதப் படையினரைக் கொண்டு வந்து குவிக்கும் நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளது.

### வாக்குறுதி மீறல்

எமக்கும் சிறீலங்கா படைகளுக்கும் இடையே கடந்த நான்கு நாட்களாக கிழக்கில் நடைபெற்றுவரும் சமர் எம்மால் வலிந்து தொடுக்கப்பட்ட ஒன்றல்ல.

## பொலிஸ் நிலையங்கள் கட்டுப்பாட்டில்



கொடுத்த வாக்குறுதிகளை மீறி சிறீலங்கா ஆட்சியாளரினால் தமிழீழத்தில் திணித்து வைக்கப்பட்டிருந்த சிறீலங்கா பொலிசாரின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டல்களினாலும், புலிகளின் செயற்பாடுகளுக்கு அவர்கள் இடையூறு விளைவித்தமையாலும் ஏற்பட்டது.

கடந்த 12.06.90 அன்று யுத்த நிறுத்தத்தை கொண்டு வருவது பற்றி எம்மோடு பேச்சு வார்த்தை நடத்த நீதி அமைச்சர் ஹமீத்தை சிறீலங்கா அரசு அனுப்பிவைத்தது.

அதேவேளையில் நாடாளுமன்றத்தில் இன்னொரு அமைச்சர் புலிகளை கிரிமினல்கள் என்று இழித்துரைத்தும், இனத்துரோகியான வரதராஜப் பெருமாளுடன் எமது தலைவரை ஒப்பிட்டும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

அதையும் பொருட்படுத்தாமல் ஹமீட்டுடன் பேச முடிவு செய்து நேரமும் குறித்தோம்.

ஆனால் சிறீலங்கா அரசோ அதன்பின் குறிப்பிட்ட நேரத்தில் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்கு பதிலாக, யுத்தத்தை தொடர்வதற்கும், அதனை விரிவுபடுத்துவதற்குமான நடவடிக்கைகளில் வேகமாக இறங்கியது.

முப்படைகளையும் ஏவிவிட்டு ஆகாய, கடல், தரைமார்க்கமாக சிறீலங்கா அரசு தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகிறது.

### வெட்டிக் கொலை

குடிமக்கள் செறிவான பகுதிகளில் விமான, செல் தாக்குதல்களினால் பொதுமக்களுக்கு பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

அம்பாறையில் பல பகுதிகளில் முகாம்களை விட்டு வெளியேறிய சிங்கள ஆயுதப் படையினர் தமிழ், முஸ்லிம் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளனர். நூற்றுக்கும் அதிகமான மக்களை வெட்டிக் கொன்றுள்ளனர்.

மேலும் மூவாயிரத்துக்கும் அதிகமான ஆயுதப்படையினரை கொழும்பில் இருந்து சிறீலங்கா அரசு கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

தமிழீழ மக்கள்மீது பெரும் தாக்குதலை நடத்திவரும் சிறீலங்கா அரசின் ஆயுதப்படையினருக்கு எதிராக நடைபெற்ற நான்கு நாள் மோதல்களில் எமது 45 வீரர்கள் களப்பலியாகியுள்ளனர்.

தமிழீழ மக்களின் விடுதலைக்கான வேள்வித்தீயில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட, அந்த 45 வீரர்களுக்கும் எமது வீர வணக்கத்தை செலுத்துகிறோம்.

தமிழீழ மக்களுக்காக நாம் நடத்திவரும் போரில் தமிழீழ மக்கள் அனைவரும் பங்காளிகளாக மாறி களத்தில் நிற்கும் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புலிகளை நாடாளுமன்றத்தில் சாடியவர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன.

அரசுடன் புலிகள் பேச்சு நடத்திக் கொண்டிருந்தபோது பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடந்தது.

அமைச்சரவைப் பேச்சாளராக ரஞ்சன் விஜயரத்னாவே அப்போது செயற்பட்டு வந்தார்.

கேள்விகளுக்கு சூடாகவும் சில சமயம் குறும்பாகவும் பதில் கூறி பரபரப்பு ஏற்படுத்துபவர் ரஞ்சன்.

புலிகள் வடக்கு-கிழக்கில் நிதி திரட்டல் நடத்துவது தொடர்பாக நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

ரஞ்சன் அதற்கு கூறிய பதில்: "புலிகளுக்கு பசித்தால் புல்லையா தின்னச் சொல்கிறீர்கள்?"

இன்னொருமுறை பத்திரிகையாளர் ஒருவரது கேள்வியால் பொறுமை இழந்த ரஞ்சன், "உம்மை சிறையில் தள்ள வேண்டி வரும்" என்று எச்சரிக்க, அது பெரும் பிரச்சனையாகிவிட்டது.

## போர் ஏன்? —புலிகளின் விளக்கம்



அதற்கு அடுத்த தடவை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டுக்கு புதிய பத்திரிகை ஒன்றுடன் வந்தார் ரஞ்சன்.

அந்த பத்திரிகையை மாநாட்டில் விநியோகித்துவிட்டு, "நானும் பத்திரிகையாளன் ஆகிவிட்டேன்" என்று கூறினார்.

ரஞ்சனுக்கு அவரது எதிரிகள் சூட்டியிருந்த பட்டம்: 'விசர்ப் பூனை.'

### எதிர்க்கட்சிகள் அறிக்கை

அரசு, புலிகள் பேச்சு எப்போது முறியும் என்று வழிமேல் விழிவைத்து காத்திருந்தன எதிர்க்கட்சிகள்.

முறிந்தது என்றதும் உள்ளே எழுந்த மகிழ்ச்சியை வெளிக்கு காட்டாமல், நாட்டு நலன் மேல் அளவற்ற அக்கறைபோல கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டன.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோசலிச முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளே கூட்டாக அறிக்கைவிட்டன.

'புலிகளை வெற்றி கொள்ளத்தக்க சந்தர்ப்பத்தை தவறவிட்ட அரசாங்கமே இன்றைய நிலைக்கு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்' என்று அறிக்கையில் கூறப்பட்டது.

அதற்கு பதில் கொடுத்து அரசும் அறிக்கை வெளியிட்டது.

இன்று, ஒரே தேசம், ஒரே மக்களாக செயற்பட வருமாறு எதிர்க்கட்சியை ஜனாதிபதி சந்திரிக்கா அழைத்துக் கொண்டிருக்கிறார்.

அன்று, ஒரே தேசிய இனமாக செயற்பட வேண்டும் என்று பிரேமதாசா அரசு எதிர்க்கட்சிகளை நோக்கி அழைப்பு விடுத்திருந்தது.

இதற்கிடையே பாராளுமன்றத்தில் அவசர கால சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் கே.பி. இரத்நாயக்கா அமைச்சர் ஹமீட்டுக்காக பிரார்த்தனை செய்தார்.

'நெருக்கடியான இந்த நிலையில் யாழ்ப்பாணம் சென்றுள்ள அமைச்சர் ஹமீட் எந்தவிதமான பாதிப்பும் இன்றி நலமுடன் திரும்பிவர அல்லாஹ்வின் பெயரால் பிரார்த்தனை செய்கிறேன்!' என்றார்.

கே.பி. இரத்நாயக்காவுக்கு தமிழ் தெரியும். யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கல்வி கற்றவர். இப்போது சபாநாயகராக இருக்கிறார்.

தமிழில் உள்ள ஒரு பழமொழியையும் அன்று சபையில் கூறினார்: "குட்டக் குட்ட குனிபவனும் மடையன், குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்." அது இன்று புலிகளுக்கும் அரசுக்கும் பொருந்துகிறது' என்று கூறினார்.

### தர்ம யுத்தம்

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ரெலோ இயக்கத்தின் அன்றைய செயலதிபரும், பா.உ.வுமான ஜி. கருணாகரன் (ஜனா) அரசுக்கு முழு ஆதரவு தெரிவித்தார்.

"பயங்கரவாதிகள் ஜனநாயக ஆட்சி முறைக்கு சவால் விட்டுள்ளனர்.

இரத்தவெறி கொண்ட இவர்களுக்கு எதிரான போராட்டத்தில் நாம் ஒத்துழைக்க தயார். எமது நாட்டுக்காக எமது மக்களுக்காக நாம் எதனையும் செய்யத் தயார்.

இந்த தர்ம யுத்தத்தில் அரசு வெற்றி பெறுவதற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் சகோதரர்கள் பேதங்களை மறந்து ஒத்துழைப்பு வழங்குவோம்" என்று கூறினார்.

### ஈரோஸ் வெளியேற்றம்

போர் மூண்டபின்னர் ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

'போர் மூளுமானால் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறுவோம்' என்று பிரபாகரனுக்கு கொடுத்த உத்தரவாதத்தை நிறைவேற்றினார் பாலகுமார்.

பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை முன்வைத்துவிட்டு வெளியேறுமாறு வன்னியில் இருந்து பாலகுமார் தகவல் அனுப்பினார்.

அவ்வாறு செய்த ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலும் கொழும்பில் ஈரோஸ் அலுவலகத்தில் நிற்பது ஆபத்து என்பதால் அங்கு நிற்காமல் நழுவிவிட்டனர்.

அன்றிரவே ஈரோஸின் கொழும்பு அலுவலகம் பொலிசாரால் முற்றுகையிடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட ஆயுதங்களை திரும்ப ஒப்படைக்குமாறு கேட்டனர்.

ஆயுதங்களை மீளப் பெற்றதோடு, நாடாளுமன்ற உறுப்பினர்களது பாதுகாப்புக்கு என்று இருந்தவர்களையும் அழைத்துச் சென்று விட்டனர்.

சங்கர்ராஜி, சுதா மாஸ்டர் ஆகியோர் தமக்கும் பாலகுமார் ஆட்களுக்கும் பிரச்சனை என்றும், அவர்களது முடிவை தாம் ஏற்கவில்லை என்றும் அரசுக்கு தெரிவித்தனர்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சனை சுதா மாஸ்டர் சந்தித்தார்.

"பாலகுமாரின் முடிவு ஈரோசின் முடிவல்ல என்று பகிரங்கமாக அறிக்கைவிட வேண்டும். அதன்பின்னர்தான் மேற்கொண்டு பேசலாம்" என்று கூறிவிட்டார் ரஞ்சன்.

அவ்வாறே பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்று கொடுக்கப்பட்டது.

ஆனால் ஈரோசின் பெரும்பாலான உறுப்பினர்கள் பலர் பாலகுமாரின் முடிவை ஏற்றனர். வேறு பலர் ஒதுங்கி நின்றனர்.

### மோதல் தீவிரம்

இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய சூட்டோடு சூடாக படையினர் ஷெல் வீச்சில் ஈடுபடத் தொடங்கினர்.

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து சரமாரியாக கிராமங்களை நோக்கி ஏவப்பட்ட ஷெல் வீச்சால் பொதுமக்கள் இடம்பெயர்ந்தனர்.

திருமலை மாவட்டம் கிண்ணியா இராணுவ முகாம்மீது 13.06.90 அன்று பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரை புலிகள் நடத்திய தாக்குதலில் பத்து படையினர் பலியாகினர். புலிகள் தரப்பில் இருவர் பலியாகினர்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் முன்பாக இருந்த இராணுவ முகாம் மீது 14.06.90 அன்று பாரிய தாக்குதல் ஒன்றை புலிகள் தொடுத்தனர்.

பொலிஸ் நிலையத்தில் இருந்த பொலிசார் புலிகளிடம் சரணடைந்தனர். இதேபோல மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமை யாற்றிய பொலிசாரும் புலிகளிடம் சரணடைந்தனர்.

வவுனியா பொலிஸ் நிலையங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. அங்கும் பொலிசார் சரணடைந்தனர்.

புலிகளை எதிர்த்து சண்டையிடும் ஆட்பலமோ, ஆயுதபலமோ பொலிசாரிடம் இருக்கவில்லை.

வடக்கில் ரயில் பாதைகளும் புலிகளினால் தகர்த்தெறியப்பட்டன. இதனை அடுத்து யாழ்தேவி ரயில் அநுராதபுரத்துடன் தனது சேவையை நிறுத்திக் கொண்டது.

எவ்வளவு விரைவாக முந்திக் கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாக முந்திக் கொண்டு முகாம்களை தாக்குவதில் புலிகள் இறங்கினர்.

இதற்கிடையே அரசுதான் பொலிசாரை புலிகளிடம் சரணடையச் சொன்னதாக எதிர்க்கட்சியினர் கூறினார்கள்.

உண்மையில் புலிகள் பேச்சு முறிந்ததும் அசுரவேகத்தில் செயற்பட்டு சகல பொலிஸ் நிலையங்களையும் முற்றுகையிடுவர் என்று அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை.

இனிப் பேச்சுக்கே இடமில்லை என்று யுத்தப் பிரகடனம் செய்வர் என்பதையும் அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை.

மேலும் சில மாதங்கள் சென்றபின்னர் தான் முழுமையான சமர் வெடிக்கும். அதற்குள் தம்மை தயார்படுத்திக் கொள்ளலாம் என்றே அரசாங்கம் நினைத்தது.

ஆனால் புலிகள் முந்திக் கொண்டனர்.

முந்திக் கொண்டதோடு நுட்பமான போர்த்திட்டங்களும் வகுக்கப்பட்டன.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது– இராஜதந்திரி

## தென்னிலங்கைத் தேர்தல் ஒத்திவைப்பு தமிழ் பேசும் தரப்புக்கே பாதிப்பு

**பௌ**த்த மத பீடத்தினரை தூண்டிவிட்டு மாகாணசபைத் தேர்தலை பின்போடவைக்க ஆட்சியாளர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தக்க பலனை கொடுக்கவில்லை.

பௌத்த மத குருமார் விடுத்த அறிக்கையின் வாசகங்கள்கூட ஆட்சியாளர்களால் தயாரிக்கப்பட்டவையே. கையொப்பம் மட்டுமே அவர்களுடையது என்றே கூறப்படுகிறது.

கள நிலவரங்கள் தமக்கு சாதகமாக இருக்குமானால், வடக்கு-கிழக்கில் படைபலத்தை அப்படியே வைத்துக்கொண்டு, துரித கதியில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி முடிக்க ஆட்சியாளர்கள் தயக்கம் காட்டியிருக்க மாட்டார்கள்.

களநிலவரம் தமக்கு திருப்தி அளிக்காத காரணத்தாலேயே தேர்தலை பின்போட திரைமறைவு முயற்சிகளில் ஆளும் தரப்பு இறங்கியிருந்தது.

பௌத்த மதகுருமார்கள் ஊடாக தேர்தலைப் பின்போடுமாறு கோரிக்கை விடுத்தால் அதனை மறுத்துரைக்க ஐ.தே.கட்சி முன்வரமாட்டாது. ஒருவேளை அவ்வாறு மறுத்துரைத்தால் பௌத்த மத பீடங்களை ஐ.தே.கட்சிக்கு எதிராகத் திருப்பலாம் என்பதே ஆளும் தரப்பு விற்பன்னர்களது உள்நோக்கமாகும்.



பௌத்த பேரினவாதத்தை சார்ந்து அரசியல் நடத்தும் ஐ.தே.கட்சியினரும் மதகுருமார்களை பகைத்துக்கொள்ள துணியவில்லை.

ஆட்சியாளர்கள் தேர்தல் நடத்தத் தயங்கியே பௌத்த குருமாரின் பின்னால் ஒளிந்து நின்று கூட்டறிக்கை வெளியிட வைத்தனர் என்று தமக்கு தெரிந்த உண்மைகளைக்கூட ஐ.தே.கட்சி மக்களிடம் தெரிவிக்கவில்லை.

அதற்குமாறாக ஆளும் தரப்பை அதிரவைக்கும் நிபந்தனை ஒன்றை ஐ.தே.கட்சியினர் முன்வைத்திருந்தனர்.

'மகாண சபைத் தேர்தலை பின்போட சம்மதிக்கிறோம், அதற்கு பதிலாக ஜனாதிபதி தேர்தல் நடத்த வேண்டும்' என்று ரனில் அறிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்தவே தயங்கும் ஆட்சியாளர்கள், முதலுக்கே மோசத்தை உண்டாக்கக்கூடிய ஜனாதிபதித் தேர்தலை நடத்த துணியமாட்டார்கள் என்ற நம்பிக்கை காரணமாகவே மேற்கண்ட நிபந்தனையை ரனில் விதித்திருந்தார்.

பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாகியது ஆட்சியாளரது நிலை. மாகாண சபைத் தேர்தலில் தோல்வி கண்டால்கூட சமாளித்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி கண்டால் ஆட்டமே முடிந்துவிடும்.

எனவே, முதலுக்கே மோசம் ஏற்படுவதைவிட மாகாண சபைத் தேர்தலை நடத்துவது பரவாயில்லை என்று கருதும் நிலைக்கு வந்துள்ளனர் ஆட்சியாளர்கள்.

26.06.98 அன்று அமைச்சரவையின் விசேட கூட்டத்தில் மாகாணசபைத் தேர்தல்களை திட்டமிட்டபடி நடத்த ஆளும் தரப்பு முடிவு செய்ததாக அறிவிக்கப்பட்டது.

அதற்கு முதல்நாள் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில், நீதியமைச்சர் பீரிஸ் அவர்கள் "மாகாணசபைத் தேர்தல்களை ஒத்திவைக்க ஐ.தே.கட்சி சம்மதித்துள்ளது, கொள்கை அளவில் ஒத்துழைக்க முன்வந்துள்ளது" என்று கூறியிருந்தார்.

இந்த ஆண்டு நவம்பரில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதா? இல்லையா? என்பதை ஆராயவே அமைச்சரவை விசேடமாக கூடவுள்ளது என்றும் பீரிஸ் கூறியிருந்தார்.

ஆயினும் "விசேட அமைச்சரவை கூட்டத்தில் ஐ.தே.கட்சியின் நிபந்தனை தொடர்பாக பெரிதாக ஆராயப்படவில்லை" என்றும், அது சிறுபிள்ளைத்தனமானது எனவும் அமைச்சர் பௌசி கூறியிருக்கிறார்.

எனவே, ஜனாதிபதி தேர்தலை நடத்த தயார் என ஆட்சியாளர் கூறியது வெறும் கண்துடைப்பே என்பது புலனாகின்றது. இன்றைய அரசியலில் சொற்களுக்கும் செயலுக்கும் இடையில் யாதொரு தொடர்பும் இல்லாதிருப்பதும் நன்கு தெளிவாகிறது.

கடந்த கால ஆட்சியாளர்களும் கூறுவது ஒன்று செய்வது இன்னொன்றாகவே இருந்தது. இன்றைய ஆட்சியாளர்களும் சற்றும் சளைத்தவர்களல்ல.

ஆட்சியில் இருப்போர் எதிர்க் கட்சியின் ஒத்துழைப்பை

### அவர் விழுவாரா?

கோருவது என்பது மனப்பூர்வமான ஒன்றாக எப்போதும் அமைந்திருக்கவில்லை. எதிர்க் கட்சியின் கோரிக்கைகளை பரிசீலிப்பதாக கூறுவதுகூட கண்துடைப்பு நடவடிக்கைகளாகவே இருந்து வருகிறது.

தேர்தல் விடயத்தில் மட்டுமல்ல நாட்டின் இனப் பிரச்சனையிலும் ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் மனப்பூர்வமாக கைகோர்த்து நின்றதும் இல்லை, நிற்கப்போவதும் இல்லை என்பதை கடந்த கால, சமகால நிகழ்வுகளை உற்று நோக்கும் எவருமே அறியக்கூடியதாகவுள்ளது.

அமைச்சரவை விசேட கூட்டத்தில் மாகாணசபைத் தேர்தலை திட்மிட்டபடி நடத்தலாம் என்று முடிவெடுத்தமைக்கு இன்னொரு பின்னணியும் இருப்பதாக அறியப்படுகிறது.

ஐ.தே.கட்சிக்குள் பாரிய பிளவு ஏற்படுத்தும் திரைமறைவு முயற்சிகளில் ஆளும் தரப்பு முக்கியஸ்தர்கள் சிலர் ஈடுபட்டிருந்தனர்.

அந்த முயற்சிகள் வெற்றிபெறும் கட்டத்தை நெருங்கிவிட்டதாக கிடைத்த தகவலையடுத்தே மாகாண சபைத் தேர்தலை நடத்த ஆளும் தரப்பு சற்று தைரியம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

அதேசமயம் பொலிஸ்மா அதிபர் வெளியிட்ட அறிக்கை ஒன்றும் கூர்ந்து நோக்கப்படவேண்டியதாகும்.

மாகாணசபைத் தேர்தல் நடந்தால் பாதுகாப்பு வழங்க முடியாது எனத் தேர்தல் ஆணையாளருக்கு பொலிஸ்மா அதிபர் அறிக்கையிட்டுள்ளார்.

அதனை உடனடியாக பத்திரிகைகள் மற்றும் செய்தி ஊடகங்கள் மூலமும் பகிரங்கப்படுத்தி உள்ளனர்.

அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல், அரசாங்கத்தின் விருப்பத்திற்கு மாறாக பொலிஸ்மா அதிபர் அவ்வாறான அறிக்கை ஒன்றை தேர்தல் ஆணையாளருக்கு கொடுத்திருக்க முடியாது என்பது புலனாகின்றது.

தேர்தலை நடத்தியே தீருவது என்றோ, தேர்தல் நடத்துவதே தமக்கு சாதகம் என்றோ ஆளும் தரப்பு கருதுமானால் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு தொடர்பான உயரதிகாரிகளும் உடன்பாடான கருத்துக்களையே வெளியிடவேண்டியிருக்கும்.

அதுதவிர, நாட்டின் பாதுகாப்பு தொடர்பான இரகசியங்கள் வெளியாகக் கூடாது என்று கருதியே செய்தித் தணிக்கையை அமுல்படுத்தி உள்ளதாக ஆட்சியாளர்கள் நியாயம் கூறி வருகின்றனர்.

ஆனால், தேர்தல் நடந்தால் பாதுகாப்பு வழங்க முடியாது என்றும், பாதுகாப்பு வழங்குவதாயின் 30 ஆயிரம் பொலிசார் கடமையில் ஈடுபடவேண்டியிருக்கும் என்றும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்த தகவலை பகிரங்கப்படுத்தியதும் பாதுகாப்பு இரகசியம் ஒன்று அம்பலமானது போன்றதேயாகும்.

போதிய பாதுகாப்பு வழங்க முடியாத பலவீனம் இருக்கிறது என்பதை புலிகளுக்கு தெரிவித்து, அவர்கள் தாக்குதல்களுக்கு திட்டமிட தூண்டுகோலாக இருக்கக்கூடியதே மேற்கண்ட தகவலாகும்.

அதுமட்டுமன்றி, 'பொலிசாரை வன்னிப் போர்முனையில் இருந்து திரும்பப் பெறுவது, கைப்பற்றிய நிலப்பகுதிகளை இழக்கக் காரணமாகிவிடும்' என்றும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் வெளியாகக் கூடாது என்று ஆட்சியாளர்கள் உண்மையாகவே கருதுவார்களேயானால் பாதுகாப்பு பலவீனம் பற்றிய தகவலை உள்ளடக்கியிருந்த பொலிஸ் மா அதிபரின் அறிக்கையை பகிரங்கப்படுத்தாமல் இருந்திருப்பர்.

ஆனால், பாதுகாப்பு, தேசிய நலன் என்ற வார்த்தைப் பிரயோகங்கள் சொந்த அரசியல் நோக்கங்களை பூசி மெழுகுவதற்கே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தமது சொந்த அரசியல் நலன்களை பாதுகாக்க, பாதுகாப்பு தொடர்பான இரகசியங்களை வெளியிடவும் ஆட்சியாளர்கள் தயாராக உள்ளதையே மேற்கண்ட நிகழ்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

அமைச்சரவைக் கூட்டத்தில்

### அவர் கவிழ்வாரா?

மாகாணசபைத் தேர்தலை நடத்த தயார் என்று முடிவெடுத்தபோதும், தேர்தலை பின்போடக் கூடிய சாத்தியமான இரகசிய முயற்சிகளிலும் ஆளும் தரப்பின் ஒரு பிரிவினர் ஈடுபட்டிருந்தனர்.

நாட்டின் பிரதான கட்சிகள் இரண்டும் ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்தல், கைப்பற்றுதல் என்பதையே சகல நிகழ்வுகளும் மையமாகக் கொண்டே தமது அணுகுமுறைகள் அனைத்தையும் திட்டமிடுகின்றன என்பதை தெளிவாக்குகின்றன.

அதே சமயம் பௌத்த பேரினவாதத்தின் மேலான்மைக்கு உட்பட்டவர்களாகவும், கட்டுப்பட்டு நடப்பவர்களாகவுமே இரு கட்சிகளும் விளங்குகின்றன.

இரு அணிகளும் தங்கள் சொந்த நலன்களுக்கு பாதகம் ஏற்படும்போது பௌத்த பேரினவாத சக்திகளின் முதுகுக்குப் பின்னால் ஒடி ஒளிந்து கொள்வதையும், மதத்தின் பெயராலும், இனத்தின் பெயராலும் தங்கள் நிலைப்பாடுகளுக்கு நியாயம் தேடிக்கொள்ள முயல்வதையுமே காணமுடிகிறது.

எனவே, இந்த இரு அணிகளும் தாமாக முன்வந்து தேசியப்பிரச்சனையான இனப்பிரச்சனையை தீர்க்கமுடியும் என்று நம்புவதோ, பௌத்த பேரினவாதத்தின் விருப்பு வெறுப்புக்கு மாறான தீர்வை இவை நடைமுறைப்படுத்தத் துணியக் கூடியவை என்றோ கருதுவதோ முழுமையான முட்டாள்தனமேயாகும்.

எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பை ஆளும் கட்சி கோருவது என்பதோ, ஒத்துழைக்க தயார் என்று எதிர்க்கட்சி கூறுவதோ இரு அணிகளுக்கிடையே நடைபெறும் அதிகாரப் போட்டிக்கு அப்பாற்பட்ட விவகாரங்களல்ல. ஒருவரை ஒருவர் கட்டியணைத்தபடி முதுகில் குத்த முற்படுகிறார்கள் என்பதே ஒத்துழைப்பு பல்லவியின் அர்த்தமாகும்.

மாகாண சபைத் தேர்தலை ஒத்திப்போட ஒத்துழைக்குமாறு எதிர்க்கட்சியிடம் ஆளும் கட்சி கோரியிருந்தது. நாட்டு நலன், யுத்த வெற்றி என்ற போர்வையில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால், தற்போது தேர்தல் நடந்தால் எதிர்க்கட்சிக்கு சாதகமாகிவிடுமோ என்ற

## அரசியல் மூடத்தனத்தால் தமிழ்க் கட்சிகள் மௌனம் அனுஷ்டிப்பு



அச்சமே தேர்தலை தள்ளிப்போட பிரதான காரணமாகும்.

எனவே, தமக்கு தோதான தருணம் ஒன்றில் தேர்தலை நடத்தி, எதிர்க்கட்சியை மண்கவ்வச் செய்ய, அந்த எதிரிக்கட்சியிடமே ஒத்துழைப்பு கோருகின்றனர்.

அதேபோல இந்த ஆண்டு இறுதிக்குள் ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று எதிர்க்கட்சி கூறுவதும் ஆளும் கட்சிக்கு குழிபறிக்கும் தந்திரமேயாகும்.

தேர்தல் பிரச்சனையில் மட்டுமன்றி தேசிய இனப் பிரச்சனையிலும் இந்த இரு அணிகளும் ஒத்துழைப்பு பற்றி கூறிவரும் கருத்துக்களும் ஒருவருக்கொருவர் பொறிவைத்து அமுக்கும் நோக்கம் கொண்டவையேயாகும்.

அதேசமயம் தென்னிலங்கையில் மாகாணசபைத் தேர்தலை தள்ளிவைக்க நடைபெறும் இழுபறிகளுக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லாததுபோல தமிழ்க் கட்சிகள் மௌனம் சாதித்து வருகின்றன.

வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தில் தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்கும் இலக்கை அடைவதற்கு ஆதரவான சக்திகளின் ஆதரவை ஆட்சியாளர்கள் நாடிச் சென்றுள்ளனர்.

யுத்த வெற்றி தவிர தென்னிலங்கை வாக்காளர்களுக்கு வழங்க ஆட்சியாளரிடம் வேறெதுவும் இல்லை என்ற நிலையில், வெற்றிக்கான கடும் போக்கை கடைப்பிடிக்க ஆட்சியாளர்கள் தயங்கப்போவதில்லை. இந்த நிலைப்பாடு தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தற்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

கிழக்கிலும் நகர்வுகளும், அதிர்வுகளும், கேட்கத் தொடங்கியுள்ளன. வெற்றியை நோக்கிய பாதையில் செல்வதாக தென்னிலங்கை பௌத்த பேரினவாதத்தை நம்பவைப்பது மூலமே இன்றைய ஆட்சியாளர்கள் தம்மை தற்காத்துக்கொள்ள முற்படுகின்றனர்.

அதன் விளைவு வடக்கு-கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் தலைகள் மீதே சுமத்தப்படும் என்பதைக்கூட தமிழ்க் கட்சிகள் உணரவில்லை.

தமிழ் பேசும் மக்களை பலவீனப்படுத்தி பணியவைப்பது என்ற பேரினவாத நோக்கத்துடன் பின்னிப்பிணைந்ததாகவே இன்றைய காலகட்ட அரசியல், இராணுவ நிகழ்வுகள் அனைத்தும் அமைந்திருக்கின்றன.

இன்றைய ஆட்சியாளரின் சொந்த அரசியல் எதிர்காலம் தமிழ்பேசும் தரப்பை பலவீனமாக்கும் வெற்றியிலேயே முழுக்க முழுக்க சார்ந்துள்ளது.

தென்னிலங்கையில் தேர்தலை தள்ளிப்போட நடக்கும் முயற்சிகள் ஏதோ இனப்பிரச்சனைக்கு அப்பாற்பட்ட தனியான விடயம் என்பதுபோல தமிழ்க் கட்சிகள் கருதுவது அவற்றின் அரசியல் முடத்தனத்தின் வெளிப்பாடுகளேயாகும்.

தமிழ் பேசும் தரப்பைப் பொறுத்தவரை தென்னிலங்கையில் மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறுவதே சாதகமாகும்.

இன்றைய ஆட்சியாளர்களின் அரசியல் உறுதிப்பாடு ஆட்டம் காணுவதன் மூலமே, யுத்தத்திற்கான உலக உதவியும், மூர்க்கமான முஸ்தீபுகளும் தளர்வடையக் கூடியதாகவிருக்கும்.

எனவே, ஆளும் தரப்புக்கும் எதிர்த்தரப்புக்கும் இடையிலான முரண்பாட்டை தமிழ் பேசும் தரப்பு பயன்படுத்திக் கொண்டு, தென்னிலங்கையில் ஆளும் தரப்பை பலவீனப்படுத்தக்கூடிய கோரிக்கைகளை உற்சாகப்படுத்துவதே சரியான இராஜதந்திரமாகும்.

# சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

## வெடிமருந்தை நனைக்கிறார்கள்

**த**மது வழி மிதவாத வழி என்று சொன்னால் ஒரு மரியாதை இல்லை என்பதால் தங்கள் பாதையை ஜனநாயக வழி என்று தமிழ்க் கட்சிகள் கூறிவருகின்றன.

ஆயுதம் ஏந்திய போராட்டம் என்பதும் ஜனநாயகப் போராட்டமே என்பதைக்கூட தெரியாத இக்கட்சிகள் எதற்காக நினைவு தினக் கூட்டங்கள் நடத்துகின்றன? நாமும் ஒருகாலத்தில் ஆயுதம் ஏந்தினோம் என்று ஏன் கூறுகின்றன?

ஆயுதம் ஏந்திப் பலியான பயங்கரவாதிகள் தினம் என்று வேண்டுமானால் கொண்டாடலாம்.

போராட்டம் என்பது நாமறிய இரண்டே இரண்டு வகைதான். ஆயுதப் போராட்டம், ஆயுதம் ஏந்தாத போராட்டம்.

ஜனநாயக உரிமைகள் சிலவற்றை ஆட்சியாளர்கள் விட்டுவைக்கும்போது, அவற்றை பயன்படுத்தி ஆயுதம் ஏந்தாத போராட்டங்கள் நடைபெறும். உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம். மறியல் மற்றும் சட்டமறுப்பு என்று பல ரகங்களில் இருக்கும்.

அத்தகைய போராட்டங்களை நடத்தும் உரிமைகள் மறுக்கப்பட்டும்போதும், அடக்கப்படும் போதும், ஆயுதம் ஏந்திய போராட்டம் நடத்தப்படுகிறது.

இரண்டுமே ஜனநாயகப் போராட்டங்கள்தான். இரண்டுமே அரசியல் போராட்டங்கள்தான். ஆயுதம் ஏந்தாத போராட்டம் இரத்தம் சிந்தாத அரசியல். ஆயுதம் ஏந்திய போராட்டம் இரத்தம் சிந்தும் அரசியல்.

சுயநிர்ணய உரிமை, தேசிய இனபாதுகாப்புக்கு உத்தரவாதம் போன்ற அரசியல், ஜனநாயக உரிமைகளுக்காகவே தமிழ் மக்கள் ஒருகாலத்தில் ஆயுதம் ஏந்தாமல் போராடினார்கள். பின்னர் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள்.

அகிம்சை என்பதும் ஆயுதம் ஏந்தாத போராட்டம் என்பதும் ஒன்றா? இல்லை.

ஆயுதம் ஏந்தாமல் ஊர்வலம் செல்வோர்கூட பொலிசாருடன் கைகலப்பில் ஈடுபடுவர். கல்லெறிவர். அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பர். அதாவது ஆயுதம் ஏந்தாவிட்டாலும் அந்தப் போராட்டத்திலும் ஒருவிதமான வன்முறை கலந்திருக்கும்.

ஆனால் அகிம்சை என்பது அப்படியல்ல வன்முறையே இருக்கக்கூடாது. உதைத்தாலும் வாங்கவேண்டும். தன்னை மட்டும் வருத்திக் கொண்டு போராடுவதே அகிம்சை. அதுதான் காந்தியின் வழி.

கூட்டணியினர் அக்காலத்தில் சந்தைகளுக்கு கல்லெறிந்து ஹர்த்தால் நடத்த அனுமதித்தனர். பஸ் எரிப்புக்களை கண்டிக்காமல் இருந்தனர். துரோகிகளே, கானான்களே என்று வார்த்தைகளால் தங்கள் எதிரிகளை வதைத்தனர். அகிம்சைவாதிகளாக கூட்டணியினர் எப்போதும் இருந்ததில்லை. ஆயுதம் ஏந்தாமல் போராடினர் என்று கூறலாம்.

எங்கள் மிதவாத தமிழ் கட்சிகளுக்கு அரசியல் என்றால் என்ன?

ஜனநாயகம் என்றால் என்ன? எதுவும் தெரியவில்லை.

பாராளுமன்றம் செல்வது, உள்ளுராட்சி சபைகளுக்கு செல்லுவது, தேர்தலில் போட்டியிடுவது, தேர்தலில் வெற்றிபெற எத்தகைய திருகுதாளத்திலும் ஈடுபடுவது என்பவைதான் அரசியல் என்று நினைக்கிறார்களோ தெரியவில்லை. இவைதான் ஜனநாயகம் என்று கருதுகிறார்களோ தெரியவில்லை.

முன்னாள் போராளிகளான இந்நாள் மிதவாதிகள் யாழ்குடா நாட்டில் மக்களின் அன்றாட அவலங்களை நம்பியே இன்று அரசியல் நடத்துகின்றனர்.

'வெடி மருந்தை எப்போதும் உலர்ந்த நிலையில் வைத்திரு என்று கூறுவதுண்டு. உடனே பயன்படுத்துகிறோமோ இல்லையோ எப்போதும் பயன்படுத்தக்கூடிய தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். நனையவிட்டால் பயன்படுத்த முடியாது.

மக்களின் உணர்வுகளுக்கும், அரசியல் இலட்சியங்களுக்கும் அது பொருந்தும். அவற்றை உலராமல் வைத்திருக்க வேண்டியதே உண்மையான அரசியல் கட்சிகளின் தலையாய கடமை.

ஆனால் யாழ் குடாநாட்டில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் அடுத்த தேர்தலுக்காகவே அயராது உழைக்கின்றன. அதனால் தெருவின் குறுக்கே கிடந்த வாழைப்பழத்தோலை தூக்கி ஒரமாகப் போட்டால்கூட அதனையும் பத்திரிகைகளுக்கு செய்தியாக கொடுத்துவிடத் துடிக்கின்றன.

சாதாரண மனிதன் அன்றாட வாழ்வில் சக மனிதனுக்கு செய்யும் உதவிகளை இவர்கள் அரசியல் விளம்பரத்துக்கு செய்யப் பழகுகிறார்கள்.

போராட்டம் என்றால் பின்னடைவுகள், இழப்புக்கள் இருக்கும். இந்தியா உட்பட எந்தவொரு நாடும் ஈழம் பிரிய உதவாது. சொந்தப் பலத்தில் போராடியே வெல்லவேண்டும் என்றுதான் சகல இயக்கங்களும் அன்று கூறின.

ஆனால் இன்று, பின்னடைவுகளை காட்டி மக்களை விரக்தி கொள்ள வைக்கும் விதமாக அதே இயக்கங்கள் பேசிவருகின்றன.

'ஐயாவுடன் பேசினோம். அம்மையாருடன் பேசினோம். குளத்தைக் கட்டினோம். பள்ளிக்கூடத்துக்கு வெள்ளையடித்தோம்' என்று ஏட்டிக்குப் போட்டியான அறிவிப்புக்கள்.

இவற்றைத்தவிர வேறு எதனையும் செய்ய முடியாத தமது இயலாமையை மறைக்க, மக்களின் அன்றாடப் பிரச்சனைதான் முக்கியம் என்று நீலிக் கண்ணீர்.

அன்றாடப் பிரச்சனை என்பது என்ன? இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு பதிலாக, இராணுவத்தீர்வை முன்வைக்கும் அரசின் முனைப்பால் தோன்றும் பிரச்சனைதானே.

இடம் பெயர்வுகள், தொழில் இழப்புக்கள், கைதுகள், காணாமல் போதல்கள், போரால் ஏற்படும் உடல் உள பாதிப்புக்கள், சொத்தழிவுகள் என்பவைதான் அன்றாடப் பிரச்சனைகள்.

எத்தனை விரைவாக அரசியல் தீர்வொன்றுக்காக அரசை நிர்ப்பந்தப்படுத்தும் உள்நாட்டு, வெளிநாட்டு அழுத்தங்களை உருவாக்குகிறோமோ அதுதான் அன்றாடப் பிரச்சனைகள் மேலும் மேலும் தோன்றுவதை தடுக்கும்.

உள்ளுராட்சித் தேர்தல், வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் போன்றவை அரசுக்கு கால இழுத்தடிப்புக்கும், வெளிநாட்டு நிர்ப்பந்தங்களில் இருந்து தப்பவுமே உதவும். யுத்தம் வளர்ந்து அன்றாடப் பிரச்சனைகள் புதிய பரிணாமம் பெறவே வழிவகுக்கும்.

அன்றாடப் பிரச்சனைகளை காரணம் காட்டி அரசின் ஜனநாயக விளையாட்டுக்களுக்கு தமிழ்க் கட்சிகள் துணைபோவது அப்பட்டமான ஏமாற்று வித்தை.

இந்த வித்தைக்கு பெயர் ஜனநாயகமும் அல்ல, அரசியலும் அல்ல. பதவி ஆசைகளே!

யுத்தம் என்ற நெருப்பில் குளிர் காயந்தபடி, யாழ் மக்களின் உணர்வுகளை மட்டும் விரக்தியைத் தூண்டி நனைய வைக்கின்றன தமிழ்க் கட்சிகள்.

ஆம், வெடி மருந்தை உலர்ந்த நிலையில் வைத்திருப்பது தமிழ்க் கட்சிகளின் இன்றைய நலன்களுக்கு ஆபத்துத்தான். அதுதான் வெடிமருந்துகளை நனைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

அதிர் இடி 16

கடந்தவாரம்

**தனது எதிரிகளை மன்னிப்பது போன்றும் ஜனநாயகத்தை உருவாக்கப் பாடுபடுபவன் போன்றும் நாடகமாடத் தொடங்கினான் இடி அமீன்.**

இனி....

# இடி அமீன்

பிரிகேடியர் ஷபான ஒபோலொட் விடுதலை. சிறையில் இருந்த காலத்திற்கான சம்பளமும் மொத்தமாக வழங்கப்பட்டது!'

உகண்டா தினசரிகளில் அதுதான் தலைப்புச் செய்தி.

ஒபேடேயின் ஆதரவாளர்களை மட்டுமல்லாமல், ஒபேடே காலத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

.அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களை பத்திரிகைகள் பேட்டி கண்டு வெளியிட்டன.

எல்லோரும் அமீனை புகழ்ந்து தள்ளினார்கள். ஒரே ஒருத்தர் மட்டும் அமீனை சர்வாதிகாரி என்று துணிந்து கூறினார்.

அவர் ஒரு சட்டத்தரணி. "ஒபேடேக்கும் இடி அமீனுக்கும் தோற்றத்தில்தான் வேறுபாடு. இருவருமே ஏமாற்றுக்காரர்கள்; சர்வாதிகாரிகள்," என்று கூறினார்.

அந்தப் பேட்டியை எடுத்த செய்தியாளர் அதனைப் பிரசுரிப்பதற்கு அனுப்ப முன்னர் இடி அமீனின் கவனத்திற்கு அனுப்பி வைத்தார்.

அதேநாள் மாலை அந்தச் சட்டத்தரணியை இன்னொரு பத்திரிகையாளர் சந்தித்தார். அதே கருத்தையே அவருக்கும் சொன்னார் சட்டத்தரணி.

"நீங்கள் துணிச்சல்காரர். உங்களைப் பாராட்டத்தான் வேண்டும்!" என்றார் பத்திரிகையாளர்.

"பாராட்டுவது இருக்கட்டும், பத்திரிகையில் போடுங்கள். பத்திரிகைகள் எல்லாம் அமீனுக்கு வாழ்த்துச் சொல்லி வாலை ஆட்டிக் கொண்டிருக்கின்றன," என்றார்.

பத்திரிகையாளர் சிரித்தார். அந்தச் சிரிப்பு சந்தேகத்தைக் கொடுக்க, சட்டத்தரணி உஷாராக முன்னரே, பத்திரிகையாளராக இடி அமீனால் அனுப்பப்பட்டவர் கையில் பிஸ்டல் முளைத்திருந்தது.

எழுந்து ஓட முனைந்த நொடியில், பிஸ்டல் வெடித்தது. வெடிச்சத்தம் கேட்டு உள்ளே இருந்த ஆட்கள் ஓடி வருவதற்கு இடையில், அமீனின் ஆள் காரியத்தை முடித்துவிட்டு, காத்திருந்த காரில் ஏறி விரைந்துவிட்டார்.

காரின் இலக்கத்தைக் கவனிக்க முற்பட்டவர்களுக்கு ஏமாற்றம். காரில் இலக்கத் தகடே இருக்கவில்லை.

பேட்டியை பிரசுரிக்காமல் தகவல் தந்த பத்திரிகையாளருக்கு கார் ஒன்று பரிசளித்தான் இடி அமீன்.

**"தகவல் தந்ததால உனக்குக் கார். பிரசுரித்திருந்தால் இப்படியொரு காரால் அடித்தே உன்னைக் கொன்றிருப்போம்!"** என்று கூறி அமீன் நகைத்த விதம் பயங்கரமாக இருந்தது.

சட்டத்தரணி ஒருவரைத் தீர்த்துக்கட்டிய அமீன், இன்னொரு சட்ட நிபுணரான இபின்கிரா என்பவரை விடுதலை செய்து, ஐக்கிய நாடுகள் சபைக்கு தூதுவராக நியமித்தான்.

**"அவனுக்கு தோட்டா பரிசு, உமக்கு தூதர் பதவி! காரணம், அவன் முரண்டு பிடித்தான், நீர் பணிந்து நடந்தீர். ஒபேடே உமக்கும் எதிரி, எனக்கும் எதிரி. எதிரிக்கு எதிரி நண்பர்தானே!"**

"இல்லை. நாங்கள் உங்கள் அடிமை!" என்று குழைந்தார் சட்ட நிபுணர்.

அந்தச் சட்ட நிபுணரின் அழகான மனைவி முதல் நாள் இடி அமீனைத் தனியாகச் சந்தித்திருந்தாள்.

போகும்போது அவளும்: "நான் உங்கள் அடிமை!" என்றுதான் கூறிவிட்டுப் போனாள்.

இப்போது சட்ட நிபுணரும் அதையே சொன்னதால் அமீன் நினைத்தான்: 'குடும்பமே அடிமையாக இருக்கத்தான் ஆசைப்படுகிறது.'

அமீனால் கொல்லப்படுவோர் தொடர்பான தகவல்கள் வெளியே தெரியாமல் அமுக்கப்பட்டன.

அமீனின் தாராளகுணம் பற்றியே பத்திரிகைகளும் எழுதி வந்தன.

இடி அமீன் எங்கு சென்றாலும் மக்கள் வரவேற்க முண்டியடித்தனர். பரிசுகளும் வழங்கினார்கள்.

ஓரிடத்தில் 900 மாடுகள் வெகுமதியாகக் கொடுக்கப்பட்டன. மலைப் பாம்புகளையும் பிடித்துக் கொடுத்தார்கள்.

அமீன் மிருகக்காட்சிச் சாலை ஒன்றுக்குச் சென்றபோது மலைப் பாம்பு ஒன்றைக் கண்டான். கொழுத்த பாம்பு.

சுட்டு விரலை நீட்டிச் சொன்னான்: **"அது எனக்கு வேண்டும்!"**

அன்று மதிய உணவாக அமீனின் வயிற்றுக்குள் சென்றது.

இடி அமீனுக்கு புகழ்ச்சி என்றால் பிடிக்கும்; பெண்கள் என்றால் பிடிக்கும்.

அமீனிடம் காரியம் சாதிக்க விரும்பும் சில அதிகாரிகளும், அமைச்சர்களும் தங்கள் அழகிய மனைவியர் சகிதமே அமீனைச் சந்திக்கச் செல்வதுண்டு.

வங்கி ஒன்றில் உயர் பதவி நாடிய அதிகாரி ஒருவர் அமீனிடம் காரியம் சாதிப்பதற்காகவே அழகான இளம் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டார்.

பிரமாண்டமான சிலை ஒன்று இடி அமீனுக்காக நிறுவப்பட்டது.



**"எனக்கு ஏன் சிலை? என்னைவிட பெரிய மேதைகள் எத்தனையோபேர் இருக்கிறார்கள்; அவர்களுக்குச் சிலைவைக்கலாமே!"** என்று வீம்புக்காக அமீன் மறுத்தான்.

"இது மக்கள் விருப்பம். நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்!" என்றனர்.

**"மக்களின் கட்டளையை மீறவா முடியும்? சரி கட்டுங்கள்."**

கட்டப்பட்டது. சிலையைத் திறந்துவைக்கவும் அமீனையே அழைத்தனர்.



தருவது ரசிகன்

திறந்துவைத்த இடி அமீன் பிரமித்து நின்றான். மிகப் பிரமாண்டமாக, கம்பீரமாக அமைக்கப்பட்டிருந்தது உருவச் சிலை.

**"யார் இந்த சிலையைச் செய்தது?"** என்று அமீன் கேட்டதும், அந்தக் கேள்விக்கு என்ன அர்த்தம் என்று புரியாமல் சிலை செய்தவனும், சிலையை செய்வித்தவர்களும் நடுநடுங்கிப் போனார்கள்.

யார் பதில் சொல்வது என்ற அச்சத்தில் எவருமே வாய் திறக்கவில்லை.

**"என்ன தானாகவே முளைத்துவிட்டதா?"** என்று மீண்டும் இடியென்று கேள்வி ஒலித்தது.

"இ... இவர்தான்...!" என்று சிற்பியைக் காட்டிய அதிகாரியின் கைவிரல்கள் தடதடத்தன.

அடுத்து யாரும் எதிர்பாராத காரியம் ஒன்றைச் செய்தான் அமீன்.

இரண்டு அடி எடுத்துவைத்து சிற்பியை நெருங்கிய அமீன் அவனை வாரியணைத்துக் கொண்டான்.

அதன் பின்னர்தான் சிற்பிக்கும் அங்கு நின்றவர்களுக்கும் இதயத் துடிப்பு சீரானது.

சிற்பிக்கு மாளிகை போன்ற பெரிய வீடு ஒன்றைப் பரிசளித்தான்.

தனது தந்திரங்களுக்கு மக்கள் மயங்குவதைக் கண்ட இடி அமீன் தடாலடியான நடவடிக்கைகளைத் தொடர்ந்தான்.

தினசரிகளில் பரபரப்பாக வெளியானது மற்றொரு செய்தி.

**"முன்னாள் ஜனாதிபதி கபாகா இலண்டனில் காலமானார். அவரது உடல் உகண்டாவுக்கு எடுத்து வரப்பட்டு சகல அரச மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்படும்!"** என்பதுதான் அந்தச் செய்தி.

ஒபேடேக்காக ஜனாதிபதி கபாகாவை நாட்டைவிட்டு தப்பியோடவைத்த இடி அமீன், கபாகாவின் இறுதிச் சடங்கில் சோகமே உருவான முகத்துடன் கூறினான்:

**"ஒபேடே செய்த பெரிய குற்றம் இந்த நல்ல மனிதரைப் பதவியில் இருந்து கவிழ்த்ததுதான்!"**

இடி அமீன் அவிழ்த்துவிட்ட மற்றொரு பொய்யை அறிந்தபோது தன்ஸானியாவில் இருந்த ஒபேடே "அடப்பாவி!" என்றார்.

**"ஒபேடே ஜனாதிபதி கபாகாவை தீர்த்துக் கட்டுமாறு என்னிடம் கூறினார். நான் அதனை விரும்பவில்லை. சொன்னால் நம்பமாட்டீர்கள்! கபாகாவை பத்திரமாக இலண்டனுக்கு தப்பிச் செல்ல ஏற்பாடு செய்ததே நான்தான்!"** என்று அமீன் சொன்னதை சந்தேகிக்க ஆள் இருக்கவில்லை.

கபாகாவின் மரணச் சடங்குகள் முடிந்து இல்லம் திரும்பிய அமீனுக்கு அந்த இரகசிய தகவல் எட்டியது.

"ஒபேடேயின் நம்பகமான இராணுவ அதிகாரியான மேஜர் இம்மானுவேலை நீங்கள் தேடுகிறீர்கள்தானே?" ஒலித்தது பெண்குரல். கொஞ்சம் மயக்கமான குரல்.

**"ஆம், நீ யார்?"** என்றான் அமீன் அதிகாரமான தொனியில்.

**"அவரது காதலி!"** என்றாள்.

என்றவள் தொடர்ந்து: "இம்மானுவேல் இன்றிரவு நாட்டைவிட்டுத் தப்பிச் செல்கிறார். இதுவரை எங்கள் இல்லத்தில்தான் தலைமறைவாக இருந்தார்!"

**"உன்னை எப்படி நம்புவது?"**

"என்னை நம்ப வேண்டாம். என் தகவலை நம்பலாம்!" என்றவள் கார் இலக்கம், நிறம், தப்பிச் செல்லும் நேரம் அனைத்தும் கூறினாள்.

குறித்துக் கொண்ட அமீன்,

**"உனக்கு என்ன வேண்டும்? என்ன எதிர்பார்க்கிறாய்?"** என்றதுக்கு, அவள் சொன்னாள்:

"நீங்கள்!" அமீனுக்கு சியம்பாவின் செயலாளரது முகம் நினைவுக்கு வந்தது. சிரித்தான்.

**"வா!"** என்றுவிட்டு ஃபோனை வைத்தவன், மளமளவென்று உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

தகவல் உண்மை!

கார் ஒன்று பயங்கரவேகத்தில் செல்ல, அதனைத் துரத்திக்கொண்டு இராணுவ வாகனங்கள் விரைந்தன.

அன்றிரவு அந்த விபரீதம் நிகழ்ந்தது.

**(இடி தொடரும்)**

# இப்படியும் வளர்க்கிறார்கள்

மைக்கேல் ஜாக்சன் உலகப் புகழ் பெற்ற பொப் இசை சக்கரவர்த்தி.

'மைக் கேல் ஜாக்சனுக்கு குழந்தை பிறக்காது. அதனால் தான் அவர் மனைவி விவாகரத்து வாங்கினார்' என்று கூறப்பட்டது.

வந்ததே கோபம் ஜாக்சனுக்கு. டெபி என்ற பெண்ணை மாத வாடகைக்கு அமர்த்தி ஆண்குழந்தை ஒன்றை பெற்றுக் கொண்டார். பின்னர் அப் பெண்ணைப் பிடித்துப் போய்விட்டதால் மனைவியாக்கிக் கொண்டார். இப்போது ஜாக்சனின் இரண்டாவது குழந்தையை வயிற்றில் சுமக்கிறார் டெபி.



டெபியுடன ஜாகசன்

மைக்கேல் ஜாக்சன் தனது முதற் குழந்தையை எப்படி வளர்க்கிறார்? என்பதுதான் உலக மகா புதினச் செய்தி.

உலக மகா பணக்காரர்களில் ஒருவரான மைக்கேல் ஜாக்சனின் குழந்தையை கவனிக்க தினமும் ஆறு தாதிகள், ஆறு பணிப் பெண்கள் உள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள நெவர்லாந்து என்னும் இடத்தில் மிகப் பிரமாண்டமான மாளிகையில் ஜாக்சனும் அவர் குடும்பமும் வாழ்ந்து வருகின்றனர்.

அங்கு தனது குழந்தைக்காக தனி உலகம் ஒன்றையே உருவாக்கி வைத்திருக்கிறார் ஜாக்சன்.

குழந்தைக்கு கொடுக்கும் எந்தப் பொருளும் மருத்துவரீதியாகச் சுத்தம் செய்தபின்னரே அனுமதிக்கப்படும்.

ஒரு முறை குழந்தை பயன்படுத்தும் பொருட்களை- பொம்மை, உடைகள் உட்பட- மறுமுறை பயனபடுத்தக்கூடாது.

குழந்தை நடமாடும் அறைகள் பாதுகாப்பான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

குழந்தையைத் தொடவோ, முத்தமிடவோ யாருக்கும் அனுமதி கிடையாது. கண்ணாடி சன்னல் வழியாகவே குழந்தையைப் பார்க்கமுடியும்.

இதிலே கொடுமை என்ன தெரியுமா? தாய் டெபி குழந்தையை முத்தமிடக்கூட கட்டுப்பாடு இருக்கிறது. அவரது உடல் நிலையை முழுமையாக சோதித்த பின்னரே குழந்தையுடன் இருக்க அனுமதிக்கின்றனர்.

குழந்தை அழுதால் சிரிக்கவைக்கும் விதமாக பாடவும், ஆடவும் என்று தனியாக பெண்கள் உள்ளனர்.

பள்ளியில் சேர்ப்பது பற்றியும் இப்போதே யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டார் ஜாக்சன். பள்ளியில் ஏனைய குழந்தைகளும் இருப்பார்கள் அல்லவா. அதனால் வீட்டில் வைத்தே சுத்தமான முறையில் கல்வி கற்பிக்கப் போகிறாராம். என்ன மலைப்பாக இருக்கிறதா? என்ன செய்வது மலையைப் போல் பணம் குவிந்து கிடக்கிறதே.

# விமானத்தில் விபரீதம்

இலண்டனில் இருந்து தென் ஆபிரிக்கா வுக்குச் சென்ற விமானத்தில் ஒரு காண்றாவிக் காட்சி.



விமானத்தில் கிளப் கிளாஸ் என்பது தாராளமான ஆசனங்கள் கொண்டது. கிளப் கிளாஸில் ஒரு ஜோடி மிகத் தாராளமாக நடந்து கொள்ள ஆரம்பித்தது.

அங்கு இது சகஜம் என்றாலும், அந்த சகஜத்தையே மிஞ்சும் அளவில் 'இலவச ஷோ' காண்பிக்கத் தொடங்கிவிட்டனர். முத்தச் சத்தம் வேறு சக பயணிகளின் செவிகளில் பாய்ந்து கொண்டிருந்தது.

'புது ஜோடியாக்கும். ஜமாய்க்கட்டும்' என்று ஏனைய பயணிகள் விட்டுப்பிடித்தனர்.

ஆனால் விவகாரம் அத்தோடு முடியவில்லை. திடீரென்று வித்தியாசமான சத்தங்கள் கேட்க ஆரம்பித்தன. என்னவென்று பார்த்தால் நான்கு சுவருக்குள் நடத்த வேண்டியதை அங்கு நடத்தியது ஜோடி.

பயணிகள் எழுந்து போட்ட சத்தத்தில் ஜோடி கதிகலங்கியது. அந்த ஜோடியில் பெண்ணின் பெயர் ரீமா. இந்திய அழகிப் போட்டியில் வென்றவர்.

# டயானாவின் கடைசி நிமிஷம்

இளவரசி டயானா கார் விபத்தில் சிக்கிய கடைசிக் கட்ட தகவல் அடங்கிய புத்தகம் சமீபத்தில் வெளியாகியுள்ளது.



விபத்து நடந்த இடத்துக்கு முதன் முதல் விஜயம் செய்த பொலிஸ்காரர் கூறிய தகவல்கள் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

"டயானா உயிருக்காக மிகவும் போராடிக் கொண்டிருந்தார் மிகுந்த வலியால் துடித்துக் கொண்டிருந்தார்.

விபத்துக்கு உள்ளான காரின் முன் இருக்கைகள் இரண்டின் நடுவில் டயானாவின் தலைப்பகுதி இருந்தது. அந்த நிலையில் அவரது நண்பர் டோடி ஃபயட்டை அவரால் பார்க்க முடிந்திருக்கும்.

டயானா அந்தச் சூழ்நிலையில் நகர முற்பட்டார். கண்களைத் திறந்து பார்த்தார். ஏதோ முனகிக் கொண்டிருந்தார்.

டோடி இறந்து கிடப்பதைப் பார்த்த டயானா, 'கடவுளே கடவுளே...' என்று முனகினார் என நினைக்கிறேன். அப்போது தனது வயிற்றை தேய்த்துக் கொண்டார்" என்று செபாஸ்டியன் டார்சி என்னும் பொலிஸ்காரர் கூறியுள்ளார்.

# குழந்தைகள் ஜாக்கிரதை

'செல்ஃபோன் மற்றும் துப்பாக்கிகள் போன்ற பொம்மைகளில் இருந்து வரும் சத்தங்கள் குழந்தைகளை செவிடாக்கிவிடும்' என்று பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து அதிக சத்தம் போடும் பொம்மைகளை தடை செய்ய பிரிட்டனில் ஆலோசிக்கப்படுகிறது.

நம் நாட்டுக் குழந்தைகள் உண்மையான துப்பாக்கி மற்றும் குண்டுச் சத்தங்களை கேட்டுக் கொண்டிருக்கிறார்களே. இவற்றை தடைசெய்வது யார்?

# சுற்றுலா அழைப்பு திடுக்கிடும் தகவல்

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளை இழுக்க, செக்ஸ் கலந்த விளம்பரப் படங்கள் வெளிநாடுகளில் காண்பிக்கப்பட்டுள்ளன. இந்த திடுக்கிடும் தகவலை கொழும்பு ஆங்கில இதழ்களும் வெளியிட்டுள்ளன.



இலங்கைக்கு வரும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் செக்சுக்கு வாய்ப்புக்கள் உள்ளன. இலங்கை காமக் கலையில் தொன்மையான நாடு என்றெல்லாம் விளம்பரப் படம் ஒன்றில் சித்தரிக்கப்பட்டது.

சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் விளம்பரப் பொறுப்பை ஏற்ற நிறுவனம் ஒன்றுதான், மேற்கண்டவாறு விளம்பரப் படம் தயாரித்து அசத்தியிருக்கிறது.

போரினால் ஏற்படும் நிதி நெருக்கடியை தணிக்க, இலங்கையை 'காம தேசமாக' சித்தரிப்பதா? மானத்தை விற்பதா? என்று தென்னிலங்கையில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ளன.

ஜெர்மனியில் உள்ள இலங்கை சுற்றுலா வளர்ச்சித் துறை அதிகாரி ஒருவர்தான் மேற்படி விளம்பரப் படத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்து தகவலை தன் உயரதிகாரிக்கு தெரியப்படுத்தினாராம்.



படிப்பகம்

www.padippakam.com



## வோக்மென் ரி.வி.

↑ ஒரு காலத்தில் ஜேம்ஸ் பொன்ட் துப்பறியும் ஆங்கிலப் படங்களில் கற்பனையாக செய்து காட்டிய சமாச்சாரங்கள் எல்லாம் இப்போது உண்மையாகி வருகின்றன. அந்தளவுக்கு விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் தூள் கிளப்புகின்றன. படத்தில் இருப்பது வோக்மென் கலர் ரி.வி.

ரேடியோ, ஒடியோதான் இதுவரை காதில் பொருத்திக் கேட்க முடிந்தது. இனி வோக்மென் ரி.வி. ஒலி காதில் கேட்கும். ஒளி கண்ணில் தெரியும். இந்த வோக்மெனுடன் இணைக்கப் பட்டுள்ள நாடாதான் அண்டெனாவாகச் செயற் படும். கீழ்ப்பகுதியில் ஸ்பீக்கர் இருக்கிறது. 'சொனி' நிறுவனம் இதனைத் தயாரித்துள்ளது. ●

↓ உலகம் தோன்றிய காலத்திலிருந்து மரஞ்செடி கொடிவகைகள், உயிரினங்கள் யாவும் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து வந்துள்ளன. எந்தக் காலத்தில் எத்தகைய தாவரங்கள்- உயிரினங்கள் இருந்துள்ளன என்பதை இன்றைய ஆய்வாளர்கள் அறிந்து கொள்வதற்கு ஆங்காங்கே அகழ்ந்தெடுக்கப்படும் புதை வடிவங்களே உதவுகின்றன.

நிலத்தில் புதையுண்ட பிராணிகளின் வடிவ அமைப்பினை மட்டுமே கண்டெடுக்கலாம். உடலமைப்பு சிதைந்துவிடும். ஆனால் பனிப்பாறைகளுக்குள் சிக்கும் பிராணியின் உடலமைப்புக் கெட்டுப் போகாமல் சிதைவுறாமல் அப்படியே இருக்கும்.

அமெரிக்காவின் அலஸ்கா மாநிலம் பனிபடர்ந்த பிரதேசம். இங்கு ஒருவகை யானை இனம் வாழ்ந்திருக்கின்றது என்பதை விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். வெப்ப வலைய நாடுகளில் காணப் படுவது போலல்லாமல் கடும் குளிரைத் தாங்கக்கூடிய அடர்ந்த கம்பளிப் போர்வை போன்ற தோலுடன் கூடிய யானை இனம் இங்கு மிகப் புராதன காலத்தில் வாழ்ந்திருக்கிறது. போராடி தாக்குப்பிடிக் காமையால் அழிந்து போய்விட்டது. தற்போது இந்த இனத்தை காணவேமுடிய வில்லை. உறைந்த பனிப்படலங்களுக்குள் சிதைவுறாமல்- திசுக்கள் எதுவும் சிதறாமல் கண்டுபிடிக்கப்பட்ட கம்பளி யானைக்குட்டிதான் படத்திலுள்ளது. ■

## மூத்த யானை



## பலசாலியான அழகிகள்



↑ உலக அழகிப் போட்டி (மிஸ் வேல்ட்) பிரபஞ்ச அழகிப்போட்டி (மிஸ் யுனிவேர்சல்) போன்றவற்றில் போட்டியிடும் பெண்களுக்கு சவால்விடும் அழகிகள் இவர்கள்.


தென்கொரிய தலைநகரான சியோலில் இந்த அழகிகள் அணிவகுத்தனர். கட்டுடல் அழகிப்போட்டி என்பது இதன் பெயர். பயிற்சிகள் மூலம் உடலை திண்மையாக வைத்திருக்கும் இந்த கட்டுமஸ்தான அழகிகளின் கையால் ஒன்று வாங்கினால் போதும் உலக அழகியும், பிரபஞ்ச அழகியும் உடைந்து போவார்கள். காலாலும் வாங்கினால்...? ஹி...ஹி... காணாமலே போய்விடுவார்கள். பின்னர் கண்துடைப்புக்காக விசாரணை நடத்தவேண்டியதுதான்! ●




↑ சைக்கிளில் போகும்போது திடீரென்று மழை வந்தால் தொப்பல்தான்! அது பழையகதை. அடாது மழை பெய்தாலும் நனையாமல் விடாது சவாரி செய்யக்கூடிய சைக்கிள் இதோ வந்துவிட்டது.

பட்டன் ஒன்றை தட்டிவிட்டால் மழைக்கவர் விரிந்து கூடாரம் போல தொழிற்படும். இந்த புதியரக சைக்கிளில் முதலில் சவாரி செய்த பாக்கியம் மொடல் அழகி அலினாவுக்கு கிடைத்தது. கலோன்ஞ் நகரில் நடைபெற்ற சைக்கிள் கண்காட்சியில் இதனை அறிமுகம் செய்தனர். ஆனால் குண்டு மழைக்கு தாக்குப்பிடிக்காது. ■

## முத்த மரியாதை



→ உலகில் கிட்டத்தட்ட 360 கோடிப் பேரை பைத்தியம் பிடிக்க வைத்துக் கொண்டிருக்கிறது கால்பந்து திருவிழா. ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் ஆவேசமாக தங்கள் பிரிய அணிகளுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள்.

படத்தில் ஜமேய்க்கா நாட்டு கால்பந்து சூப்பர் ஸ்டார் டியோன் பேட்டன் அழகிகளின் அன்புப் பிடியில் பந்தாடப்படுகிறார். அவர் கன்னத்தில் தன் இதழ் கிண்ணத்தை பதிக்கிறார் ஒரு அழகி. முதன் முதலாக இந்த தடவைதான் உலக கிண்ணப் போட்டியில் ஜமேய்க்கா அணி பங்கு பெற்றுகிறது. அதற்கு முக்கிய காரணமான வீரர் என்பதால் இந்த முத்த மரியாதை! வண்டை மொய்க்கிறது மலர்க்கூட்டம். ■

## தகவல் பெட்டி

## டுசும்... டுசும்

↓ இரண்டு கங்காருகள் மோதிக் கொள்ளும் காட்சி இது. மனிதர்கள் மட்டும்தான் மல்லுக்கட்ட முடியும் என்று சட்டமா என்ன?

இந்த மோதலால் சுற்றுச் சூழல் பாதிக்காது. அழிவுகள் நேராது. கங்காரு என்ன குண்டோ போடப் போகிறது. ஜெர்மனி முனிச் நகர மிருகக்காட்சிச் சாலையில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

(தகவல்: அருண்)



## பயமுறுத்த அல்ல



↑ என்ன ஒரு கோர முகம் பார்த்தீர்களா?! இந்தியாவில் மும்பாய் நகரில் இந்த சிலை அமைக்கப்பட்டுள்ளது.

யாரை பயமுறுத்துவதற்கு? என்கிறீர்களா? பயமுறுத்தவல்ல, நினைவுறுத்த!

மும்பாயில் சில வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்பில் பலியானவர்கள் நினைவாக இதனை அமைத்துள்ளனர். இந்த ராட்சத முகச் சிலையின் உயரம் 12 அடி. பல உயிர்களை பலிவாங்கிய கோரத்தை முகத்தில் பிரதிபலிக்கவே இப்படியொரு சிலை வைத்துள்ளனர். நம்நாட்டில் என்றால், அதுவும் வடக்கு கிழக்கில் என்றால் குண்டுகளின் கோரத்தைக் காட்ட இப்படி எத்தனை சிலை வைக்க வேண்டியிருக்கும்?


படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 62

## விசித்ராவுக்காக நண்பர்கள் மோதல்
# 'வேல்' நடிகர் கொலை செய்தாரா?

தமிழக பொலிஸில் பெண் உயரதிகாரியாக இருப்பவரின் மகன் பிரபுதிலக். அவரது நண்பர் மதன். அவரும் பொலிஸ் அதிகாரி ஒருவரின் மகன்தான்.

பிரபுதிலக் ஒரு படத்தில் நாயகனாக நடிக்க விசித்ரா ஜோடியாக நடித்தார். இளம் கன்றான பிரபுதிலக்குக்கு விசித்ராவின் கவர்ச்சிப் புயல் முன்பாக தாக்குப்பிடிக்க முடியவில்லை. சரணாகதியடைந்தார்.

இருவரும் பாலும் நீரும் போல ஒன்று கலந்தனர். திருமணம் செய்ய ஏற்பாடுகளும் நடந்தது. பின்னர் பொலிஸ் அதிகாரியின் அதிரடி நடவடிக்கைகளால் அது தடைப்பட்டது. படமும் பாதியில் நின்றது.

விசித்ரா பிரபுதிலக்கின் நண்பரான மதனைத் தொடர்புகொண்டார். பிரபு திலக்கை சந்திக்காமல் தன்னால் இருக்க முடியாது என்று புலம்பினார்.

பிரபுதிலக்குக்கும் விசித்ராவுக்கும் இடையே தூதுபோய்க் கொண்டிருந்த மதனுக்கும் விசித்ராமீது ஆசை ஏற்பட்டது.

தன் ஆசையை ஜாடை மாடையாக தயங்கித் தயங்கிக் கூறினார் மதன். விசித்ராவோ 'இதற்குத்தான் இத்தனை தயக்கமா?' என்ற தோரணையில் மதனையும் தனது கட்டிலறைவரை அனுமதித்தார்.

தூதுபோனவனே தூள் கிளப்ப தொடங்கியதால் விசித்ராவும் பிரபுதிலக்கை மறந்து மதனுடன் ஐக்கியமானார்.

இதனை அறிந்த பிரபுதிலக் மதனுக்கு பாடம் புகட்ட அடியாட்களை ஏற்பாடு செய்தார்.

இதற்கிடையே மதன் சப்-இன்ஸ்பெக்டர் வேலைக்கு தெரிவு செய்யப்பட்டார். தனது தாயாரின் செல்வாக்கை பயன்படுத்தி அந்த வேலை கிடைக்காமல் செய்துவிட்டார் பிரபுதிலக்.

### கடத்தல்

நடிகை அம்பிகாவின் தம்பியான சுரேஸ் வீட்டுக்கு மே 24ம் திகதி மதன் சென்றார். இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது, ஒட்டோவில் வந்த கும்பல் ஒன்று வீட்டுக்குள் புகுந்து மதனை குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டுபோனது.

தனியான இடம் ஒன்றில் வைத்து உருட்டைக் கட்டைகளால் விளாசினர். மதனின் கால் உடைந்துவிட்டது.

இச் சம்பவம் தொடர்பாக பிரபுதிலக்கின் தாயாரின் கார்ச்சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால், மதன் மூலமாக பொலிஸ் உயரதிகாரிகள் சிலருக்கும் விசித்ராவுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டுள்ளது. உயர் அதிகாரி ஒருவருக்கு விசித்ரா கொடுத்த விருந்தால் தான் மதனுக்கு சப்-இன்ஸ்பெக்டர் வேலையே கிடைக்க இருந்ததாம். அந்தளவுக்கு விசித்ரா பலே திறமைசாலி.

அதனால்தான் நண்பர்கள்கூட தங்களுக்குள் குஸ்தி போடுகிறார்கள்.

முன்பு ஆட்டோ சங்கர் விவகாரத்திலும் தமிழக பொலிஸ் உயரதிகாரிகள் சிலரது பெயர்கள் அடிபட்டன.

உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு முன்னணி நடிகைகள் சிலரை ஏற்பாடு செய்து கொடுப்பதும் ஆட்டோ சங்கரின் தொழில். அந்த நேரத்தில் பிரபலமாக இருந்த சகோதர நடிகைகள் இருவரை பலருக்கு அறிமுகம் செய்து வைத்தவன் ஆட்டோ சங்கர். சகோதர நடிகைகளில் ஒருவர் கிருஷ்ணனின் காதலியின் பெயர் கொண்டவர்.

உயர் பொலிஸ் அதிகாரிகளது மகன்களும் அப்பா பெயரைச் சொல்லிக் கொண்டு சில நடிகைகளை பணிய வைத்து காரியம் பார்த்து விடுவர்.

பொலிஸ் அதிகாரிகளையோ அவர்களது பிள்ளைகளையோ கைக்குள் போட்டு வைத்திருப்பது பலவிதங்களில் பயன்படும் என்பதால் நடிகைகளும் முகம் சுழிப்பதில்லை. ஒசியிலேயே சேவை செய்கிறார்கள்.

●●

### வேல் நடிகர் வால் ஆட்டினாரா?

தமிழகத்தில் இருந்து வெளியாகும் சினிமா இதழ் ஒன்றின் ஆசிரியர் பொலிசில் புகார் செய்துள்ளார்.

அந்த ஆசிரியரை கொலை செய்ய ஆள் அனுப்பினாராம் நகைச்சுவை 'வேல்' நடிகர்.

குறிப்பிட்ட பத்திரிகை ஆசிரியர்மீது 'வேல்' நடிகரும் பொலிசில் புகார் கொடுத்திருக்கிறார்.

'வேல்' நடிகருக்கு சொந்தமான மணி மங்கலம் தோட்டத்தில் ஒரு பெண் வேலை செய்தார். மது போதையில் அப் பெண்ணை படுக்கைக்கு அழைத்தார் 'வேல்' நடிகர். பெண் முரண்டு பிடித்தார். அந்த இழுபறியில் பணிப்பெண் இறந்துவிட்டார்.

அந்த விஷயம் வெளியே பெரிதாகாமல் பணத்தை கொடுத்து அமுக்கிவிட்டார் வேல் நடிகர். இந்த திடுக்கிடும் தகவலை வெளிவிட்டது குறிப்பிட்ட சஞ்சிகை. அதன் பின்னரே வேல் நடிகருக்கும், பத்திரிகை ஆசிரியருக்கும் இடையே முறுகல் நிலை ஆரம்பமானது. ஏட்டிக்குப் போட்டியாக பொலிசில் புகார் கொடுத்து வருகிறார்கள்.



சங்கவி





மோகன்லால்

## காதோடு ...

பிரியமான ராமன் பெயர் கொண்ட நடிகை கடற்கரையில் காலையில் குலுங்கிக் குலுங்கி ஜாக்கிங் ... அதே நேரம் ஜாக்கிங் போக வந்த தொழிலதிபர் ஒருவ... மலர்ந்தது. இப்போது இருவரும் மகா நெருக்கமாம்.

அந்த நட்சத்திரத் தம்பதிக்கு தமிழ் சினிமா உலகில் கி... பட்டம் கிளு கிளு தம்பதி. மகள்மார், மகன் என்று பல ... தந்திருப்பதோடு தாமும் நடித்து கலைச்சேவை புரிகிறார் ... நடிகர்கள் பலரது அன்பைப் பெற்றுள்ள 'ப்ரீ'யான மகளு... யோசனை சொல்ல, அப்பா சபாஷ் போடுவாராம். அது... கிளு தம்பதி என்று பட்டம் சூட்டிவிட்டனர்.

கன்னடப் பட உலகில் முதலிடத்தில் இருப்பவ... இவருக்கும் ஆக்ஷன் கிங்குக்கும் இடையே ஒட்டுதல் உருவ... சென்னை தியாகராஜா நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில்... காணப்படுகின்றனர். நடிகரின் செயலாளர் என்ன கூறுகி... விவாதத்துக்காக ஒன்று கூடுகிறார்கள். அடுத்த படத்தில் ஜோடி சேரப் போகிறார்கள்", என்கிறாராம்.

'சரச' குமார நடிகர் தனக்... காதல் பிரிவையும், அரசியல் ... யும் ஆராய சோதிடர் ஒரு... னாராம். சோதிடர் நடிக... ஆங்காங்கே இடித்து... சொல்லியுள்ளாராம்.



பாண்டியராஜன்-மயூரி
படம்: கும்பகோணம் கோபாலு





ஸ்ரீகாந்த்-ரவளி-ரோஜா

## ரஜினி முழுக்கு?

அடுத்த படத்துடன் சினிமாவுக்கு ரஜினி முழுக்கு என்று ஒரு செய்தி.

அடுத்த படமே கிடையாது. முழுக்குப் போட்டுவிட்டார் என்பது இன்னொரு செய்தி.

இரண்டுமே தவறான செய்தி என்பதே உண்மை.

ரஜினியின் அடுத்த படத்துக்கான கதை விவாதங்கள் முடிவடையும் நிலையில் உள்ளன. சென்னைக்கு பக்கத்தில் உள்ள ரஜினிக்கு சொந்தமான இயற்கை எழில் கொஞ்சும் தோட்டத்தில் இரவு வரை கதை விவாதம் தொடர்கிறது. தினமும் காலையில் அங்கு செல்கிறார் ரஜினி.

பரபரப்புக்காக சில தமிழக சஞ்சிகைகள் அப்படி செய்தி போட்டுள்ளன. படங்களில் நடிப்பதை வெகுவாக குறைத்துள்ளாரே தவிர, முற்றாக கும்பிடு போடமாட்டார் என்று ரஜினிக்கு நெருங்கிய வட்டாரங்கள் கூறியுள்ளன.

எனவே ரஜினி ரசிகர்கள் கவலையை துடைத்துக் கொள்ளலாம்.

## சூப்பர் ஹிட்

தெலுங்கில் சூப்பர் நாயகரான நாகார்ஜுனா 'பாட்சா' படத்தை இயக்கிய சுரேஸ் கிருஷ்ணா இயக்கத்தில் நடித்த 'ஆட்டோ டிரைவர்' சக்கை போடு போடுகிறது.

இப் படத்தின் பிரமாண்ட வெற்றியால் மீண்டும் நாகார்ஜுனாவின் காட்டில் அடைமழை.

வேகமாக முன்னேறிவந்த நாகார்ஜுனா நடிகைகள் சகவாசம் அதிகமானதால் கவனம் சிதறினார். தற்போது மறுபடியும் எழுந்திருக்கிறார்.

## 'கண்ணால் பேசவா'

விஜயகுமார், மஞ்சுளா தம்பதியின் வாரிசுகளில் ஒருவரான அருண்குமார், அடுத்து நடிக்கும் படம் 'கண்ணால் பேசவா' ஜோடி இன்னமும் முடிவாகவில்லை.

இயக்கம்: ராஜ் கண்ணா, இசை: தேவா, மணிவண்ணன், வடிவேலு, இந்து, சின்னி ஜெயந்த், மனோரமா ஆகியோரும் நடிக்கின்றனர்.

## கௌரவ விஜயகாந்த்

லிவிங்ஸ்டன்; தேவயானி இணைந்து நடிக்கும் படம் 'உனக்கும் எனக்கும் கல்யாணம்' இப்படத்தை விஜயகாந்தின் நண்பர் இப்ராகிம் ராவுத்தர் தயாரிக்கிறார்.

இப்படத்துக்காக வித்தியாசமான பாத்திரம் ஒன்றில் கௌரவ நடிகராகத் தோன்றுகிறார் விஜயகாந்த்.

## 'ஹலோ'

பிரபுதேவா நடிக்க சத்யராஜின் முன்னாள் மனேஜர் ராம நாதன் படம் தயாரிப்பதாக கூறியிருந்தோம் அல்லவா. படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'ஹலோ'

கதாநாயகியைத்தான் வலை விரித் தேடுகிறார்கள். அநேகமாக மும்பாயில் இருந்து இறக்குமதி செய்யக்கூடும்.



மும்தாஜ்
படம்: மோனிஷா

## கஜோல் வர்ணனை

'மின்சாரக் கனவு' படத்தின் மூலம் தமிழிலும் ஏராளம் ரசிகர்கள் கஜோலுக்கு. தமிழ் ரசிக ஜொள்ளர்கள் பலர் கஜோலுக்கு ஜொள் ஒழுக கடிதம் போட்டனர்.

தமிழ் தெரியாத காரணத்தால் தமிழ் நண்பர் ஒருவரிடம் கடிதங்களை காண்பித்து விளக்கம் கேட்டாராம் கஜோல்.

சில கடிதங்களை படித்ததும் அந்த நண்பருக்கு தர்மசங்கடமாக போய்விட்டதாம். கஜோலை அந்த மாதிரி வர்ணித்திருந்தார்களாம் ஜொள்ளர்கள்.

## 'கிளு கிளு' உ...

"எப்ப திரும்பி வந்த?"

"காலையில்தான்!"

"டெல்லி எப்படி இருந்துச்சு?"

"வெரி நைஸ்"

"எனக்கு இங்கே ஒரே பசி"

"(க்ளுக் சிரிப்புடன்) சாப்பிட வேண்டியதுதானே?"

"கண்ட இடத்திலயும் சாப்பிட பயமா இருக்கு"

"ஏன்.... ஒய்ஃப் வீட்டில் இல்லையா?"

"இருக்கா. ஒரே மாதிரியான சாப்பாடு அலுத்துப் போச்சு.

www.padippakam.com

# ...ாலலுகிறோம்

...னைக்
...னார்.
... நட்பு
...துள்ள
...களை
இன்று
அம்மா
... கிளு
...ரேமா.
...ள்ளது.
...க்கடி
"கதை
வரும்
...ற்பட்ட
...வியை
நாடி
வீட்டை
கட்டச்

இளையதிலகம் வாங்கிக் கொடுத்த நிலம் 'பூ' நடிகையின் பெயரில் இதுவரை இருந்தது. அந்த நிலத்தை இளைய திலகத்திடம் கொடுத்துவிடுமாறு சுந்தர இயக்குநர் கட்டளையாம். உடனே திருப்பிக் கொடுத்துவிட்டார் நடிகை.

தெலுங்கில் முன்னணி வகித்து, தமிழிலும் பிரபலமான 'நாக' நடிகர், அர்ஜுனன் அம்பு விடுவது போல காதல் அம்பு எய்வதில் கெட்டிக்காரர். இவருடன் நடிக்கும் நடிகைகள் நிலைதான் பரிதாபம். எப்போது நடிகர் அழைத்தாலும் அங்கு ஆஜராக வேண்டும். இல்லையானால் தூக்கிவிடுவார் படத்திலிருந்து.

காதல் கோட்டை நாயகி படப்பிடிப்பில் கலந்து கொண்டால் ஹீரோ பாடு கொண்டாட்டம். நடிகையின் தாய்க்குலம் விதம் விதமாக சமைத்துக் கொண்டு வந்து ஹீரோவுக்கும் சேர்த்து விருந்து போடுவாராம்.

கஸ்தூர நடிகையை தமிழ் மன்னன் பெயர் கொண்ட இயக்குநர் அழைத்தாராம். வாய்ப்புக் கிடைக்கப் போகிறது என்ற நம்பிக்கையில் பறந்து போனார். இயக்குநரோ அவருடன் அன்பாக நகமும், சதையுமாக இருந்துவிட்டு காலையில் கூறினாராம், "நான் உங்கள் ரசிகன். அது தான் உங்களை நாடினேன், நீங்கள் விரும்பினால் என் படத்தில் ஹீரோயினுக்கு அக்காவாக நடிக்கலாம், சான்ஸ் தருகிறேன்." நடிகை கடும் கோபத்தில் இத் தகவலை வேறொரு இயக்குநரிடம் பொரிந்தாராம்.



## நம்மவர் கரண்

'நம்மவர்' படத்தில் கமல் வில்லனாக அறிமுகம் செய்தவர் கரண். இப்போது கதாநாயகன். குஷ்புவுடனும் டூயட் பாடி ஆடிவிட்டார்.

சில படங்களில் கதாநாயகனாக நடித்தாலும்கூட, தொடர்ந்தும் கதாநாயகனாக நடிப்பேன் என்று அடம் பிடிக்கும் ரகமல்ல. நல்ல பாத்திரம் எது கிடைத்தாலும் நடிப்பேன்" என்கிறார்.

"தயவு செய்து எனக்கு கதாநாயக முத்திரை குத்திவிடாதீர்கள். நல்ல கதைகளில் கதை நாயகனாக நடிக்கவே விரும்புகிறேன். என்றும் கூறுகிறார்.

## வெளிநாட்டு மாப்பிள்ளை

பானுப்பிரியாவின் தந்தை அடிக்கடி 'தோல்' வியாபாரத்தில் கைதாவதால், பானுப்பிரியாவை மணக்க யாரும் முன்வரவில்லை.

"அவருக்கும் எமக்கும் தொடர்பில்லை, அவர் செய்யும் 'தோல்' வியாபாரத்தோடு தொடர்பில்லை" என்று பானுப்பிரியா கூறுவதை யாரும் நம்புவதில்லை.

பிரபலங்களுக்கு தினுசு தினுசாக பெண்களை விநியோகம் செய்வதுதான் அவரது தொடர் தொழில் அதனால் உள்ளூர் மாப்பிள்ளைகள் பானுப்பிரியாவுக்கு கிடைக்கவில்லை. அமெரிக்காவுக்கு நடன நிகழ்ச்சி ஒன்றுக்கு சென்றபோது ஆதர்ஷ் கவுல் என்ற துடிப்பான இளைஞர் சந்தித்தார். காதல் மலர்ந்தது. அப்படியே வளர்ந்து திருமண முடிவை எட்டிவிட்டது.

அந்த இளைஞர் கம்பியூட்டர் என்ஜினியராக இருக்கிறார்.

## அப்பாஸ் சீற்றம்

அப்பாஸ் என்றாலே இளம் ரசிகைகள் ஜொள்ளு விட்டது பழைய கதை. இப்போது அப்பாஸ் மார்க்கெட் தமிழில் கவிழ்ந்துவிட்டது.

மள மளவென்று படங்களை ஒப்புக்கொண்டதும், நல்ல கதைகளைத் தேர்வு செய்யத் தவறியதும் தான் வீழ்ச்சிக்கு காரணமா? என்று கேட்டால், அப்பாஸ் சீறுகிறாராம்.

"தேடி வந்து ஒப்பந்தம் செய்து பணம் தருகிறார்கள். வாங்கிக் கொள்கிறேன். நாளை மார்க்கெட் போனால் சொந்த ஊர் திரும்பி பரோட்டா கடை வைத்து நடத்துவேன். எனக்காக யாரும் வருத்தப்பட வேண்டாம்" என்கிறார்.

## இழுத்தடிப்பு

சத்யராஜ் ஜோடியாக மந்த்ரா நடித்த படம் 'கல்யாண கலாட்டா.' அப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கையில் மந்த்ரா தெலுங்கில் படு பிஸி. அதனால் சத்யராஜ் உட்பட அனைவரும் மந்த்ராவுக்காக காத்திருக்கிறார்கள்.

தெலுங்கில் மந்த்ராவின் சம்பளம் 12 இலட்சம். தமிழில் அவ்வளவு கொடுக்க மாட்டார்கள். அதுதான் இழுத்தடிக்கிறார்.



கரண்-நீனா
படம்: கண்ணாத்தாள்





கஜோல்

முகப்பில் சுப்ரஜா
படம்: 'உள்ளத்தைக் கிள்ளாதே'
வினீத்-நீரஜா விஜயகுமார்
படம்: 'காதல் சங்கமம்'

## ஜோதி-சுப்ரஜா

முகப்பில் சிகப்பு ஆடைக்குள் உடல் மறைத்திருப்பவர் சுப்ரஜா. ஆந்திர மாநில அழகி. சினிமா ஆசையில் சென்னைக்கு பறந்து வாய்ப்புத் தேடினார்.

சொந்தப் பெயர் ஜோதி. சினிமா வாய்ப்பு கிடைத்ததும் மாற்றிக்கொண்ட பெயர்: சுப்ரஜா

'உள்ளத்தைக் கிள்ளாதே', 'என் காதல் புதுசு', 'காதல் ஓர் ஆலயம்' போன்ற படங்களில் கதாநாயகி வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. ஒரு படம் கூட வெளியாகாமல் இருக்கையில் தன் திறமையாலும் நெளிவு சுழிவான அணுகுமுறையாலும் பல பட வாய்ப்புக்களை கொத்தியிருக்கிறார் சுப்ரஜா.

## விரைவில் டும் டும்

ராம்கி, நிரோஷா காதல் கிசுகிசுவா அடிபட்டு, பின்னர் பகிரங்கமான சமாச்சாரமாகி, அதன் பின்னர் தோல்வியில் முடிந்து, அதன் பின்னர் மீண்டும் கூடலாகியது.

விஜயசாந்தியின் ஆஸ்தான, சகல விதத்திலும் அடக்கமான ஹீரோவாக இருப்பவர் ராம்கி. விஜயசாந்தியின் அனுமதியோடு நிரோஷாவை விரைவில் திருமணம் செய்யப்போகிறார் என்று தகவல்.

## சிம்ரானின் காவலர்

நடிகை சிம்ரான் படப்பிடிப்புக்கு வரும்போது தாய்க்குலம் அல்லது தந்தைக்குலம் கூடவே வருவது வழக்கம். இப்போது அப் பொறுப்பை தலைமேல் சுமப்பவர் பிரசாத்.

யார் இந்த பிரசாத்? பிரபுதேவாவின் சகோதரர்களில் ஒருவர். இன்னொரு சகோதரரான ராஜு சுந்தரம் சிம்ரானை சீரியசாக நேசிக்கிறார்.

"சேச்சே அவருக்கு விரைவில் திருமணமாகப் போகிறது. எனக்கும் அவருக்கும் தொடர்பு கிடையாது" என்று சிம்ரான் சொன்னாலும், விஷயத்தை மறைக்க முடியுமா? பிரசாத் ஏன் காவலுக்கு வரவேண்டும்?

## சங்கவி வதந்தி

தெலுங்கு பட இயக்குநருடன் இரகசிய திருமணம் நடந்ததாக வெளியான செய்தி கலப்படமில்லாத வதந்தி என்கிறார் சங்கவி.

"யாரோ என்னை ஓரம் கட்டுவதற்காக வதந்திகளைப் பரப்புகிறார்கள். எனக்கும் காதலிக்க ஆசைதான். காதலிக்கக் கூடிய ஆண் யாரும் என் கண்ணில் படவில்லை." என்கிறார். அப்படிக் கூறுவதுதான் சந்தேகத்தை துரிதப்படுத்துகிறது.

## ...ரையாடல்

...டகாசமாக ஒரு டின்னர்
...க்குமா?"
"ம்ஹூம்..."
"ஏன்?"
"ஹோட்டல் லீவு, வெள்ளிக்
...மை .:.போன் பண்றேன்"
இந்த உரையாடலில் பங்கு
...ண்டவர்கள் நான்கெழுத்து
...ல் கோட்டை நடிகையும், பூப்
...ன்ற மனதுடைய மணியான
...குநரும். இயக்குநர் வட்டாரம்
...ம் இத் தகவல் பத்திரிகை
...ாரத்துக்கு கசிந்ததாம்.

## ஆடினால் இலட்சம்

பிரபலமாக இருக்கும் நடிகைகள் ஒரு பாடலுக்கு கவர்ச்சியாக நடனம் ஆடுவது ஏன்? குஷ்பு, கௌதமி, ரம்பா என்று ஒரு பாடலுக்காக் கவர்ச்சி நடனம் ஆடிய நடிகைகள் பட்டியல் நீண்டு கொண்டிருக்கிறது.

'காதலர் தினம்' படத்தில் தொடையழகி ரம்பா ஒரு பாடலுக்கு நடனம் ஆடுகிறார்.

ஏன் ரம்பா? என்று கேட்டால் "ஏ.ஆர். ரகுமான் இசைக்கு ஆட வேண்டும் என்று ஆசை. அதனால்தான் ஆட ஒப்புக்கொண்டேன்" என்று பொய் சொல்லுகிறார்.

உண்மையான காரணம் பணம் ஒரு பாடலுக்கு ஆட ஊதியம் எவ்வளவு தெரியுமா? இந்திய மதிப்பில் பத்து இலட்சம்.

## கவர்ச்சி மீன்

தெலுங்கில் தயாராகும் சூர்யவம்சம் படத்தில் மீனா கவர்ச்சியில் புகுந்து விளையாடுகிறார்.

தெலுங்கில் காலூன்ற வேண்டுமானால் கவர்ச்சி காட்டியே ஆகவேண்டும். மீனா தெலுங்கில் கண் வைத்து ஆடைகளை குறைக்கத் தொடங்கியிருப்பதால், அங்கு ஏற்கனவே கலக்கிவரும் சௌந்தர்யா போன்ற நடிகைகள் கலங்கிப்போயுள்ளனர்.

## பிச்சைக்காரன்

'புதுமைப்பித்தன்' படத்தில் நான்கு வித்தியாசமான பாத்திரங்களில் தோன்றுகிறார் பார்த்திபன். அதில் ஒன்று பிச்சைக்காரன் வேடம்.

பார்த்திபனுக்கு ஜோடிகளாக ரோஜா, கௌதமி, தேவயாணி ஆகியோர் நடிக்கன்றனர். புது மண மகள் கௌதமி ஒப்புக் கொண்டபடி நடிப்பாரா தெரியவில்லை. முக்கிய வேடத்தில் ரஞ்சித் நடிக்கிறார்.

## பின்னடிப்பு

குடும்பப் பாங்கான பாத்திரங்களில் நடித்து முன்னுக்கு வரத் தொடங்கியவர் அஞ்சு அரவிந்த். யார் கண்பட்டதோ பின்னடைந்துவிட்டார்.

மலையாளப் படத்தில் நடிக்கப் போன இடத்தில் இயக்குநருடன் லவ்விக் கொண்டார். காதல் நோயில் விழ்ந்ததால், தொழிலில் ஈடுபாட்டைக் காட்ட முடியவில்லை.


படிப்பகம்

www.padippakam.com

## உயிரின் ஊடுருவல்

என் உயிர் வடிவம்
எங்கே உள்ளது-
எப்படி உள்ளது!
▫▫
என்னை நோக்கி
என்னுள் நோக்கி
எங்கும் நோக்கி
எதுவும் காண்கிலேன்!
▫▫
எல்லாம் ஆன்மா
எல்லாம் இறைவன்
என் வடிவமும்-
எல்லார் வடிவமும்
▫▫
பணங்கள் தேடி
பாவங்கள் தேடி
பகைகள் தேடி
பரிதவிக்கின்றோம்.
▫▫
எது பொய்?
எது மெய்?
▫▫
எல்லா மதத்திற்கும்
எப்போதும்
தேடல் முக்கியம்!
ஆத்மீகத் தேடல்!
▫▫
நீண்ட நாட்களான
எனது தேடல்
நிறைவு பெற்றது!
▫▫
தேடுதல்களில்
தேவையற்று
அகப்பட்டு-அடி
வாங்கியபோது...!

சுபா வரன்-கண்டி.

## ஏக்கத்திலும் அவள்

அவளை நெருங்கும் போதும்,
விலகும் போதும்
நனவுகள் தூரமாகின்றன-
கனவுகள் கண்கலக்கின்றன.

என் எண்ணச் சிதறுபடிகளில்,
எதுவுமே ஊடேறவில்லை-
அவளைத் தவிர!

தியானி மனது இறைவன் போல்,
கருவிழி காணும் போதும்
காற்றோடு புறப்பொருள் அசையும் போதும்,
இருதயம துடிக்கும் போதும்,
உதடுகள் உச்சரிக்கும் போதும்,
செவிப்பறை மடுக்கும் போதும்,
மூக்கு சுவாசிக்கும் போதும்-
ஒவ்வொன்றிலும்
அவளின் பிரதிபலிப்புக்கள்!

ஐயோ!
நான் உலகின்
மற்றைய மகத்துவமெல்லாம்,
உணராது முதிர்ந்து விடுவேனோ,
என்று ஏங்கினேன்-
ஏக்கத்திலும் அவளே எட்டிப் பார்த்தாள்!

(ஈச்சையூர்ச் சிவா)

## மயிலுக்கு ஒரு தூது!

பிரபஞ்சமே
என்னைப்(ப்)
பழித்துப் பேசட்டும்;
நீ மட்டும்
பழிக்கா விட்டால் போதும்!
**
தாகித்தால் சொல்!
தண்ணீர் கிடைக்காவிட்டால்
என்
இதயத்தை(ப்)
பிழிந்து தருகிறேன்;
உன்
தாகம் தீரக்குடி!
**
பசியெடுத்தால் சொல்!
பகலவனைத் திருடி வந்து
சமைத்துத் தருகிறேன்;
உன்
பசி தணியப் புசி!
**
நகை வேண்டுமானால் சொல்!
நட்சத்திரங்களை(க்)
களவாடி வந்து
ஆபரணங்கள்
செய்து தருகிறேன்;
உன்
ஆசை தீர அணி!
**
ஆடை வேண்டுமானால்
சொல்!
வானவில்லை
வாங்கித் தருகிறேன்;
உன்
ஆசை தீர
உடுத்திக் கொள்!
**
இத்தனையும்
போதாதென்றால்
என்
உயிரையே
உனக்கு
உயில் எழுதித் தருகிறேன்!
**
ஆனால்...
எனக்கென்று
நீ
எதையும் செய்ய வேண்டாம்;
நான்
இறந்துபோகும்வரை-
உன்
இதயத்தை மட்டும்
இரவலாய்க் கொடு!

காவத்துமுனை- ஹாறூன்.

## 'நாம் மட்டும்'

நேற்று இன்றாகி, இன்று
நாளையாகியபடி தொடர,
இளவரசி டயானாவும், அன்னை
தெரேசாவும்
இறந்து நாட்கள் வாரங்களாக,
ரொனி பிளேயர் பிரதமராகியும்
ஹொங்கொங் சுதந்திரமாகியும்
இன்றுடன் வாரங்கள்
மாதங்களாக,
இஸ்ரேலும் பலஸ்தீனமும்
சமாதான உடன்படிக்கை
செய்து பல வருடங்களாக,
நாம் மட்டும் இந்த யுத்தத்தால்
நிற்கிறோம் அனாதைகளாக!

செல்வி அபிராமி வன்னியகுலம்,
திருக்கோணமலை.

# அப்பா பிள்ளைகள்



பாகிஸ்தான் பிரதமர் பூட்டோவும், இந்தியப் பிரதமர் இந்திராவும் 1972ல் கைகுலுக்கிக் கொண்ட காட்சி.

புன்னகைப்பதும், முறைப்பதும், முரண்டு பிடிப்பதும், இடைக்கிடையே பொருதிக் கொள்வதும் இந்திய-பாகிஸ்தான் உறவுகளில் சுழற்சி முறைக் காட்சிகள்.

அமெரிக்காதான் இந்தியா-பாகிஸ்தான் முறுகல் நிலை தொடர முக்கிய காரணம். பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி விடும்.

இங்கே படத்தில் பூட்டோவின் பின்னால் நிற்கும் அழகான இளம் பெண் யார் தெரிகிறதா? பூட்டோவின் அருமை மகளும், பின்னர் பாகிஸ்தான் பிரதமருமான பெனாசீர் பூட்டோவேதான். ஆக, மூன்று பிரதமர்கள் இப் படத்தில்.

இந்திராவுக்கும், பெனாசீருக்கும் இடையே பல ஒற்றுமைகள். அதில் ஒன்று: இருவரும் அப்பா செல்லம்-அப்பா வழியில் அரசியலிலும் புகுந்து தந்தைக்குப் பின் பிரதமரானவர்கள். ▣



## தேன் கிண்ணம்

### நீ தந்த நினைவுகள்

தோழி!
அன்பை யாசித்த
எனக்கேன்
இந்தப் பிரிவை
விட்டுச் சென்றாய்...?
••
பிரிவு
நிச்சயம்
என்று
தெரிந்தபோது!
சுவாசக்காற்று-
நெஞ்சக்குழிக்குள்
சிக்கிகொண்டது!
••
என்
உள்ளத்தில்
ஓராயிரம்
சோகங்கள்
மௌன யாத்திரை
போக தினம்
விழிகள்
வடிக்கும்
கண்ணீர் மழை!
••
ஒவ்வொரு
நிமிடமும்
மறக்க முயலும்
உன்
ஞாபகங்கள் மீண்டும்
உன்னையே
நினைவூட்டுகின்றன!
••
யுகம்
யுகமாய்
என்னுள்
அடைகாக்க
எண்ணிய
நம் நட்பு-
தேய் நிலவாய்
ஆனாலும்
பூதம் காத்த
புதையலாய்
உன்
நினைவுகளை நெஞ்சக்குள்ளே
பத்திரப்படுத்தி வைப்பேன்,
தோழி!

அகிலா ஜெகதீஸன்- வவுனியா.

## பேனா நண்பர்கள்



பெயர்:
கே. குகதாசன்,
வயது: --
முகவரி: 505, காலி வீதி,
கொழும்பு-03.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
எஃப். பத்மா மாலினி,
வயது: --
முகவரி: 46/47, செண்ட் அன்டனீஸ் வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
பொழுது போக்கு:
நாவல், பத்திரிகை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(05.07.1998 தொடக்கம் 11.07.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

மிதுனம் - சூரியன்.
கர்க்கடகம் - புதன்.
சிம்மம் - இராகு.
கும்பம் - கேது.
மீனம் - வியாழன்.
மேடம் - சனி.
இடபம் - செவ்வாய், வெள்ளி.

சந்திரன்- துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- விண்குறை கேட்டல், காரியத்தடை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, உறவினர் உதவி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- முயற்சி பலிதம், மனக்குறை நீங்கும். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| புதன்- இனசன நன்மை, வெளியிட வாசம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, தொழில் உயர்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- மனக்குறையகலும், பணவரவு. | பி.ப. | 1 | மணி |
| சனி- வீண் அலைச்சல், அந்நியர் பகை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சுகம், காரியசித்தி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, பணக் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழக்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- மனப்பயம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, கௌரவ மிகுதி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, பொருள் விரயம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- இனசன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | பகல் | 11 | மணி |
| சனி- வீண் துயர், உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சுகம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| புதன்- அந்நியர் நட்பு, காரிய சித்தி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, தொழில் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| சனி- செலவதிகம், கடன் தொல்லை. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, ஆடம்பரச் செலவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, கடன் தொல்லை. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வீண் விரோதம், மனக் கவலை. | பகல் | 11 | மணி |
| புதன்- துயர் நீங்கும், செய்தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், முயற்சி தடை. | பி.ப. | 2 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, அந்நியர் நட்பு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வீண் செலவு, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- வீண் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன மகிழ்ச்சி, குடும்ப சுகம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, செலவதிகம். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| புதன்- உறவினர் உதவி, பயனுள்ள செயல். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வீண் செலவு, கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| சனி- அந்நியர் உதவி, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, அந்நியர் நட்பு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- வீண் அலைச்சல், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- செய்தொழில் விருத்தி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- பணக் கஷ்டம், கடன் படல். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், குடும்ப சுகம். | பி.ப | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பொருள் இழப்பு, மனக் கவலை. | பகல் | 11 | மணி |
| புதன்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| சனி- பெரியோர் நட்பு, பலவித பேறு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் முயற்சி, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| புதன்- செலவு மிகுதி, கடன் படல். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- வீண் அலைச்சல், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, தொழில் உயர்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- முயற்சி பலிதம், பொருள் வரவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, பயனுள்ள பிரயாணம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், தொழில் உயர்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், வீண்குறை கேட்டல். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், மனப் பயம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

www.padippakam.com

# குழந்தைகளும் பற்களும்

குழந்தைகளின் பற்களைக் கவனத்துடன் பராமரிக்க வேண்டியது பெற்றோர்களின் முக்கிய கடமையாகும். பற்களைக் கவனமாகப் பராமரிக்காமல் விட்டால், குழந்தைகளின் பற்கள் கெட்டு, பார்க்கவே அசிங்கமாகிவிடும்.

குழந்தைகளுக்கு 8 மாதம் ஆகும்போது பல் முளைக்கத் தொடங்குகிறது. அப்போதிருந்தே, பற்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். ஆனால் 8 மாதத்திலேயே பற்கள் வெளியே தெரிவதில்லை. அவை வெளியே தெரிய மேலும் கொஞ்சகாலம் ஆகும்.

சிறு வயதில் குழந்தைகளின் பல்லுக்கு கெடுதல் ஏற்படுத்தக் காரணமாக இருப்பது பால் போத்தல்கள்.

இனிப்பு கலந்த பாலையோ, பழச் சாறையோ போத்தல்களில் அடைத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்கும்போது, அவை வெகு நேரம் வாய்க்குள்ளே தங்குகின்றன. அதனால் குழந்தையின் பிஞ்சுப் பற்களுக்குச் சேதம் ஏற்படுகிறது. தொட்டிலிலோ, கட்டிலிலோ குழந்தைகளைக் கிடத்தி அதன் வாயில் பால் நிரப்பிய போத்தலைச் செருகி விட்டு, தன் வேலைகளைப் பார்ப்பதிலே கவனமாக இருக்கின்ற பெண்கள், தங்களது குழந்தையின் பற்கள் கெட்டுப்போகும் என்பதை உணர வேண்டும். பால் போத்தலை வாயில் வைத்திருக்கும் குழந்தை அமைதியாகப் பாலைக் குடித்தபடியே இருக்கும். அப்போது வாயில் கெட்டியாக நிற்கும் பாலால் பற்கள் கெடுகின்றன.

குழந்தைகளின் பற்கள் பெரிதாக வளர்ந்த பின்பே அதனைச் சுத்தப்படுத்த வேண்டும் என்று தாய்மார்கள் நினைக்கிறார்கள். அது தவறு. சிறு பற்களாக இருக்கும்போதே சுத்தப்படுத்தலாம். அதற்கு ஏற்றபடியான மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

குழந்தைக்குப் பாலோ உணவோ கொடுத்த பின்பு



சுத்தமான துணியை தண்ணீரில் நனைத்து குழந்தையின் ஈறுகளைத் துடைத்துச் சுத்தம் செய்ய வேண்டும். இதைக் காலை-மாலை என்று இருவேளைகள் மட்டும் செய்யாமல் உணவு கொடுத்த பின்பு ஒவ்வொரு தடவையும் செய்து வருதல் நல்லது.

உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால் குழந்தைகளின் வாயில் பால் போத்தலைக் கொடுத்துத் தூங்கச் செய்யாதீர்கள். குழந்தை தூங்கி விடும்போது பால் அப்படியே வாயில் கெட்டியாகி விடும்.

பால் வாய்க்குள் கொட்டாமல் இருந்தாலே, குழந்தைகளின் பற்களுக்கு சேதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம்.

சில பகுதிகளில் தண்ணீரில் புளோரைட் குறைவாக இருக்கும். அதுவும் பற்களைப் பாதிக்கும். அதற்கு பல் டாக்டரிடம் ஆலோசனை பெற்று மருந்துண்ண வேண்டும்.

# முத்தான முகம்

மனதின் கண்ணாடி முகம். அதனால் முகம் எந்நேரமும் பொலிவாக இருத்தல் அவசியம். முகப் பொலிவை ஏற்படுத்திக் கொள்வது எப்படி?



* காலை-மதியம்-இரவு; மூன்று நேரமும் தினமும் குளிர்ந்த நீரில் முகம் கழுவுங்கள்.

* இரண்டு கை நிறைய தண்ணீரை வாரி முகத்தில் நன்றாக அடியுங்கள். முகம் கழுவும் எல்லா நேரத்திலும் சோப்புப் போடக்கூடாது. முடிந்தளவு சோப்பின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும்.

* இரவில் முகம் கழுவும்போது பெண்கள் மஞ்சள் தேய்த்துக் கழுவினால் முகப் பொலிவு அதிகரிக்கும்.

* இரவு தூங்கும் நேரத்தில் முகத்தில் பவுடர் மேக்-அப் எதுவும் இருக்கக்கூடாது. அவைகளைக் கழுவி நீக்கிவிட்டே தூங்க வேண்டும்.

* தக்காளி அல்லது வெள்ளரிக்காயை வட்டமாக வெட்டி முகத்தில் ஒட்டி வையுங்கள். 30 நிமிடம் அப்படி வைத்துவிட்டு, பின்பு குளிர்ந்த நீரால் முகம் கழுவுங்கள். தினமும் இப்படிச் செய்தால் முகத்தில் சுருக்கங்கள் ஏற்படாது.

* அதிகமாகக் கோபமும் ஆத்திரமும் கொள்கிறவர்களுக்கு முகச் சுருக்கம் அதிகம் ஏற்படும். அதனால் கோபம், ஆத்திரத்தைப் போக்கிவிட்டு எப்போதும் சிரித்த முகத்தோடு இருங்கள்.

* பெண்களுக்கு மூக்குத்தி அணிவதற்கு முன்னால் அது அவசியமா என்று ஆலோசிக்க வேண்டும். அணிய வேண்டும் என்றாலும் மூக்கின் அளவுக்கு அழகு சேர்க்கும் விதத்தில் பொருத்தமான மூக்குத்தியை தேர்ந்தெடுத்து அணிய வேண்டும்.

* முக அழகுக்கு முக்கியமாக இருப்பது கண்கள். அதனால் கண்களுக்கு மேக்-அப் போடும்போது கவனமாகக் குறைந்த அளவே மேக்-அப் போடவேண்டும். கை நிறைய தண்ணீரை வாரிக் கண்ணோடு சேர்த்து அடிக்கடி வைப்பது நல்லது. அப்படிச் செய்தால் கண்ணுக்குக் குளிர்ச்சியும் பொலிவும் கிடைக்கும்.

* காலையிலும் மாலையிலும் 10 முறை வாயில் தண்ணீரை வைத்து, வாயை பலூன் மாதிரி ஆக்கித் தண்ணீரைக் கொப்பளியுங்கள். தண்ணீர் வைக்காமல் பலூன் மாதிரி வாயை ஊதவும் வைக்கலாம். இவ்வாறு செய்தால் முகச்சுருக்கம் ஏற்படுவது தாமதமாகும். முகம், பார்ப்பதற்குப் பொலிவுடன் காணப்படும்.

* பற்களையும் உதட்டையும் எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

பெண்களுக்கு முக அழகே முக்கியமான அழகு.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** DZ

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 11-07-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# 42 கண்ணீரில் கரைந்த இரவுகள்

**புவனா**

டயானா தன் சிநேகிதி கரோலினை இரகசியமாகச் சென்று சந்தித்ததை கிசுகிசு விவகாரமாக்கியது அரச குடும்பம்.

டயானா அச் செய்தியால் முதலில் அதிர்ந்த போதும் பின்னர் சுதாகரித்துக் கொண்டு பதிலடி கொடுத்தார்.

"சாள்ஸ் போன்ற ஒருவரை கணவனாகப் பெறும் பெண்களுக்கு ஆண்களை வெறுக்கும் தான். அந்த நம்பிக்கையில்தான் சாள்ஸின் நண்பர்கள் சிலர் என்மீது சந்தேகப்படுகிறார்கள்!" என்றார்.



அதன் பின்னர் டயானா தன் சிநேகிதிகளை சந்திப்பது பற்றி சாள்ஸின் வட்டாரம் மூச்சு விடவில்லை.

### குறையாத ஆதரவு

அன்ட்ரு மோட்டன் எழுதிய டயானாவின் கதை பத்திரிகைகளில் வெளியாகத் தொடங்கிய பின்னர் டயானா வெளியே பகிரங்கமாக நடமாடுவதைக் குறைத்துக்கொண்டார். தவிர்த்துக் கொண்டார் என்றும் கூறலாம்.

அக் கதையால் தனக்கு பாதகம் ஏதும் ஏற்படாது என்று நம்பியபோதும், சங்கடம் காரணமாகவே வெளியே செல்வதைத் தவிர்த்தார்.

தொடர்ந்து அவ்வாறு இருக்க முடியாது என்பதால், மறுபடி தனது சமூக சேவைகளைத் தொடர எண்ணினார்.

மோர்சிசைட் என்ற இடத்தில் இருந்த வயதான ஏழை நோயாளர்கள் விடுதிக்குச் சென்றார்.

முன்புபோல வரவேற்பு இருக்காது என்று உள்ளூரச் சங்கடப்பட்டுக்கொண்டே சென்றார்.

அந்த விடுதியின் முன்னால் கண்ட காட்சி டயானாவுக்கு ஆச்சரியம் தந்தது.

பல நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு குழுமியிருந்தனர். பூச்செண்டுகள் சகிதம் அவர்கள் தங்கள் இளவரசிக்காகக் காத்திருந்தனர்.

காரைவிட்டு டயானா இறங்கியதும் முன்பைவிட பல மடங்கு உற்சாகமான வரவேற்பை எதிர்கொண்டார்.



பூச்செண்டுகளை புன்னகையுடன் பெற்றுக் கொண்டும், நலம் விசாரித்துக் கொண்டும், குழந்தைகளின் கன்னத்தில் கிள்ளிவிட்டுக் கொண்டும்-நீண்ட நாட்களின் பின்னர் உற்சாகத்தில் நனைந்தார் டயானா.

கூடியிருந்த மக்களின் முகங்களில் காணப்பட்ட அனுதாப உணர்ச்சியும் ஆறுதலாக இருந்தது.

அடக்கமாட்டாமல் டயானாவின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

### உண்மையான அன்பு

அந்த விடுதிக்குள் இருந்த வயோதிபர்களுடன் பரிவோடு உரையாடினார். தொட்டுத் தடவினார்.

விளம்பரத்திற்காகவும், புகைப்படத்திற்கு போஸ் கொடுப்பதற்காகவும் அங்கு விஜயம் செய்த பெரிய இடத்துப் பிரமுகர்கள் பலரை அந்த வயோதிபர்கள் கண்டிருந்தனர்.

அதற்கெல்லாம் மாறாக, இதயத்தின் அடியில் இருந்து எழும் அன்பு டயானாவினுடையது என்பதை அவர்கள் உணர்ந்து நெகிழ்ந்தனர்.

டயானாவை நெகிழவைக்கும் சம்பவம் ஒன்றும் அங்கு நடந்தது.

வயோதிபமாது ஒருவர் டயானாவை அணைத்து முகத்தை தடவியவண்ணம்: "சிறு பெண்ணாக இருக்கிறாயே! நீ எப்படியம்மா இத்தனை துயரங்களையும் தாங்கிக் கொள்கிறாய்?" என்று கேட்டு கண்ணீர் சிந்தினார்.

தனது தாயாரின் நினைவுதான் வந்தது டயானாவுக்கு. குபுக்கென்று கண்ணீர் வந்துவிட்டது. அந்த மாதுவை அணைத்தபடி அழுதார் டயானா.

டயானாவின் சிநேகிதிகள் அவரைப் பற்றி கூறுகையில்: "டயானா ஒரு சிறந்த நடிகை; தன்னுடைய தனிப்பட்ட துயரங்களை வெளிக் காட்டாது, எதுவும் நடவாதது போல நடந்து



# கோமகனின் கடிதங்கள்

கொள்ளக்கூடியவர்!" என்று சொல்வதுண்டு.

அப்படிப்பட்ட டயானாவால்கூட தன் உணர்ச்சிகளை மறைத்துக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்கள் இருந்தன.

### கோமகனின் கோபம்

டயானாவுடன் அரச குடும்பத்தில் பரிவோடு நடந்து கொண்டவர் எடின்பரோ கோமகன்.

தனது மாமனாரான எடின்பரோ கோமகன் மீது டயானாவும் அன்பு கொண்டிருந்தார்.

மகாராணியாலும், புத்திரர் சாள்ஸ்சினாலும் அலட்சியப்படுத்தப்படும் ஒருவராகவே கோமகன் இருந்தார்.

எனினும் அரச குடும்ப கௌரவம் என்னும் போலித்தனம் அவரையும் ஆட்டிப்படைத்தது.

சாள்ஸும், டயானாவும் பிரிந்தால் அரச குடும்பம் நெருக்கடிக்கு உள்ளாகும் என்று தீர்மானித்த மகாராணியும், கணவர் எடின்பரோ கோமகனும் விவாகரத்துக்கு சம்மதிப்பதில்லை என்று முடிவு செய்தனர்.

கோடை காலத்துக்கான அரச குடும்ப நிகழ்ச்சிகள் அப்போது ஆரம்பமாகி இருந்தன.

இக் காலகட்டத்தில் அரச குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் வின்சர் மாளிகையில் ஒன்றாகக் கூடியிருக்க வேண்டும் என்பது சம்பிரதாயம்.

தமது விவாகரத்துக்கு அரச குடும்ப அனுமதியைப் பெற இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று நினைத்தார் டயானா.

சாள்ஸ் விவாகரத்துக்கு சம்மதம் தெரிவித்துவிட்டதால், மகாராணி உட்பட அரச குடும்பத்தினரும் சம்மதிப்பர் என்றே டயானா நம்பியிருந்தார்.

அந்த நம்பிக்கையில் இடி விழுந்தது. 'முடியவே முடியாது!' என்று விட்டனர் மகாராணியும் அவர் கணவரும்.

அதிலும் டயானாவை ஆச்சரியப்படுத்தியது கோமகனின் கோபம்.

எடின்பரோ கோமகன் டயானாவுக்கு நான்கு கடிதங்களை எழுதியிருந்தார்.

அக் கடிதங்களை எழுதியது அவர்தானா? அல்லது மகாராணியின் தூண்டுதலின்பேரில் எழுதப்பட்டதா? என்றுகூட டயானா சந்தேகப்பட்டார்.

டயானாவின் நிலை குறித்து எவ்வித அனுதாபமும் அக் கடிதங்களில் காணப்படவில்லை.

விவாகரத்துக்கு முழுமையான மறுப்பாகவும், கண்டனமாகவும் அக் கடிதங்கள் இருந்தன.

சாள்ஸ் விவாகரத்துக்கு இணங்கியதால் மகிழ்ச்சியடைந்த டயானா, எடின்பரோ கோமகனின் கடிதங்களால் கவலையுற்றார்.

"இந்த நரகத்தில் இருந்து மீட்சியே இல்லையா?" என்று தன் அறைக்குள் சென்று தனிமையில் கிடந்து கண்ணீர் விட்டுப் புலம்பினார்.

அத்தனை துயரத்தின் மத்தியிலும் அரச குடும்ப விழாக்களில் கலந்துகொண்டார்.

கோடைகால நிகழ்ச்சிகளில் படைகளின் அணிவகுப்பு விழாதான் முதல் நிகழ்ச்சி.

பின்னர் அஸ்கொட் குதிரைப் பந்தயம் போன்ற பல நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக கோடை காலம் முழுவதும் நடைபெறும்.

முதல்நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சாள்ஸையும், டயானாவையும் பலரும் உற்று நோக்கினார்கள்.

இருவரும் எவ்வாறு நடந்து கொள்ளுகிறார்கள்; ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்களா? புன்னகை பூக்கிறார்களா? அனுசரணையாக நடந்து கொள்கிறார்களா, என்றே சகல கண்களும் அவர்கள்மேல் மொய்த்தன.

ஆனால், விழா முடியும்வரை இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கவும் இல்லை; புன்னகை பூக்கவும் இல்லை.

அருகருகே போடப்பட்ட இருக்கைகளில் அமர்ந்திருந்தபோதும் தப்பித் தவறிக்கூட திரும்பிப் பார்த்துக் கொள்ளவில்லை.

### பிரிந்தனர்

விழா முடிந்த பின்னர் சம்பிரதாயப்படி இருவரும் ஒன்றாகவே வெளியேறி, இளவரசருக்குச் சொந்தமான ஒஸ்ரின் மார்ட்டின் காரில் ஏறி ஒன்றாகவே சென்றார்.

விழாவுக்கு வந்திருந்தவர்களை ஏமாற்ற நடந்த நாடகம் போலவே அது அமைந்தது.

சில மைல் தூரம் சென்றதும் டயானாவின் கார் நிறுத்தப்பட்டிருந்தது. வண்டியை நிறுத்தச் சொல்லி இறங்கிய டயானா தனது காரில் ஏறிப் பறந்துவிட்டார். சாள்ஸிடம் சொல்லிக் கொள்ளவும் இல்லை.

அந்த விழாவில் இருந்து புறப்படும்போது, மகாராணியும், கோமகனும் அமர்ந்திருந்த பகுதியைத் தாண்டியே டயானாவும், சாள்ஸும் சென்றனர்.

அவர்களை நோக்கி சிறு புன்னகைகூட உதிர்க்காமல் டயானா சென்றதையும் பல கண்கள் காணத்தவறவில்லை.

### சட்ட ஆலோசனை

டயானாவின் அந்தரங்கக் காரியதரிசியின் பெயர் பட்ரிக் ஜெ.்சன். தனது சிநேகிதிகள் மூலமும், அந்தரங்கக் காரியதரிசி மூலமும் பிரபல சட்ட நிபுணர் ஒருவரை தொடர்பு கொண்டார் டயானா.

இளவரசர் சாள்ஸ் தனக்குச் செய்த கொடுமைகள் தொடர்பாக ஆதாரங்களோடு விபரித்திருந்தார். தான் மட்டுமல்லாமல், தனது குடும்பத்தாரும் ,சாள்ஸ் மற்றும் அவரைச் சார்ந்தவர்களால் அவமானப்படுத்தப் பட்டதாகவும் டயானா தனது பதில் கடிதத்தில் கூறியிருந்தார்.

டயானாவின் கடிதம் கூட நிபுணரின் ஆலோசனைப்படிதான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது அரச குடும்பத்தினருக்குத் தெரிந்து விட்டது.

டயானாவை முடக்கிப்போடும் திட்டம் ஒன்று தயாரானது.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**மன்னார் வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் **S. அந்தோனியம்மா,**
C/O வில்லியம், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



**தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்**
இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 08

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.

❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.

❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com



குளிர்சுவைப் பாட்டிசைத்தே - சுரர்
குலத்தினிற் சேர்ந்திடல் விரும்புகின்றோம்!
அச்சமும் துயரும் என்றே - இரண்டு
அசுரர்வந் தெமையிங்கு சூழ்ந்து நின்றார்!
-சுப்பிரமணிய பாரதியார்.



## பாப்பா முரசு சிறுகதை

## மண்குடமும் பித்தளைக்குடமும்

ஓர் ஆற்றில் இரண்டு பெண்கள் தண்ணீர் எடுக்கச் சென்றார்கள். இருவரும் ஆற்றில் குடத்தைச் சரித்து தண்ணீர் எடுக்க முயலும் போது, இரண்டு குடங்களையும் ஆற்று நீர் இழுத்துக் கொண்டு சென்றது.

ஆற்று நீரால் இழுத்துச் செல்லப்பட்ட குடங்களில் ஒன்று பித்தளைக்குடம், மற்றது மண்குடம். இரண்டு குடங்களும் ஆற்றின் நடுவே பயணம் செய்து கொண்டிருந்தன.

அப்போது பித்தளைக்குடம் மண் குடத்திடம்,

"இவ்வளவு காலமும் நாம் இருவரும் அடிமைகளாக இருந்தோம். இப்போது எமக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது. இனி மேல் நாம் எமது இஷ்டப்படி இருக்கலாம். நாம் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து இந்த ஆற்றில் வலம் வரலாம்" என்று கூறியது. ஆனால் மண்குடமோ, பித்தளைக் குடத்தைப் பார்த்துப் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது. மண்குடத்தின் தயக்கத்தைக் கண்ட பித்தளைக்குடம்,


"என்ன நண்பா! ஏன் தயங்குகிறாய்? என் நட்புக்கிடைக்க நீ கொடுத்து வைத்திருக்கவல்லவா வேண்டும்?"

இவ்வாறு கூறியபடி மண்குடத்தின் அருகில் சென்றது. ஆனால் மண்குடமோ பித்தளைக் குடம் அருகில் நெருங்கி வர வர ஒதுங்கி ஒதுங்கிச் சென்றது.

"ஏன் நண்பா! ஏன் என்னை விட்டு நீ விலகி விலகிச் செல்கிறாய்?" என்று மறுபடியும் கேட்டது பித்தளைக்குடம்.

"உங்களைவிட்டு நான் விலகியிருப்பது தான் எனக்கு நல்லது. உங்கள் நட்பு எனக்கு ஒத்து வராது," என்று இவ்வளவு நேரமும் மௌனமாக இருந்த மண்குடம் சொன்னது.

"நீ சொல்வது எனக்கு விளங்கவில்லையே?" என்றது பித்தளைக் குடம்.



"நீங்கள் என்மீது மோதினாலோ, அல்லது நான் உங்கள் மீது மோதினாலோ சுக்கு நூறாக உடையப் போவது நான் தான். அதுதான் உங்களது நட்பு எனக்கு ஒத்துவராது என்று சொன்னேன்," என்றது மண்குடம்.

மண்குடம் சொன்னதைக் கேட்ட பித்தளைக்குடம், அந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளாமல் மறுபடியும் மண் குடத்திற்கு அருகே செல்ல முற்பட்டது.

"உனக்கு இப்போது யாரும் இல்லாததால் என் நட்பை நாடுகிறாய். உன் குணம் தெரிந்தும் உன்னோடு நட்பு வைத்துக் கொண்டால் பாதிப்பு எனக்குத்தான்." என்று கூறி அவ்விடத்தை விட்டு வேகமாக அகன்றது மண்குடம்.

**ஒருவருடைய சுயரூபத்தை நன்கு அறிந்த பின்னரும் கூட, அவரோடு நட்புக் கொள்வது முட்டாள்தனம். துஷ்டரைக் கண்டால் தூர விலகுவதுதான் புத்திசாலித்தனம்!**

## அதிசயம் - ஆனால் உண்மை!



**குட்டி போடும் மீன்:**

'விமியா விட்ட டாட்டா' என்னும் மீன் முட்டை இடுவதற்குப் பதிலாகக் குட்டிகள் போடுகின்றது. இந்த மீன் இனத்தில் ஒரு மீன் சிக்காக்கோ மீன் காட்சியகத்தில் இருந்தது.இது ஒரு தடவையில் 242 மீன் குட்டிகள் போட்டது.

**யானைத் தந்த சிப்பி:**



கடலுக்கடியில் 10 ஆயிரம் அடி ஆழத்தில் காணப்படும் ஒரு விதமான கடல் சிப்பியின் புறவோடு யானையின் தந்தம் போன்று காணப்படும்.



**700 வயது ஆலை:**

இங்கிலாந்து நாட்டின் ஸோர் நதிக்கரையில் நீர் விசையாலை ஒன்று 700 ஆண்டுகளுக்கு மேலாக எவ்வித பிரச்சனையுமின்றி தொடர்ந்து இயங்கி வருகிறது.



**செண்ட் க்யூரினஸ் வணக்கஸ்தலம்:**

லக்ஸம்போர்க்கில் அமைந்த இந்த வணக்கஸ்தலம் ஒரு மலையைக் குடைந்து கட்டப்பட்டதாகும்.

## வாரம் ஒரு நாடு

## கிரிபேட்டி

தலைநகர் - பைரிகி
பரப்பு - 861 சதுர கிலோ மீட்டர்.
மக்கள் தொகை - 78.000
மொழி - கில்பெர்ட்டீஸ், ஆங்கிலம்
எழுத்தறிவு - 90%
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - அவுஸ்திரேலிய டொலர்
தனிநபர் வருமானம் - 700 டொலர்

**அமைவிடம்:**

மத்திய பசிபிக் தீவுக் கூட்டங்களே கிரிபேட்டி. இங்கு சுமார் 33 தீவுகள் உள்ளன. இவற்றில் பல தீவுகளில் மனிதர்கள் வசிப்பதில்லை.

**வரலாறு:**

பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்த கில்பேர்ட் தீவுகள் 1979ம் ஆண்டு ஜூலை




மாதம் 11ம் திகதி கிரிபேட்டி என்ற பெயருடன் சுதந்திரமடைந்தன.

**பொருளாதாரம்:**

மொத்தப் பரப்பில் 50% விவசாயமாகும். தேங்காய், ஈரப்பலா போன்றவை முக்கிய விளைபொருட்களாகும். மீன் பிடித்தல் உபதொழில். பொஸ்பேட் அதிகமாகக் கிடைக்கிறது. கொப்பராவும், பொஸ்பேட்டும் முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.07.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 252**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 250

**பரிசுக்குரியவர்:**
**அம்பிகா செல்வநாயகம்,**
**பெண்கள் உயர்தரப் பாடசாலை, கண்டி.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஏ.எல். முகமட் றஸ்மி,<br>ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்., திருகோணமலை. | செல்வி நிரோசினி குசலராஜா,<br>நு/ ஹைலண்ஸ் மத்திய கல்லூரி, அட்டன். |
| நித்தியா ஸ்ரீ சுப்பிரமணியம்,<br>மகளிர் உயர்தரப் பாடசாலை, கண்டி. | ரெபேக்கா பர்னாந்து,<br>ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13. |
| கி. ஷர்மினா,<br>இ/சீ.சீ. தமிழ் வித்தியாலயம், பலாங்கொடை. | பாத்திமா பர்வீன்,<br>உடபடலாதெனிய, மடவள பஸார் |
| என். காயத்திரி,<br>விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13. | ஜீ. ஹேமானந்த்,<br>பாரதி வீதி, 2ம் குறுக்கு,- மட்டக்களப்பு. |
| பீ.எம். பாத்திமா நுஸ்கியா,<br>ஹம்சா வேக்கரி ஒழுங்கை, சாய்ந்தமருது-03. | பா. சந்துரு,<br>சாந்தஜோன் மகா வித்தியாலயம், மட்டக்குளி. |

## எலிசபெத் அண்டர்சன்

இங்கிலாந்து நாட்டின் தலைநகரான இலண்டனில் 1836ம் ஆண்டு பிறந்தவர் எலிசபெத் அண்டர்சன். இவர்தான் இங்கிலாந்தின் முதல் பெண் மருத்துவர் என்ற பெருமைக்குரியவர்.

இவர் தனது 22வது வயதில் மருத்துவராகப் படிக்க விரும்பினார். ஆனால் அந்தக் காலத்தில் மருத்துவராகப் பயிற்சி பெற, ஆண்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எலிசபெத் அண்டர்சன் முதலில் இலண்டன் நகரில் உள்ள மிடில்செக்ஸ் மருத்துவமனையில் சேர்ந்து தாதியாகப் பயிற்சி பெற்றார். பின்னர் பல இடையூறுகளுக்கு மத்தியில் படித்து 29வது வயதில் மருத்துவரானார்.

மருத்துவரான பின் இவர் ஏழைகளுக்காக மருத்துவமனை ஒன்றைத் தொடங்கினார். பெண்களை மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கக் கோரி இவர் போராட்டம் நடத்தினார். இவரது போராட்டத்தின் விளைவாக 1876ம் ஆண்டு இங்கிலாந்தில் பெண்கள் மருத்துவர்களாகப் பயிற்சி பெற சட்டம் இயற்றப்பட்டது.




எலிசபெத் அண்டர்சன் இங்கிலாந்தின் முதல் பெண் மருத்துவர் என்ற பெருமையுடன், இங்கிலாந்தின் முதல் பெண் மேயர் என்ற பெருமையையும் பெற்றவர் ஆவார்.

## தேசியப் பூங்கா

***தேசியப் பூங்கா என்றால் என்ன?**

வனவிலங்குகள், வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவியல் சம்பந்தப்பட்ட இடங்களை ஒதுக்குப்புறமான இடத்தில்-அந்நாட்டின் பெருமையைப் பறை சாற்றும் வண்ணம் பாதுகாக்கப்படுவதை தேசியப் பூங்கா என அழைக்கிறார்கள்.



***முதல் தேசியப் பூங்கா எங்கு நிறுவப்பட்டது?**

அமெரிக்காவில் உள்ள 'வயோமிங்' என்ற இடத்தில் 1872 ம் ஆண்டு அமைக்கப்பட்ட 'யெலோ ஸ்டோன்' தேசியப் பூங்காதான் உலகின் முதல் தேசியப் பூங்கா.

***மிகப் பெரிய தேசியப் பூங்கா எங்கே உள்ளது?**

ஆபிரிக்காக் கண்டத்தில் உள்ள தேசியப் பூங்காக்கள்தான் உலகிலேயே மிகப் பெரியவை. ஏராளமான வனவிலங்குகள் உள்ளதால் உலகம் முழுவதிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளின் மனதை மிகவும் கவர்ந்துள்ளன.

தென் ஆபிரிக்காவில் உள்ள 'ரகர் தேசியப் பூங்கா'வும் கென்யாவில் உள்ள 'சாவோ தேசியப் பூங்கா'வும்தான் உலகிலேயே மிகப் பெரிய தேசியப்பூங்காக்கள் ஆகும்.

## இராட்சத முட்டை

இந்த இராட்சத முட்டைகள் ஜெர்மனியில் உள்ள 'டசல்டோர்ஃப்' நகர கண்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.



உலகின் பெரிய தீவுகளில் ஒன்று மடகஸ்கார். இங்குள்ள பறவைகளில் மிகப் பெரியது 'ஏபியோர்னிஸ்' என்ற பறவை.

முன்னொரு காலத்தில் வாழ்ந்த இப்பறவை இனம் இப்போது இல்லை. இந்தப் பறவைகளின் முட்டைதான் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. உப்பு மணல்களிலும், ஏரியோரங்களிலும், ஆற்றின் முகத்துவாரங்களிலும் இம்முட்டைகள் பலவற்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள். இந்தப் பறவையின் ஒரு முட்டையின் நீளம் 30 சென்டிமீட்டர். இது 6 தீக் கோழிகளின் முட்டைகளுக்குச் சமமாகும். 148 சாதாரண கோழி முட்டைகளுக்குச் சமமான அளவு.

## குரோமைட்

குரோமியத்தின் ஒரே தாது குரோமைட் ஆகும். இது படிக வடிவத்தில் கிடைக்கிறது. குரோமைட் ஒளியை உமிழக்கூடிய ஓர் உலோகம் ஆகும். இது பெரும்பாலும் கறுப்பு நிறத்திலேயே காணப்படுகின்றது.

குரோமைட் இலேசான காந்தத் தன்மை கொண்டதாகும். இரும்புக் கலவைக்கு



வலிமையூட்ட அதனுடன் குரோமைட் கலக்கப்படுகிறது.

ஜெட் விமான எஞ்ஜின்கள், பெயிண்ட் தயாரிக்கவும், தோல் சுத்திகரிப்புக்கும் குரோமைட் பயன்படுத்தப்படுகிறது.

குரோமைட்டின் மூலமான குரோமியம் சுவீடன், ஜெர்மனி, ஃபின்லாந்து, துருக்கி மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் அதிகம் காணப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com



## அமோக வாரம் 03

# மேற்கே ஒரு குற்றம்

"**சா**லை விபத்துத்தான் பாஸ்! கொலையில்லை!"

"ஒரு தனி ரோடுல ராத்திரி! அங்கே அவ எதுக்குப் போனா?"

"சே! அவள் என்னவோ நம்மகிட்ட சொல்ல வந்தா; நீங்கதான்..."

"வெறுப்பேத்தாதே! இப்ப ஒண்ணும் செய்ய முடியாது. தப்பு நேர்ந்திடுத்து..!"

"அவ நம்ம கிட்ட சொல்லவந்த விஷயத்துக்கும் இந்த விபத்துக்கும் சம்பந்தம் இருக்குன்னு எனக்குப் படுது."

"இருக்கு! என்ன செய்ய முடியும் நாம? எதை வெச்சுண்டு என்னத்தைக் கண்டு பிடிச்சுற முடியும் நம்மால?"

"ஹோப்லஸ்!"

கணேஷ் யோசித்தான். மெதுவாக ஆஸ்பத்திரியின் வார்டுகள் ஊடே நடந்து காஷுவால்ட்டி வழியாக வெளியே வந்தார்கள். கணேஷின் கார் நிறுத்தியிருந்தது. ஏறிக் கொண்டு சற்றுநேரம் தீவிரமாக யோசித்தான்.

"வசந்த். அவ கண்களில் பயம் இருந்ததில்லே. நம்மை வந்து சந்திக்கிற போது?"

"ஆமாம். அப்புறம் ராமுகூடச் சொன்னான், ஆபீஸ்ல காத்திருக்கிற போதுகூட பயந்து பயந்து, அடிக்கடி பார்த்துகிட்டிருந்ததா!"

"அப்புறம் ஒரு ஆள் அவளை அழைச்சுக்கிட்டுப் போயிருக்கான், நாம் கூப்பிட்டதா சொல்லி ஏமாற்றி... அவ நம்பகிட்ட ஒரு இரகசியத்தைச் சொல்ல வந்திருக்கா? அவளை ஒரு ஆள் தொடர்ந்து வந்திருக்கலாம். அவன் அவள் நம்மோட சற்று நேரம் பேசறதைப் பார்த்திருக்கலாம். தனியா அவள் நம்ம ஆபீஸுக்குப் போயிருக்கா. நிறைய நேரம் காத்திருந்திருக்கா. அந்த ஆள் இந்த நேரத்திலே என்ன ஆனான்? வெளியில் போய் யாருக்காவது ஃபோன் செஞ்சு டாக்ஸி கொண்டுவந்திருக்கலாம்."

"அப்புறம் கோர்ட்டில வந்து தேடியிருக்கலாம். அவள் கோர்ட்டில் இல்லை. எப்படி அவன் நேரா நம்ம ஆபீஸுக்குப் போயிருக்கான்? அவன் முன்னாடியே நம்மையும், அவளையும் சேர்த்துப் பார்த்திருந்தாத்தான் இது சாத்தியம். நம்மோட வந்து, பேசினதுக்காக அவளுக்கு இந்த 'விபத்து' நேர்ந்திருக்குன்னு வெச்சிக்கிட்டா, ஒருமுக்கியமான விஷயம் வெளியாறது!"

"என்ன?"

"என்னை, கணேஷை அவங்களுக்கு இப்பத் தெரியும். கணேஷ் என்கிறது அந்தப் பெண் நேத்திக்கு வந்து பேசின லாயர். இது அவுங்களுக்குத் தெரிஞ்சிருக்கணும் இல்லையா?"

"ஆம்."

"வா போகலாம்."

"எங்கே?"

"பத்திரிகை ஆபீஸுக்கு ஒரு விளம்பரம் கொடுக்கப்போறேன்."

கணேஷின் ஃபியட் சீறிப் புறப்பட்டு மவுண்ட் ரோடு பக்கம் சென்றது!

"புரியலை பாஸ்! என்ன விளம்பரம்?"

"விளம்பரம் கொடுத்ததும் புரியும். சொல்றேன்."

அந்தப் பத்திரிகை அலுவலகத்தில் வரி விளம்பரப் பகுதிகளில் ஸ்ரீசூர்ணம் இட்டுக் கொண்டிருந்தவரின் முன் உட்கார்ந்தார்கள் இருவரும்.

"என்ன வேண்டும் உங்களுக்கு?"

"ஒரு ஃபாரம்."

"தாராளமா."

தந்தி ஃபாரம் போன்றிருந்த அந்தக் காகிதத்தில் கணேஷ் நிரப்பினான்.

"அன்புள்ள தீபா! நீ நேற்று இறந்து விட்டாய்! ஆனால் உன் நினைவு எப்போதும் என்னைவிட்டு நீங்காது. நீ சொன்ன வார்த்தைகளையும், செய்தியையும் நான் மறக்க மாட்டேன்- கணேஷ்."

அந்த ஸ்ரீ சூர்ணாச்சாரி வார்த்தைகளை எண்ணினான், "'பர்ஸனல்' ல போடறோம். நாளைப் பேப்பர்லே வரணுமா?"

"ஆமாம்."

"ரெண்டாம் பக்கம்தானே?"

"இல்லை. பெரிசா ப்ராமினென்ட்டா கடைசிப் பக்கத்தில அல்லது முதல் பக்கத்தில போட முடியுமா?"

"ரூபா நிறைய ஆகும்."

"எத்தனை?"

அவன் மறுபடி வார்த்தைகளை எண்ணி "முன்னூத்திச் சொச்சம்!" என்றான். கணேஷ் பர்ஸை எடுத்து எண்ணி, "பரவாயில்லை, போட்டுறுங்க!" என்று கொடுத்தான்.

"உங்க அட்ரஸ இந்த இடத்தில ரொப்பிடறேளா?"

நிரப்பினான்.

அதைத் தலைகீழாகப் படித்துக் கொண்டு,

"கணேஷ்! நீங்க அந்த கணேஷா?"

"ஆமாம்!"

"நீங்க?"

"வசந்த்!"

"உங்களுக்கில்ல. உங்க டாட்டருக்கு?"

"பதினேலு.."

"பேர் என்ன அலமேலுவா?"

"எப்படிக் கண்டுபிடிச்சேள்?"

"ஒரு சித்தர் சொல்லிக் கொடுத்த வித்தை..."

"கம் ஆன் வசந்த்! வரேன் சார். ரொம்ப தாங்ஸ். நாளைக்குப் போட்டுடறேளா?"

"கட்டாயம். உங்களுக்கில்லாமலா?"

வெளியே வந்ததும் வசந்த். "அலமேலுன்னு பேரிருக்குமே தவிர சேப்பா விண்ணுன்னு இருப்பாள்."

"ஷட் அப்! எப்பப் பார்த்தாலும் உனக்கு நிதம் பணம்டா! செத்து ஒழிஞ்சி போய்ட்டாளே தீபா! அவளைப்பத்தி கொஞ்சம் அக்கறை?" காரில் கிளம்பினார்கள்.

"பாஸ் நீங்க செய்யறது எனக்குப் புரியுது. இந்த விளம்பரம் வந்ததும் நீங்க என்ன எதிர்பார்க்கிறீங்க- சொல்லட்டுமா?"


"ம்...."

"ஒரு டெலிஃபோன் கால்."

"அல்லது நேரிலே வந்து யாராவது நம்மைச் சந்திக்கலாம்!"

"ஆனா..."

"என்ன ஆனா?"



எழுத்துலக வேந்தன் **சுஜாதா**

"ஸோ கிளாட் ஸோ கிளாட். உங்களை மீட் பண்ணதிலே ரொம்ப சந்தோஷம். என் டாட்டர் கேட்டா குதிப்பா!"

"என்ன வயசு?"

"நாப்பத்தி நாலு."

"நமக்கு ஒண்ணுமே தெரியாதே! அவ ஒண்ணும் சொல்லலியே!"

"அது அவங்களுக்குத் தெரியாதே!"

"இந்த விவகாரம் கொஞ்சம் அபாயகரமாகப் போவுதுன்னு எனக்குப் பட்சி சொல்றது..."

"கராத்தே பழகியிருக்கே இல்லே!"

"வெட்டுக் குத்து சமாச்சாரமாயிருந்தா?"

"பார்க்கலாம் வசந்த். எனக்கு நிஜமாவே குற்ற உணர்ச்சியும் வருத்தமும் இருக்கிறது. அந்தப் பெண்ணை நாம தட்டிக் கழிச்சதிலேதான் இந்த வினை நிகழ்ந்திருக்குன்னு எனக்கு உறுத்திக்கிட்டே இருக்கு! ஏதாவது பிராயச்சித்தம் செய்தே ஆகணும். பார்த்துறலாம்..."

"பொலிஸ் கிட்டே சொல்ல வேண்டாமா?"

"அதுக்கு இன்னும் நேரமில்லை."

"இது விபத்துன்னு நீங்க நம்புறீங்களா இல்லை?"

"விபத்துத்தான். ஆனா ஏற்பாடு செஞ்ச விபத்தான்னு தான் தெரியணும்! தனி ரோடு, அதிலே இந்தப் பொண்ணை நடக்கவிட்டு ஒரே வேகத்தில கார்ல வந்து மோதிட்டுப் போயிருக்கலாம் இல்லையா?"

"அப்படித்தான் இருக்கும். இனிமே நாமென்ன செய்ய முடியும்?"

"காத்திருக்கணும். அவ்வளவுதான்."

"மார்ச்சுவரியில காலைல காத்திருந்தபோது, அந்தப் பொண்ணைப் பத்தி சில விவரங்கள் தெரிஞ்சுது பாஸ்."

"சொல்லு!"

"காலை பதினொரு மணி வரைக்கும் வீட்டிலதான் இருந்தாளாம்... போஸ்டல் ட்யூஷன்ல பி.ஏ.படிக்குதாம். மதுரை யூனிவர்ஸிட்டில ஏதோ கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ். நாட்டியம் நல்லாவே ஆடுமாம். சினிமாலே சேர்ந்துடலாம்னு ஆசையிருந்ததாம். லஸ் கார்னர்ல ஒரு கடைக்குப்போயிட்டு அப்புறம் போஸ்ட் ஆபீஸ் போய்ட்டு லைப்ரரிக்குப்போய்ட்டு ஒத்திகைக்குப் போறேன்னு சொல்லிட்டுப் போச்சாம். நம்மை வந்து பார்க்கிறதைப் பத்தி ஒருத்தர்கிட்டயும் சொன்னதாத் தெரியலை."

"அந்த கலாராதனாங்கறது..."

"ரொம்ப நல்ல, பிரபலமான, மரியாதைக்குரிய க்ரூப். சிறப்பா நாட்டிய, நாடகங்கள் எல்லாம் நடத்தறாங்களாம்."

"அவளுக்கு ஏதும் பணத் தொந்தரவு, காதல், இப்படி ஏதாவது?"

"இருந்ததாத் தெரியலை. அவுட் ஹவுஸ்ல இருந்துக்கிட்டு மெயின் வீட்டை மாடியும் கீழுமாய் வாடகைக்கு விட்டிருக்காங்க. வீடு அவுங்களுதாம். வர வாடகை அம்மா பொண்ணுக்குப் போதுமானதா இருந்திருக்காம்."

"அடையார் பக்கம்-விபத்து நடந்த இடத்தில் தெரிஞ்சவங்க, சொந்தக்காரங்கள் யாராவது?"

"ஒருத்தரும் கிடையாதாம்."

"அதுதான் உதைக்குது. பார்க்கலாம், விளம்பரம் வரட்டும்."

(தொடர்ந்து வரும்)

---

## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்.

## பயணம் - 09

# 'அன்ன பூரணி அம்மா'

**அ**ந்தக் கப்பலில் இருபத்திரண்டு பேர் அடங்கியவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.

பொன்னையா கந்தசாமித் தண்டையலும், சிவசுப்பிரமணியம் தண்டையலும் கப்பலின் கப்டன்கள்.

கப்பலைத் திருத்தி அமைப்பதற்காக ஆந்திராவிலுள்ள காக்கிநாடாவுக்கு 'எச்.ஏ. காட்டுன்' என்ற அக் கப்பல் சென்று கொண்டிருந்தது.

சென்னைக்கு மேல் எண்பத்தைந்து மைல் தூரத்தில்-

ஒரு வெள்ளிக்கிழமை

பயங்கரச் சூறாவளி!

பாய்கள் சுக்கு நூறாகின.

கப்பல் நொருங்கிச் சின்னாபின்னமாகியது.

கப்பலுக்குள் இருந்த ஒரேயொரு படகில்,

அந்த இருபத்திரண்டு பேரும் உயிரே தஞ்சமெனப் பிடித்துக் கொண்டார்கள்.

சிலரது உடலில் ஆடையே இல்லை!

'ஆண்டவனே அபயம்' என்பதைத் தவிர, அவர்களுக்கு வேறொரு துணையுமில்லை!

மூன்று நாட்கள்.

உடல் தொய்ந்து, அறிவு மயங்குகின்ற நிலை,

வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடியில் வசித்த அந்த மனிதர் தமக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவத்தை என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

இப்போது எண்பத்தைந்து வயது இருக்கும் அவருக்கு.

திருச்சிற்றம்பலம் சீனிவாசகம் என்ற சீனி அம்மான் 'கதை' சொன்ன விதமே தனிப்பாணி.

நெஞ்சத்தைச் சிலிர்க்க வைத்தது.

பத்து வயதில் அவர் கப்பலில் 'பொடியனாக'ப் போனார். ஐம்பது வயதுவரை அவர் கப்பலிலேயே காலத்தைக் கழித்தார்.

நேரு, காந்தி, ராஜாஜி, ஜயப்பிரகாஷ், நாராயண், காமராஜர், அறிஞர் அண்ணாத்துரை போன்ற பெரியார்களை நேரில் சந்தித்தவர் சீனி அம்மான்!


"அந்தக் காலத்தில் பர்மா, பினாங்கு, இந்தியா என்றெல்லாம் பாய்மரக் கப்பலில் பயணம் செய்தவன். கடலுக்குள் வாழ்ந்தவன்!" என்று கம்பீரமாக நெஞ்சை நிமிர்த்திச் சொன்னார்.

தொடர்ந்து தனது பயங்கர அனுபவத்தைச் சொல்கிறார்:

"சாவு எம்மை அண்மித்துக்கொண்டிருக்கிறதென்பதைத் தவிர வேறு ஒன்றுமே எமக்குத் தெரியாது!"

"ஏதாவது ஒரு பெரிய கப்பல் அந்த நேரம் வரமாட்டாதா என்று கடைசி நேர ஏக்கம்.

சிறு துரும்பாவது கிடைத்துவிட்டால்...



ஒருவருக்கு ஒருவர் பேசவே சக்தியில்லை!

அந்த நேரத்தில்-

புகைக்கப்பல் ஒன்று!

தூரத்தே போய்க்கொண்டிருந்தது.

எம்மைக் கண்ட அவர்கள் எம்மை மீட்பார்கள் என்றொரு நம்பிக்கை.

ஓ!

அந்த நம்பிக்கையும் மூழ்கடிக்கப்பட்டு விட்டது.

கப்பல் எம் பக்கம் வராமலேயே போய் விட்டது!

இனி-

சாவுதான்! முடிவு செய்து விட்டோம்!

அப்போதுதான்-

அந்த மாலை நேரம்-

சீனக் கப்பல் ஒன்று எம் அருகே வந்தது.

கடவுள் கருணை காட்டி விட்டான்!

கயிறு எறிந்து எங்களை மீட்டார்கள்.

எங்களுக்கு நிற்கவே சக்தியில்லை.

கால்கள் தண்ணீரில் ஊறி ஆனைக்கால்கள் போன்று பெருத்து விட்டன.

பிஸ்கற் தந்தார்கள். பிஸ்கற்றை அரைத்துத் தரும்படி கேட்டோம்.

தண்ணீரைத் தொண்டைக்குள் ஊற்றி, அரைத்து மாவான பிஸ்கற்றையும் போட்டுக் கொன்டோம்.

சென்னையில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். மறு பிறவிகளாக அங்கிருந்து ஊர் வந்து சேர்ந்தோம்.

கணபதிப்பிள்ளைத் தண்டையல்,

பொன்னுசாமித் தண்டையல்

மாணிக்கம் தண்டையல் ஆகியோருக்குக் கீழ் நான் பணியாற்றியுள்ளேன்!" என்று பெருமையாகச் சொன்னார்.

**

**ஒ**ரு பெண் கப்பல் முதலாளி வல்வெட்டித்துறையில் கொடிகட்டிப் பறந்திருக்கிறார்!

பல கப்பல்களுக்குச் சொந்தக்காரியாக இருந்தார்.

பெயரளவில் மட்டுமல்ல-

எத்தனையோ கப்பல்களை வைத்து, வியாபாரம் செய்து, அவற்றையெல்லாம் நிர்வகித்த திறமையும், ஆற்றலுமிக்கவராக வாழ்ந்தார்!

அவர்தான்-

சின்னத்தங்கம் முதலாளி!

இவரது தகப்பனார் வைரமுத்து முதலாளி.

பெரும் பெரும் கப்பல்களுக்குச் சொந்தக்காரர்.

சரவணமுத்து என்பவரைத் தனது மகள் சின்னத்தங்கத்துக்குத் திருமணம் செய்து வைத்தபோது,

கப்பல்களைச் சீதனமாகக் கொடுத்தார்!

கணவனும் மனைவியுமாக, கப்பல்களை வைத்து வியாபாரத்தை வெற்றிகரமாக நடாத்தி வந்தனர்!

**ஏ.கே. ராஜகோபால்**

ஆருயிர் கணவன் இறக்கவே, சின்னத்தங்கம் கப்பல்களையும், வியாபாரத்தையும் தனித்துப் பொறுப்பேற்று நடாத்தவேண்டிய நிலைக்குள்ளானார்!

'மதுரை மீனாட்சி',

'சுபத்திரையம்மா',

'விநாயக பாக்கியலட்சுமி ஸ்கூனர்',

'கருங்கடல் வெற்றிவேலாயுதம்',

'சோமசுந்தரம்',

'நாகரிகத்துல்லா',

'மதுரைச் சொக்கலிங்கம்',.

இவ்வளவு கப்பல்களையும் வெளிநாட்டுக்கு அனுப்பி, ஏற்றுமதி இறக்குமதிகளையும் திறமையாக நடாத்தி வந்தவர் சின்னத்தங்கம்!

இந்தியாவிலுள்ள செட்டிநாட்டு முதலாளிகள் பலரும் வியாபாரம் சம்பந்தமாகக் கொடுக்கல், வாங்கல் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்த வல்வெட்டித்துறைக்குச் சின்னத்தங்கத்திடம் வந்து போவார்கள்!

ஆனாலும்-

பெண் என்பதனால், இவரை ஏமாற்றி விட முடியாது!

வியாபார தந்திரங்களையெல்லாம் நன்கு கற்றுவைத்திருந்தார்!

வல்வெட்டித்துறை சுந்தரலிங்கத்தின் பேத்தியார்தான் இந்தச் சின்னத்தங்கம்!

அதாவது, சுந்தரலிங்கத்தின் தகப்பனாரின் தாயார்தான் சின்னத்தங்கம்!

●●●

**க**ப்பலில் செல்பவர்கள் மீண்டும் உயிரோடு திரும்பி வருவார்கள் என்பதெல்லாம் அப்போது கனவு.

திரும்பி வந்தால் காண வேண்டியது தான்!

இப்படிக் கூறிவிட்டு, சீனி அம்மான் என்ற சீனிவாசகம் ஒரு பாட்டைப் பாடினார்.

*'பெஞ்சாதி பிள்ளையை வீட்டில் விட்டு தங்கள்*
*பேரையும் ரேவுத்துறையில் இட்டு*
*என் சாண் உடம்பு வளர்க்கிற கொடுமையால்*
*யமனுக்கு ஒத்தி எழுதி விட்டு*
*ஏறினார் கப்பலிலை!*
*வந்தவுடன் வாங்கினார் பற்றுச்சீட்டு'*

அர்த்தம் நிறைந்த பாட்டு;

அந்தக்காலக் கப்பல் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டியது!


(அடுத்த வாரமும்...)


படிப்பகம்

www.padippakam.com

க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார் எழுதியுள்ள விறு விறு காதல்கதை. உங்கள் இதயத்தில் இந்த கதையின் நாயகி 'நிலா'வுக்கும் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!

# முள் நிலவு



நானும் என் மனைவியும் ஸ்கூட்டரில் புறப்பட்டு அந்த மனநோய் நல விடுதிக்குப் போய்ச் சேர்ந்தபோது மாலை 5 மணி.

ஹாஸ்பிடல் ஒரு வேண்டப்படாத நிசப்தத்திற்கு உட்பட்டிருந்தது. தொலைவில் பச்சை பெயிண்ட் அடிக்கப்பட்ட கதவுகள் ஒரே யூனிஃபார்மாய் சாத்திக் கிடந்தன.

ரிசப்ஷன் அறைக்குள் நுழைந்தோம்.

அழகாய் கொண்டை போட்டு டெலிஃபோனில் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த அந்த ரிசப்ஷனிஸ்ட் எங்களைப் பார்த்ததும் பேச்சை அவசர அவசரமாய் முடித்துக் கொண்டு ரிஸீவரைச் சாத்தினாள்.

"எஸ்..."

"ஒரு பேஷண்டைப் பார்க்கணும்"

"பேரு...?"

"நிலா..."

"அந்தப் பொண்ணுக்கு நீங்க என்ன வேணும்...?"

"நிலா எதிர்வீட்ல நாங்க குடியிருக்கோம்...! பார்த்துட்டுப் போகலாம்னு வந்தோம்..."

"ஸாரி...!"

"எதுக்கு ஸாரி..?"

"நிலாவைப் பார்க்க யாருக்கும் அனுமதி கிடையாது."

"ஒரு ரெண்டு நிமிஷம் பார்த்துட்டு போயிடறோம்."

"பக்கத்து ரூம்ல டாக்டர் இருக்கார். அவர் கிட்ட கேட்டுப் பாருங்க. அவர் அலவ் பண்ணினா போய்ப் பாருங்க..."

நானும் என் மனைவியும் பக்கத்து அறைக்குப் போய் மெல்ல எட்டிப் பார்த்தோம்.

ஒரு டாக்டரம்மாள் நாற்காலியில் சாய்ந்து உடகார்ந்து ஃபைல் ஒன்றைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். எங்களைப் பார்த்ததும், "ப்ளீஸ்! கம் இன்..." என்றார்.

உள்ளே போனோம்.

டாக்டரம்மாளின் முகம் என்னைப் பார்த்ததும் லேசான ஒரு மலர்ச்சிக்குப் போயிற்று.

"ஸார்... நீங்க எழுத்தாளர் ஆர்.கே. தானே...?"

"ஆமா..."

டாக்டரம்மாள் எழுந்து விட்டார். சந்தோஷம் குரலில் சிதறக் கேட்டார். "என்ன ஸார்...! எங்க ஹாஸ்பிடல் பக்கம் வந்திருக்கீங்க...?"

"நிலான்னு ஒரு பேஷண்ட். என் னோட வீட்டுக்கு எதிர்வீடு. இந்த ஹாஸ்பிடல்ல அட்மிட்டாயிருக்கா. பார்த்துட்டு போலாம்னு வந்தோம்..."

"பொதுவா, அந்தப் பொண்ணைப் பார்க்க நாங்க யாரையுமே அனுமதிக்கிற தில்லை. கொஞ்ச நாளைக்கு வஸோலேட் பண்ணி ட்ரீட்மெண்ட் கொடுக்க வேண்டிய கேஸ் அது."

"ஒரே ஒரு நிமிஷம்.. பார்த்துட்டு போயிடுவோம்.



"சரி...வாங்க...!"

டாக்டரம்மாள் முன்னால் நடக்க நாங்கள் பின் தொடர்ந்தோம். நீளமான வராந்தா எங்களைக் கூட்டிக் கொண்டு போயிற்று.

"அந்தப் பொண்ணோட நிலைமை இப்போ எப்படியிருக்கு டாக்டர்...?"

"அஷ்டானிஷ்ட் சிச்சுவேஷன் தமிழில் சொல்லணும்னா ஸ்தம்பித்த நிலை..."

"நிலா பழைய நிலைமைக்குத் திரும்புவாளா டாக்டர்?"

"எங்க ட்ரீட்மெண்ட்களை இனிமேத்தான் ஆரம்பிக்கப் போறோம். அது எப்படி பலனளிக்கும்னு இப்பவே சொல்ல முடியாது. இட் வில் டேக் டைம் டு ரெக்கவர்...."

பச்சைப் பெயிண்ட் அடித்த கதவுகளைத் தாண்டி 'நோ ஹோர்ம்' செல்களுக்கு வந்தோம்.

"உங்க எழுத்துப்பணி எப்படியிருக்கு மிஸ்டர் ஆர்.கே...?"

"ஃபைன்!"

"கொஞ்ச நாளா எதையும் நான் படிக்கிறதில்லை. ரீசண்டா என்ன எழுதியிருக்கீங்க...?"

"'கண்ணுக்குள் நீதான்!' என்கிற நாவல்."

"ஆரம்ப காலத்தில நீங்க எழுதின பல நாவல்கள் இன்னும் என் மனசுக்குள்ளே இருக்கு..."

"தேங்க்...யூ..."

டாக்டரம்மாள் இப்போது வராந்தா வளைவில் திரும்பி ஒரு அறைக்கு முன்பாய் நின்றார்.

"இதுதான் நிலா இருக்கிற ரூம்..."

நான் கதவைப் பார்த்தேன். பெரியபூட்டு ஒன்று பித்தளை உடம்போடு தொங்கியது. வலது பக்க கதவு ஓரத்தில் பேஷண்ட் பற்றிய விவரங்கள் டைப் அடித்த சதுரப் பேப்பர் ஒன்றில் ஒட்டப்பட்டிருந்தது.

டாக்டரம்மாள் கதவை நெருங்கி, கதவின் இடதுபக்கம் தெரிந்த அரை சதுர அடிப்பரப்புள்ள சிறிய விக்கெட் டோர் ஒன்றை கொக்கியை விடுவித்துத் திறந்தார். உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு என்னை ஏறிட்டார்.

"சத்தம் காட்டாமே இப்படி வந்து பாருங்க... ஸார்."

நான் விக்கெட் டோரை நெருங்கி உள்ளே பார்வையைப் போட்டேன்.

குழல் விளக்கு வெளிச்சத்தில் அந்த

க்ரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்

அறை நிரம்பியிருக்க, அறையின் மூலையில் நிலா ஒண்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். இரண்டு கைகளாலும் காதுகளைப் பொத்திக் கொண்டு மருட்சியான விழிக ளோடு ஒரே திசையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான் அதிர்ந்து போய் டாக்டரம்மாவை ஏறிட்டேன்.

"டாக்டர்! இது என்ன கோலம்...?"

"கடந்த சில நாட்களாக நிலா இப்படித்தான் இருக்கா. ஒரு சின்ன சத்தத்தைக் கேட்டாக்கூட உடம்பெல்லாம் நடுங்கிப் போயிடறா. மனநிலை பாதிக்கப்பட்டதோடு ஒரு வகை போபியாவும் சேர்ந்துடுச்சு..."

நான் மறுபடியும் அந்தச் சிறிய விக்கெட்டோர் வழியாக நிலாவைப் பார்த்தேன்.

நிலா இப்போது தன் முழங்கால்களுக் கிடையில் முகத்தைப் புதைத்து வைத்துக் கொண்டு இரண்டு கைகளாலும் காதைப் பொத்தியிருந்தாள். உடம்பு ஒரு மெலிதான நடுக்கத்திற்கு உட்பட்டிருந்தது.

"கண்கொண்டு பார்க்க முடியலை டாக்டர்..."

"கஷ்டம்தான்... என்ன செய்யறது மிஸ்டர் ஆர்.கே.! ஃபேட் இஸ் கிரேட்..."

"ட்ரீட்மெண்ட்சை எப்ப ஆரம்பிக்கப் போறீங்க டாக்டர்?"

"பம்பாய்ல டாக்டர் புன்னம் சந்தர் ஒரு பெரிய சைக்யாட்ரிஸ்ட்... அவருக்கு தகவல் கொடுத்திருக்கேன். அவர் வந்ததும்,



அவரை கன்சல்ட் பண்ணிக்கிட்டுத்தான் எந்த மாதிரியான ட்ரீட்மெண்ட்டை தர்ற துன்னு டிசைட் பண்ணணும்..."

"நிலா குணமாயிடுவாளா டாக்டர்..?"

டாக்டரம்மாள் தலைக்கு மேல் தன் வலது கையை உயர்த்தி "ஹி ஈஸ்...த...ஹீலர்..." என்றார்.

டாக்டரிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு நானும் என் மனைவியும் விடை பெற்றோம்.

வீடு திரும்பியதும் கனத்த இதயத்தோடு இரண்டாவது அத்தியாயத்தை எழுத ஆரம்பித்தேன். பேனா ஒத்துழைக்க மறுத்தாலும் விடாப் பிடியாய் எழுதினேன். வரிகள் ஓடியது.

•••

## நிலவு 02

வாக்மேனை மாட்டிக்கொண்டு பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்த நிலா, அறைக்குள் நுழைகிற அப்பாவைப் பார்த்ததும் வாக்மேனை காதுகளிலிருந்து அகற்றினாள்.

அப்பா சிவராஜன் கையில் ஒரு ஆல்பத்தோடு பக்கத்தில் உட்கார்ந்தார்.

"நிலா... இன்விடேஷன் ப்ரிண்ட் பண்ணணும். இது வெட்டிங் கார்டு ஆல்பம். உனக்குப் பிடிச்ச டிசைனை செலக்ட் பண்ணிக் கொடுத்துட்டா பிரிண்டர்ஸுக்கு சொல்லிடலாம்..."

"இவ்வளவுதானே... கொண்டாங்க..." சொல்லிய நிலா ஆல்பத்தை வாங்கிப் புரட்டினாள்.

இரண்டே நிமிஷம்!

ரோஜாப்பூவின் இதழ்கள் சிதறிய சைஸில் இருந்த ஒரு வெட்டிங் கார்டை எடுத்து சிவராஜனிடம் நீட்டினாள்.

"இது எப்படியிருக்குப்பா...?"

"ஃபைன்..."

"அப்பா...! இன்விடேஷன் ப்ரிண்ட் பண்ணும்போது எனக்குத் தனியா நூத்தி ஐம்பது கார்ட்ஸ் வேணும். அதிகமாவே ப்ரிண்ட் பண்ணிடுங்க..."

"பண்ணிட்டா போகுது..." என்று சொல்லி மெல்ல எழுந்தவர் தயங்கி நின்றார். நிலா அவரை வியப்பாய்ப் பார்த்தாள்.

"என்னப்பா...?"

"அம்மா! இந்த இன்விடேஷன் கார்டைக் கூட உன் இஷ்டப்படி செலக்ட் பண்ணியிருக்கே. ஆனா மாப்பிள்ளை விஷயத்துல ஏம்மா அப்படி நடந்துக்கிட்டே...?"

நிலா சிரித்துக் கொண்டே தலையில் நோகாமல் அடித்துக் கொண்டாள்.

"அய்யோ அப்பா! அதைப் பத்தியே இன்னும் ஏன் நினைச்சுட்டிருக்கீங்க..? உங்களுக்கும், அம்மாவுக்கும் மாப்பிள்ளை பிடிச்சிருந்தா சரி.."

"இருந்தாலும்..."

"அப்பா... நீங்க எனக்கு என்ன கொரில்லாக் குரங்கையா கட்டி வைக்கப் போறீங்க... ஒரு ஃபாரின் மாப்பிள்ளையைத்தானே?"

"நீ என்னதான் சொன்னாலும் எனக்கும், உங்கம்மாவுக்கும் இந்த விஷயம் கொஞ்சம் நெருடலாவே இருக்கு..."

நிலா புன்னகைத்தாள்.

"அப்பா...! எனக்கு ஒரு த்ரில்லான அனுபவமா அமையும். கல்யாண மேடையில் தான் நானும், மாப்பிள்ளையும் முதல் தடவையா ஒருத் தரையொருத்தர் பார்த்துக்கப்போறோம். அப்படிப் பார்த்துக்கிற சமயத்தில் கிடைக்கிற சந்தோஷம் இருக்கே.. அது யாருக்குமே கிடைக்காத சந்தோஷம்..."

"ஒரு வேளை உனக்கு மாப்பிள்ளைப் பிடிக்காமப் போயிட்டா?"

"பிடிக்கும்னு நினைக்கிறேன்..."

"நிலா..! இப்பவும் ஒண்ணும் லேட்டாயிடலை. இன்விடேஷனை ப்ரிண்ட் பண்றதுக்கு முந்தியாவது மாப்பிள்ளையோட ஃபோட்டோவைப் பார்த்துடு. எங்க மனசுக்குத் திருப்தியா இருக்கும்."

"ஸாரி... மை டியர் ஃபாதர்... நீங்க போய் கல்யாண காரியங்களை கவனிங்க... நான் வாக்மேன் கேட்கணும்."

காதுக்கு எடுத்து மாட்டிக் கொண்டாள்.

சிவராஜன், மகளை சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அறையை விட்டு வெளியேறினார்.

நிலா படுக்கையில் சாய்ந்து கொண்டு இரண்டு பாப் இசைப் பாடல்களைக் கேட்டு முடித்திருந்தபோது-

வீட்டு வாசலில் தபால்காரனின் குரல் கேட்டது.

"ஸார் போஸ்ட்...."

நிலா எழுந்து போய் போஸ்ட் கவரை வாங்கினாள்.

அது ஒரு வெளிநாட்டுத் தபால். அவள் பெயருக்கு வந்திருந்தது.

ஃப்ரம் அட்ரஸைப் பார்த்தாள். மனசுக்குள் ஒரு மின்னல் தெளித்தது.

கிருஷ்ணகாந்த்.

அட, மாப்பிள்ளை!

அறைக்குள் வேகமாய் நுழைந்து கவரின் வாயைக் கிழித்தாள். அவளுக்குப் பிடித்த செண்பகப்பூ வாசனை அடித்தது.

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

# கவியரசுவின் சுயசரிதை

## திடீர் தொடர் 04

கவியரசு கண்ணதாசன் எழுதிய–அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டி'கள் இவை....



அந்த இனிய மனிதன் அன்றைய கொடிய அரசியலில் தன் வலது காலை நுழைத்துக்கொண்டான்.

ஊரிலே அவனது திருமணப் பேச்சு நடைபெற்றுக் கொண்டிந்தது.

அவனுக்காகப் பல பேர் பெண் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவனது சமூகத்திற்கென்றே சில அதிசய சுபாவங்கள் உண்டு.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்களென்றால் பணக்காரர்கள், வட்டி வாங்குகிறவர்கள் என்று தான் உலகத்திற்குத் தெரியும்.

அவர்கள் கொடிய உணர்ச்சிகள் பல கொண்டவர்கள். யாரையும் வாழவும் விடமாட்டார்கள், சாகவும் விட மாட்டார்கள்.

சொந்தச் சாதிக்காரனைத் தான் சீக்கிரமாகக் கவிழ்ப்பார்கள். பொறாமை என்பது அந்த சாதி பிறக்கும் போதே பிறந்த குணமாகும்.

அவனுக்காகப் பெண் பேசிய அவனது உறவினர்கள்கூட, அவனுக்கு அழகிய பெண் கிடைத்துவிடாமலிருக்க, பெரு முயற்சி எடுத்துக் கொண்டார்கள்.

ஒவ்வொரு 'தோஷ'மாகச் சொல்லி, ஒவ்வொரு பேச்சையும் தட்டிக் கழித்தார்கள்.

அவனோ திருமணப் பைத்தியம்பிடித்தவனாகவே இருந்தான். பல பெண்களோடு பழக்கப்பட்டவனாதலால் ஒருத்தியோடு குடும்பம் நடத்த வேண்டுமென்பதிலே ஆர்வம் அதிகமுடையவனாக இருந்தான்.

ஊரில் ஒரு திருமணப் பேச்சும் முடிவதாக இல்லை!

தினம் தினம் பெண் பார்த்து அலுத்து விட்டான்.

"இஷ்டம் போல் பேசி முடியுங்கள்" என்று சொல்லி விட்டு சென்னைக்குத் திரும்பிவிட்டான்.

சென்னையிலே அவனது நண்பர்கள் வெகு உற்சாகமான முறையிலே வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்கள்.

மேடையிலே தாய்மார்களைப் பற்றி ரத்தக்கண்ணீர் வடிக்கின்ற அவர்கள் அந்தத் தாய்மார்களிடம் தனிமையில் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை அனுபவபூர்வமாகக் காணும் கட்டம் ஆரம்பமாயிற்று.

அந்நாளில் திராவிட முன்னேற்றக்கழகம் பிரபல இயக்கமாக இல்லை.

வாடகைக் கார் டிரைவர்களுக்கும் அந்தக் கழகத்தைப் பற்றியோ அதன் தலைவர்களைப் பற்றியோ எதுவும் தெரியாது.

அவனும் ஒரு தலைவனும், ஓர் நாள் இரவு ஒரு பெரிய வாடகைக் காரை வைத்துக்கொண்டு பெண் வேட்டையில் ஈடுபட்டார்கள்.

ஒவ்வோர் இடமாகப் போய் பார்த்தார்கள்.

கடைசியில் தேனாம்பேட்டைப் பக்கமுள்ள குடிசைகளின் அருகில் வாடகைக் கார் நின்றது.

ஒரு நாலைந்து பெண்கள் - கிராமத்துப் பெண்கள் வேறு பெயரில் சொல்வதானால் நாட்டுக்கட்டைகள், மட மட வென்று வந்து காருக்குள் ஏறிக்கொண்டனர்.

காமுகன் பசிக்கு ருசியா தெரியும்?

அத்தனையையும் ஏற்றிக் கொண்ட வாடகைக் கார், நேரே சென்ரல் ஸ்டேஷன் பக்கம் உள்ள ஹோட்டலை நோக்கிப்புறப்பட்டது.

திராவிட விடுதலை வீரர்கள் திராவிட நாடு அந்தப் பெண்களிடம் இருக்கிறதா என்று தேட ஆரம்பித்தார்கள்.

காமக்கடலில் முழ்கி எழுந்தார்கள். ஆனால் காரில் போவதற்குக்கூட பணம் கொடுக்காமல் அவர்களை வெளியே அனுப்பி விட்டார்கள்.

அன்றும் அதற்குப் பிறகும், நடைபெற்ற களியாட்டங்களை, ஒவ்வொன்றாக விவரிக் கத் தேவையில்லை.

அது சுவைக்குறைவாகவும் போய் விடக்கூடும்.

ஆனால் சில பெண்கள், அவ்வப்போது நறுக்குத் தெறித்தாற் போல் கேட்ட கேள்விகளை அவனால் மறக்க முடிய வில்லை!

"மேடையில் என்னென்னவோ பேசுகிறீர்கள்! அதெல்லாம் ஊருக்குத்தான் உபதேசமா?"

"நீங்களே இப்படி நடப்பதைப் பார்த்தால், யாரை நம்புவதென்றே தெரியவில்லை."

"உங்கள் கையில் நாடு கிடைத்தால்–சட்டசபையெல்லாம் பெண்களாகவே இருப்பார்கள்."

இப்படி ஆணித்தரமான பொன்மொழிகள் பலவற்றை அவர்கள் சந்தித்த பெண்கள் உதிர்த்திருந்தார்கள்.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர்கள் பலரும், ஒழுக்கமற்றவர்களென்றும் காமுகர்களென்றும் எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தும்போது அவனுக்குக் கொஞ்சம் கூட கோபம் வருவதில்லை.

காரணம்- அதுதான் உண்மை!.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# ஞானம்

வீட்டிற்குள் நுழையும்போதே சாரங்கன் காதுகளைச் செவிடாக்கிக் கொண்டவனானான்.

'க்கும்.' கனமான செருமல், அடைப்பைக் கடந்து துளைத்துத் தொட்டது. நெஞ்சில் முள்ளாக நெருடியது. பூவாகப் பூக்கும் ஒரு நாள் நினைவாக மௌனத்தின் பிடிக்குள் தன்னை அமுக்கியவனானான். கால், கை அலம்பி சாமி கும்பிடப் போனவன் அங்கே தந்தையின் தரிசனத்தில் சற்று அரண்டான்; விழிகளை இறுக மூடிக்கொண்டான்.

சாமி முன்னால் எதுவும் பேசாத அப்பாவின் மௌனம் மனதில் சாந்தியைத் தந்தது.

அப்பா மட்டும் இப்படியே இருந்து விட்டால்...?



"நானும் கத்திக் கத்திச் சொன்னேன்; அவன் கேட்கலை. முதற் கோணல் முற்றும் கோணல்; நீயும் இப்படியே விளையாட்டு, நாடகம் எண்டு போனால் கடைசியில் படிப்பு என்னாகிறது? பட்டம் பெற்றால் அதின்ரை மதிப்பே வேறுதான். நாய்வாலை நிமிர்த்தப் பாடுபட்ட கதையாத்தான் தொடரப் போகிறது போல."

விழி மூடிக் கும்பிட்டு நின்றவன் நிலை குலைந்து போனான். தம்பியைத் திட்டும் சாட்டில் அவனையும் சேர்த்து குத்துகிறார். அப்பா ஓயமாட்டார். இனித் தூங்கப்போகும் வரை தம் எதிர்பார்ப்பு ஏமாற்றமானதன் தாக்கத்தை பிரித்துப் போட்டு சுமை குறைக்கும் சொற்களின் வீச்சுக்கள் அவன் நெஞ்சுக் கூட்டை உடைக்கப்போகின்றன.

எப்பதான் அப்பா புரிந்து கொள்ளப் போகிறார் வாழ்க்கையை! அவர் சாதாரண வாத்தியார். பிள்ளைகளை பட்டப்படிப்பு படிக்க வைக்க வேணும் என்கிற முடிவோடு இருந்தார். ஆனால் ஏ.எல். முடித்த கையோடு சாரங்கன் முரண்டு பிடிக்கத் தொடங்கினான். பின்னால் தம்பி, தங்கைகள் வாழ்க்கையின் எதிர்காலக் கணக்கு விடையைத் தேட வைத்தது. அப்பாவால் ஒரு எல்லைக்குமேல் முடியாது. அவரது ஆசையை நிறைவேற்ற இன்னும் ஐந்து வருடங்களாவது காத்திருக்க வேண்டும். வாழ்க்கைச் செலவும், தேவைகளும், ஐந்து வருடக் கணக்கிருப்பில் பல மடங்கு அதிகரித்துவிடும். ஆகவே அவன் இப்பவே ஏதாவது செய்தாகணும். பட்டத்தை வைத்துக்கொண்டு பரதேசியாக அலைபவர்கள் இன்று எத்தனைபேர்?

அதற்குச் செலவிடும் காலத்தை பயனுள்ள ஏதாவதொரு தொழில் முயற்சிக்கு செலவிட்டால், அப்பாவின் ஆசையை தம்பி தங்கைகளைக் கொண்டு நிறைவேற்றி விடலாம்.

பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் துணிந்து இறங்கினான். நண்பர்கள் மூலம் தந்தை எத்தனையோ சொல்லிப்பார்த்தார். கடைசியில் தாமே மோதினார். முடிவு அவனதாக அமைந்ததின் பொருமலாக தமது ஆற்றாமையை வெளியில் கொட்டத் தொடங்கினார். ஆரம்பத்தில் சகிப்பது கடினமாக இருந்தது. போகப்போக, கண்டு கொள்ளாமல் இருக்கப் பழகியதில் சுலபமாகிவிட்டது. இருந்தாலும் சில சமயங்கள் நெஞ்சின் முள்ளாகியது.

என்னதான் அவன் டெய்லரிங் ஷொப்பில் பல இலாபங்களைச் சம்பாதிச்சுக் கொடுத்தாலும் அவர் அதை இன்னும் அங்கீகரிக்கவே இல்லை. அவனது அயராத உழைப்பும், புதிது புதிதான நாகரிக உடைகள் தரும் யுக்தியும் அவனது கடைக்கு கிளைகளை

**ஜெயமணி சூரியன்**

ஆரம்பிக்கச் செய்தன. எந்தத் திறமையையும் அப்பா புரிந்துகொண்டு பாராட்டுவதாக இல்லை.

"இவனோடு படித்த சுந்தரை, சந்திரனைப் பார், எம்.ஏ., பி.ஏ. என்று பட்டம் வாங்கியிருக்கிறார்கள். நாளைக்கு வேலை கிடைச்சால் எத்தனை பெருமை பெற்றவர்களுக்கு! இங்கை ஒருத்தன் 'டெய்லர்!' வெளியே சொல்ல முடியுமோ? சே... என்ன கேவலம்!"

காணும்போதெல்லாம் அம்மாவிடம் பொரிந்து கொண்டேயிருப்பதில் வீட்டுக்கு வரும் நேரத்தைக்கூட கட்டுப்படுத்த வேண்டியவனானான்.

வாசலில் நிழல் தட்டியது.

அம்மா,

"சாரங்கா! உன் நண்பன் சந்திரன் வந்திருக்கிறான், காலையில் கூட வந்திருந்தான்."

வெளியே வந்தான். அவன் படிப்பை, வேலையைப்பற்றி அப்பா, துளைத்தெடுத்துக் கொண்டிருந்தார். அவன் சலித்தவனாக பதில் சொல்லிக்கொண்டிருந்தான். "என்னதான் சொல்லு சந்திரன்; நீ எடுத்த பட்டம் உங்கப்பா, அம்மாவுக்கு பெருமை சேர்க்கும். பட்டதாரி என் மகன் எனப் பூரித்துப் போவார்கள்!" என்றார், சாரங்கனை ஓரக் கண்ணால் பார்த்தவண்ணம்.

நீண்ட பெருமூச்சை உதிர்த்த சந்திரன்: "மாமா! பெற்றவர்களின் பெருமைக்காக பெற்ற பட்டத்தை கொண்டு நாம வேலை தேடியலைகிறோம். அங்கங்கே அர்ச்சிக்கப் படுகின்ற வார்த்தைகளினால் எங்கள் பெருமைகள் எப்படி சிறைப்பட்டுப் போகின்றன? இதை பெரியவர்கள் புரிந்து கொள்வார்களா? ஒரு காலம் இருந்தது. படிப்பு, பட்டம் வேலை. இப்ப அது காலி. திட்டம், செயல்திறனுக்குப் போதிய கல்வியறிவு இருந்தால் வாழ்வின் வெற்றிக்கான பட்டத்தைப் பெற்றுவிடலாம். அதை விவேகியான உங்க மகன் பெற்றுவிட்டான். என்னைப் போன்றவர்கள் கேள்விக்குறியாக நிற்கிறோம். இப்ப உங்க மகனைத் தேடி வந்ததே அவன் ஷொப்பில் ஒரு வேலை கேட்டுத்தான்!"

சாரங்கனின் தந்தையின் முகம் சுண்டிப் போனது. 'இத்தனை வயசாகியும் புரியாத வாழ்க்கையின் தத்துவத்தை சின்ன வயசில் சாரங்கன் புரிந்துகொண்டு செயல்பட்டிருக்கிறான். பல வருசங்கள் படிப்பில் செலவிட்ட அவனோடு படித்த பையன்கள் அவனிடமே வேலை கேட்டு நிற்குமளவிற்கு எதிர்காலத்தை நிர்ணயித்துத் திறமையை வெளிப்படுத்தி காலத்தை, கைக்குள் அடக்கிவிட்டவனை எத்தனை காரமாகத் தினம்போல திட்டிக் கொட்டிவிட்டேன், வெறும் வரட்டுக் கௌரவத்துக்காக,' குற்றவுணர்வுடன் எழுந்து உள்ளே போனார்.

நண்பனுக்கு வேலை தருவதாகக் கூறியனுப்பிவிட்டு உள்ளே நுழைந்த சாரங்கன் நம்ப மறுப்பவனாக செவிகளை மோதிய வார்த்தைகளை மீளவும் ஒரு தடவை ஈர்த்து நின்றான்.

"டேய் சற்குணா! அண்ணனைப் போல ஓரளவோட படிச்சாப் போதும். சும்மா, பட்டம், பட்டம் என்றலைஞ்சால் வாழ்க்கை வெறும் கயிற்றுப் பட்டமாகிவிடும். ஏதாவது தொழிற் கல்வியில் புத்தியைச் செலுத்தி முன்னேறப்பார். அதுதான் எதிர்காலத்துக்கு உதவும்." தம்பிக்கு அறிவுரை சொன்ன தந்தையின் வார்த்தைகளில் புத்தரின் ஞானம் தெரிந்ததுபோல உணர்ந்தான் சாரங்கன்.

'எப்படியெல்லாமோ ஞானம்பெற அலைஞ்ச புத்தர் போதிமரத்தடியில் அமர்ந்த வேளைதான் ஞானம் பெற்றாராம். அப்பாகூட சந்திரனைச் சந்திக்க வேண்டியிருந்தது வாழ்க்கையின் ஞானம்பெற.'

சாரங்கன் தனக்குள் ஓடிய வார்த்தைகளின் நிழலில் ஆசுவாசப்பட்டுக் கொண்டான்.

# ஒரு நிமிடம்...!




"பெண்ணைப் பிடிச்சிருக்கு!" என்றார் பிள்ளையின் அப்பா.

"ரொம்ப சந்தோஷம்"

கையெடுத்துக் கும்பிட்டபடி "மற்றபடி என்னால செய்ய முடிஞ்சதை சொல்லிடறேன். என் பொண்ணுக்குன்னு இருபது பவுண் வெச்சிருக்கேன்!"

"யாருங்க அவ்வளவு கேட்டா? நாங்க என்ன கடையா வைக்கப் போறோம்? உங்களால முடிஞ்சதைப் போடுங்க. உங்களுக்கு இருக்கிறது ஒரு பொண்ணு; ஒரு பிள்ளை!"

பெண்ணின் அப்பா இடைமறித்தார்.

"உங்களுக்கு மட்டும் என்ன, ஒரு பிள்ளை; ஒரு பொண்ணுதானே?"

சிரித்தார்கள்.

"மாப்பிள்ளை 'டிரெஸ்'சுக்காக இரண்டாயிரம் தர்றோம்" என்றார் பெண்ணின் அப்பா.

"எதுக்கு இரண்டாயிரம்? அத்தனை டிரெஸ்ஸா எடுக்கப் போறோம்? இரண்டு காற்சட்டை, இரண்டு ஷர்ட், நானூறு ரூபாய் போதும்."

பெண்ணின் தாய் கூச்சலிட்டாள். ஆனந்தக் கூச்சல்.

"மாப்பிள்ளை அழைப்புக்கு ஏதாவது..?" என்று கேட்டான்.

"காரெல்லாம் வேண்டாம், கம்பீரமா ராஜா மாதிரி நடந்தே வருவான்."

"ஆமாம்பா" என்றான் மாப்பிள்ளை.

"உங்க பெண்ணின் கல்யாணம். உங்க இஷ்டப்படியே செய்யுங்கோ!" என்றார் பிள்ளையின் அப்பா மறுபடியும்.

"நாங்க போயிட்டு வர்றோம்."

"ரொம்ப சந்தோஷம். கல்யாணத்துக்கு நாள் குறிச்சிட்டு வர்றோம்."

"நீங்க ஏன் கஷ்டப்படணும்? நானே பார்த்துட்டேன். இந்த மாதம் இருபத்தேழாம் திகதி சுபமுகூர்த்தம்!"

"அடடா, எவ்வளவு நல்ல மனசு! பிள்ளையைப் பெற்றவர் என்று கொஞ்சம்கூட கர்வம் இல்லாம...."

படி இறங்கிய பிள்ளையின் அப்பா "ஒரு நிமிஷம்" என்றபடி திரும்பி வந்தார்.

"சொல்லுங்கோ!"

"சொல்ல மறந்துட்டேன். உங்க பையனுக்கு மக்கள் வங்கியில வேலை கிடைக்கப் போகுதாமே? என் பெண்ணை உங்க வீட்டு மருமகளாகக் கொடுக்கலாம்னு பார்க்கறேன். ஒரே மேடையில இரண்டு கல்யாணம்!"

பெண்ணின் தந்தைக்கு இப்போதுதான் புரிந்தது- பையனின் தந்தையுடைய விசால புத்திக்குக் காரணம்.!

# ஒரு டஜன் =13

ஆபீசிலிருந்து வரும் பொழுது மார்க்கெட் வழியாகத்தான் வரவேண்டும் வரதன். அப்பொழுது அவன் பார்வையில்பட்டது மாம்பழங்கள். கறுத்தக் கொழும்மான், அம்பலவி!

அவனுக்குத்தான் மாம்பழம் பிடிக்குமென்றால் அவன் மனைவி சியாமளாவுக்கோ மாம்பழம்தான் சாப்பாடு.

அருகிலிருந்த நண்பன் சங்கரைப் பார்த்தான் வரதன். பெண்ணின் முகம்போல அழகாக உருண்டு திரண்டு மஞ்சள் வண்ணத்தில் குண்டு குண்டாக இருக்கும் மாம்பழங்களை ஏக்கமுடன் பார்த்துக்கொண்டிருந்தான் சங்கர்.

"சங்கர், மாம்பழம் வாங்கலாமா?" என்று கேட்டான் வரதன்.

"நீ வாங்கு வரதா... என்கிட்டப் பணமில்லை," என்ற சங்கர் மாம்பழங்களை ஏக்கமுடன் பார்ப்பதைக் கவனித்தான் வரதன். நண்பன் சங்கருக்கும் சேர்த்து மாம்பழம் வாங்க அவனிடம் காசில்லையே!

யானை விலை, குதிரை விலை சொன்னாலும் கடைசியில் விலை குறைத்து ஒரு டஜன் மாம்பழங்கள் வாங்கிவிட்டான் வரதன். அவன் மனைவி சியாமளாவின் ஞாபகம்தான் வந்தது அவனுக்கு. சியாமளா மாம்பழ நிறம், மாம்பழக் கன்னம்!

வீட்டை நோக்கி நடந்தான் வரதன். அநியாய விலை விற்கும்போது மாம்பழங்களை வாங்கி விட்டோமே என்று அவன் வருத்தப்படவில்லை. இந்த மாம்பழங்களைப் பார்த்ததும் அவன் மனைவி சியாமளாவின் முகம் பூவாக மலர்வதையும் அது இரவில் இன்பத்தை வாரி வாரி வழங்கப் போவதையும் அவன் மனம் எண்ணிப் பார்த்து மகிழ்ந்தது.

வீட்டினுள் நுழைந்தான்.

அவன் நுழைந்ததும் நுழையாததுமாக ஒரு எவர்சில்வர் தட்டில் துண்டம் போட்ட மாம்பழங்களைக் கொண்டுவந்து அவன் முன்வைத்தாள் சியாமளா.

"மாம்பழம் ஏது சியாமளா?" என்று கேட்டான் வரதன்.

"வாசல்லே வந்தது. ஒரு டஜன் வாங்கிட்டேன். கற்கண்டா இனிக்குது." என்றாள் சியாமளா.



"ஒரு டஜனா?"

"ஆமாம்..! ஏன்?" என்று கேட்டாள் சியாமளா.

"நானும் ஒரு டஜன் மாம்பழம் வாங்கிட்டு வந்திருக்கேன் சியாமளா!" என்றான் வரதன், பையை மேஜைமீது கவிழ்த்து. அதிலிருந்து மாம்பழங்கள் உருண்டன.

"இவ்வளவு மாம்பழங்களையும் நாம ரெண்டுபேரும் சாப்பிட்டா அவ்வளவுதான்!" என்றாள் சியாமளா.

"என்ன செய்வது இவ்வளவு மாம்பழங்களையும்? இருவருமாகச் சேர்ந்து ஒரு வழியாக ஒரு டஜன் மாம்பழங்களைச் சாப்பிட்டு விடலாம். இன்னொரு டஜன் மாம்பழங்களை என்ன செய்வது?"

**சுகந்தி**

அப்பொழுது வரதனுக்கு 'டக்'கென்று அந்த யோசனை தோன்றிற்று.

"சியாமளா...! என் சினேகிதன் சங்கர் நான் மாம்பழம் வாங்கறப்போ அவனும் கூடயிருந்தான். மாம்பழம் வாங்கக் காசில்லை என்றான்... இந்த ஒரு டஜன் மாம்பழத்தோட கூட ஒரு மாம்பழத்தைப் போட்டு அவனுக்கு அனுப்புறேன். பணம் சம்பளம் வந்தப்புறம் கொடுத்தாப்போதும்னு லெட்டர் எழுதி வேலைக்காரிகிட்டே கொடுத்து அனுப்பிடறேன். கூட ஒரு மாம்பழம் இருக்கிறதாலேயும் பணம் பின்னாடி கொடுத்தாப்போதும் என்கிறதாலேயும் அவன் மாம்பழத்தை எடுத்திடுவான்!" என்றான் வரதன்.

அதன்படியே ஒரு பையில் பதின்மூன்று மாம்பழங்கள் போட்டான். பிறகு ஒரு துண்டுக் காகிதத்தில் "சங்கர் நீ மாம்பழம் வாங்காதது மனசுக்குச் சங்கடமாயிருந்தது. என் ஒய்ஃப் வேறு வீட்டில் ஒரு டஜன் மாம்பழங்கள் வாங்கி வைத்திருக்கிறாள். அதனால் உனக்கு ஒரு டஜன் மாம்பழங்களை இத்துடன் அனுப்பி வைக்கிறேன். பணம் மெதுவாகக் கொடு; அவசரமில்லை." என்று எழுதி பையில் போட்டு சங்கருக்கு கொடுத்தனுப்பினான் வரதன்-வேலைக்காரி மூலம்.

அவள் போன வேகத்தில் மாம்பழப்பையுடன் அப்படியே திரும்பி விட்டாள். உள்ளே ஒரு துண்டுக் கடிதம்.

"குழந்தைகள் எல்லாம் லீவுக்கு பாட்டி வீட்டிற்குப் போயிருக்கிறார்கள். அதனால் இவ்வளவு மாம்பழத்துக்கு இப்போது தேவையில்லை. நீ அனுப்பிய ஒரு டஜன் மாம்பழங்களைத் திருப்பி அனுப்பியிருக்கிறேன். தப்பாக எண்ணாதே." என்றது துண்டுக் கடிதம்.

மாம்பழங்களைக் கீழே கொட்டினான் வரதன். பன்னிரண்டுதான் இருந்தது! ஒன்றைக் காணோம்!

# லவ்

ஹொட்டல் உள்ளே வந்து உட்கார்ந்த அவரை மணி பார்த்தான்.

தங்கை புனிதா காட்டிய புகைப்படத்தின் உருவம் இவருடையதுதானா?

இவராகத்தான் இருக்க வேண்டும்.

"சார்! என்ன வேணும்?"

"மசாலாத் தோசை" என்றார் சாப்பிட வந்தவர்.

நான்தான் புனிதாவின் அண்ணன் என்று இவருக்குத் தெரிந்திருக்க சந்தர்ப்பம் இல்லை. 'இத்தனை மேசைகள் இருந்தாலும் இவர் என் மேசையில் வந்து அமர்ந்திருப்பதால் நாமும் இவர் நல்லவரா என்று சோதித்துப் பார்ப்போமே!' என்று நினைத்தான்.

மசாலாத் தோசையை சுடச்சுடக் கொண்டு வைத்தான் அவரெதிரே.

அடுத்து காப்பி குடித்து முடித்தான் அவர்.

காப்பியை பில்லில் சேர்க்காமல் மசாலாத் தோசைக்கு மட்டும் பில் போட்டு வந்து தங்கை புனிதாவின் காதலனிடம் கொடுத்தான் மணி.

பில்லை வாங்கிப் பார்த்தார் அவர். பிறகு காஷ்யர் மேசையை நோக்கி நடந்தார்.

இவர் நல்லவர் என்றால் 'என்னப்பா, பில் குறைவா இருக்கே?' என்றல்லவா கேட்டிருக்க வேண்டும்?

அவர் காஷ்யர் மேசையில் உட்கார்ந்திருந்த முதலாளியிடம், "சார்! சர்வர் பில்லை குறைவாகப் போட்டிருக்கிறார்!" என்று சொல்லி பில்லைக் கொடுத்தார்.

மணி அதிர்ந்தான்.

"என்னென்ன சார் சாப்பிட்டீங்க?"

"மசாலாத் தோசை ஒண்ணு, காப்பி அவ்வளவுதான்."

"மசாலாத் தோசைக்கு மட்டும்தான் பணம் போட்டிருக்கு! மணி, இங்கே வா!" என்று மணியைக் கூப்பிட்டார் முதலாளி.



மணி வந்தான். அவனை முறைத்துப் பார்த்த முதலாளி. "உன்னை எல்லாம் நான் வேலையில் வைத்திருந்தால் நான் திருவோடு ஏந்தித்தான் போகணும்!" என்றார் சிடுசிடுப்பாக.

"சார்! அவர் ஏதோ தப்பா பில் போட்டுட்டார். அதற்காக நாலு பேர் மத்தியில் எதையும் கேட்டுடாதீங்க!" என்றார், அவன் முதலாளியிடம்.

"சார்! நீங்கள் நல்லவரா இருக்கவே தான் உண்மையைச் சொன்னீர்கள். ஏமாற்று ஆசாமியாக இருந்தால் பத்து ரூபா போயிருக்கும். நீங்கள் பதினெட்டு ரூபாய் கொடுங்கள் சார்" என்றார் முதலாளி.

புனிதாவின் காதலன் பணத்தைக் கொடுத்தார். ஹொட்டலை விட்டு வெளியேறினார்.

மணியிடம்: "உன்னை மாதிரி ஆட்களை வைச்சிருந்தா நான் ஹொட்டலை இழுத்து மூட வேண்டியதுதான். உன் கணக்கை இப்பவே தீத்துடறேன்!" என்றார் முதலாளி.

மணி ஹொட்டலை விட்டு வெளியில் வந்தான்.

புனிதாவின் காதலனை நெருங்கினான்.

"சார்! பில் குறைவா இருக்கேன்னு என்னிடமே கேட்டிருக்கக் கூடாதா?" என்று கேட்டான் மணி.

"உன்னையே கேட்டிருக்கலாம். ஆனால் என் பில்லை மட்டும் திருத்தி இருப்பே. உன்னை மாதிரியான சர்வர்கள், தொழிலில் கவனமாக இருக்கணும். அப்படி இல்லேன்னா முதலாளிக்குத்தான் நஷ்டம். அதனால்தான் நான் அப்படிச் செய்தேன்!" என்றார் புனிதாவின் காதலன்.

"உண்மையிலேயே நான் கவனக் குறைவா இதைச் செய்யலை. தெரிந்தேதான் செய்தேன். உங்கள் பேர் அன்பழகன்தானே?" என்றான் மணி.

"ஆமாம்." என்று வியப்புடன் சொன்னார் அவர்.

"புனிதா..?"

"என் காதலிதான்." என்றார் அவர் மகிழ்ச்சியோடு.

"என் தங்கைதான் புனிதா. உங்கள் புகைப்படத்தை புனிதா என்னிடம் காட்டி உங்களைப் பற்றிய விவரங்களைக் கூறி, 'இவரைக் காதலிக்கிறேன். அவரையே மணம் முடித்து வைங்க அண்ணா'ன்னு சொன்னாள். பணக்காரரான உங்களை நல்லவரான்னு சோதித்துப் பார்க்க, பில்லைக் குறைவாகப் போட்டேன். நீங்க கிடைத்தவரை லாபம் என்று போகாமல் முதலாளியிடம் உண்மையைச் சொல்லி நீங்கள் நேர்மையானவர் என்பதை நிரூபித்து விட்டீர்கள்.

என் தங்கைக்கு ஒரு நேர்மையானவர் கணவராக அமைந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது சார்!" என்று அவர் கையைப் பிடித்துக் கொண்டு கூறினான் மணி.

**சீதாராமன்**



படிப்பகம்

# காதல் வலி

தூக்கம் மறந்து போனது
ஊக்கம் மறக்கவில்லை
அவனுக்கு!

பொருள்தேடி வர
கடல் கடந்தது
உடல் மட்டும்தான்!

வெள்ளி நிலாவை
வெறித்துப் பார்த்தபடி
இருந்தவனை பார்த்து
நண்பன் கேட்டான்:

"எதையோ பறிகொடுத்ததுபோல
இருக்கிறாயே ஏன்?"

"ஆம் நண்பா!
கொடுக்கக்கூடாததை
கொடுத்துவிட்டு வந்துவிட்டேன்!"

"எதை
கொடுத்தாய்?"

"உயிரை!
என் உயிரை!"

நண்பனுக்கு புரிந்தது
இது காதல் விவகாரம்!

இதயம்! உயிர்! மூச்சு!
என்றெல்லாம் உதடுகள்
பேசத் தொடங்கினாலே
உள்ளத்தில் காதல் விதை
விழுந்துவிட்டதென்று அர்த்தம்!

குறும்புக்காக கிளறினான்:
"அப்படியானால்
நீ இங்கு ஜடமா?"

"அவள் உயிரால்
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்!
அவள் நினைவை
சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்!"

நண்பனுக்கு
குறும்பு போகவில்லை.
"அவளுக்காகத்தானே
வாழ்ந்து கொண்டிருக்கிறாய்!"

அவன் சொன்னான்
விடை! -நண்பன்
ஆடிப்போனான்:

"அவளுக்காக வாழ்வது
என்பது பொய்!
அவளாகவே வாழ்கிறேன்
அதுதான் மெய்!"

"இவ்வளவு அன்பு
இருந்தும்-
ஏன் பிரிந்து
இங்கு வந்தாய்?"

"பொருள் இல்லாதாரை
யார் மதிப்பார்?

பிரிந்து வந்தது
பொருள் தேட!"

"பிறந்த மண்ணில்
பொருள் தேடாமல்
ஏன் பறந்து வந்தாயோ?"

"சொந்த மண்-நமக்கு
சொந்தமில்லாத
மண்ணாகிவிட்டது!"

சுவாசிக்கும் காற்றிலும்
அங்கே
குருதி வாசனை!

நேசிக்கும் வாழ்க்கை
போர்ப் புழுதியில்!

யானை புகுந்த
வெண்கலக் கடையாக
நாம் வாழ்ந்த மனைகள்!

வந்தாரை வரவேற்றோம்
இப்போது எங்களை
வெளியேற்றுகிறார்கள்!

"சோழனின் தங்கை
குந்தவை நாச்சியார்,
வாளினை ஏந்திய
வேல்விழிக்காரி.

என்னவள் அந்த
நாச்சியார் சந்ததி
பொன்னவள் போனாள்
போர்க் களத்துக்கு!"

"நல்லதுதானே
நீர் ஏன் கலங்கினீர்?
போர்க் களத்துக்கு
கணவனை அனுப்பிவிட்டு
காத்திருப்பது
பெண்மட்டும் தானா?
காத்திரும் நீரும்
களத்தினில் இருந்து
திரும்பும் வரைக்கும்!"

"கலங்கவில்லை.
கண்டிக்கவும் இல்லை.

வெற்றிக்கு வாழ்த்து
கூறலாம் என்றால்



இன்முகம் காட்டினோம்
இப்போது எங்களிடமே
வன்முகம் காட்டுகிறார்கள்!

எறும்பைக்கூட
எம்மவர் மிதித்திரார்
எம்மை மிதிக்க
எவரெவரோ நினைக்கிறார்!

அன்னையும் தந்தையும்
குலாவிய மண்ணில்
அந்நியர் உலாவிட
போரைத் தொடுத்தனர்!"

"யாரந்த அந்நியர்?
அடிமைச் சங்கிலி
பூட்ட முனையும்
அந்நியர் யாரவர்?"

"டச்சுக்காரர்கள்
நாடு பிடிக்கும்
பேராசைக்காரர்கள்!"

"எதிர்த்து நில்லாமல்
ஏன் நீர் வந்தீர்?
நீதியைக் காக்க
ஏன் நீர் மறந்தீர்?"

"மொத்தச் சுயநலம்
ஒப்புக் கொள்கிறேன்!

அதனால் என்னவள்
என்னையும் மீறி
களம் புகுந்தாளாம்!"

கேட்டவன் அதிர்ந்தான்
"என்னது உம்மவள்
களத்திலா?"

**இலக்கிய நயம்**

எட்டத்தில் அன்றோ
என்னவள் இருக்கிறாள்!

சென்றுவா என்று
சொல்லக் கூட
குரல் எட்டா தொலைவு!

உரம்கொண்ட நெஞ்சினள்
திடம் கொண்ட உடலினள்
மறம் கொண்ட புயலவள்!

என்னவள் எனக்கானவள்
மண்ணையே நேசித்து
கண் எனப் பூசித்து
மண்ணவள் ஆகினாள்!

மீண்டும் அவள் முகம்
என்று காண்பது?

மாண்டு போகாமல்
காதலே காத்தருள்!

வேண்டுவது எல்லாம்
மரணம் தீண்டாமல்
காத்தருள் என்பதே!"

நண்பன் சிரித்தான்.
"காதல் இப்படி
புலம்பவும் வைக்குமா?"
என்றவன் கேட்டான்.

"புலம்பவும் வைக்கும்
புலமையும் வழங்கும்
காதலே இன்பம்.
காதலிக்கப்படுவது பேரின்பம்!"

"பிரிந்திருப்பது
எப்படியோ?"
இடக்காகக் கேட்டான்.

"துன்பம், துன்பம்
பெரும் துன்பம்!
நினைவு என்னும்
இன்பமும் கலந்த
பெரும் துன்பம்!"

என்று அவன்
கூற-நண்பன்
நகைத்தான் பேரொலியாய்.

"நகைப்பாய் நண்பா
நகைப்பாய்தான்!
யாம் பட்ட துன்பம்
நீ படும்வரை
காதல் அறிவு இல்லாமல்
நகைப்பாய் நண்பா
என் கண் எதிரே!

தலைவலியும், காய்ச்சலும்
தனக்கு வந்தால்தான்
அறிவால் உணரப்படும்!
காதல் வலியும்
அப்படித்தான்!"

*யாங்கண்ணின் காண நகுப*
*—அறிவில்லார்*
*யாம்பட்ட தாம்படா வாறு*

அதிகாரம்: 114, குறள்: 1140.

**தருவது ரசிகன்**

ஸ்போர்ட்ஸ்

## இந்திய அணியில் புதுப் புயல்

இந்திய கிரிக்கெட்டின் ஒருநாள் போட்டிகளில் ஆட நுழைந்திருக்கும் இளம்புயல் அஜித் அகர்கர். இருபது வயதான இந்த மும்பைக்காரருக்கு ஒல்லியான தேகம். பழுப்புக் கண்கள். சிவப்பான உருவம். ஏதாவது சொல்லப்போய், வீண் வம்பாகிவிடப் போகிறது என்று மிகவும் கவனமாகப் பேசும் சுபாவம். குரலிலும் மென்மை.

பாடசாலை நாட்களில் கிரிக்கெட் ஆர்வம் தொடங்கியது. முதலில் இவரது திறமை அடையாளம் காணப்பட்டவுடன், பாடசாலை கிரிக்கெட் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அதன்பின் இந்தியாவின் முக்கிய போட்டிகளில் ஒன்றான ரஞ்சிக்கோப்பை போட்டிகளில் மும்பாய் அணிக்காக விளையாடினார்.

அங்கிருந்து ஒருநாள் போட்டிகளில் ஆட இந்திய அணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருடன் இடம்பெற்ற பேட்டி இதோ:

**கேள்வி:** முதன் முதலில் இந்திய அணியில் ஆடக் களம்புகுந்தபோது எப்படியிருந்தது?

**அகர்கர்:** பதற்றமாக இருந்தது. 'நிதானமாய் இரு! பதற்றமடையாதே!' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். பின் பதற்றம் மறைந்து சகஜநிலைக்கு வந்தேன்.

**கேள்வி:** இந்திய அணியில் திறமையான வீரர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்திய அணிக்குத்தான் வெற்றி பெறும் திறமை



இல்லை என்று இந்திய அணிபற்றிய விமர்சனம் உள்ளதே! அதுபற்றி?

**அகர்கர்:** அந்தக் கருத்து தவறானது என்று கடந்த 3 மாதங்களில் நிருபணமாகி விட்டதே!

**கேள்வி:** உங்கள் வெற்றிக்குக் காரணம் என்று நீங்கள் கருதும் அம்சங்கள் என்னென்ன?

**அகர்கர்:** என்னுடைய கடுமையான உழைப்பு, ஒழுக்கம், கட்டுப்பாடான பயிற்சி, மற்றவர்களுடைய நல்வாழ்த்துக்கள்.

**கேள்வி:** பிடித்த உணவு?

**அகர்கர்:** பருப்புச் சோறு வீட்டில் சாப்பிடப் பிடிக்கும். ஹொட்டலுக்குப் போனால் கடல் உணவு ஐட்டங்களை ஒரு பிடிபிடிப்பேன்.

**கேள்வி:** சினிமா பார்ப்பீர்களா?

**அகர்கர்:** மிகவும் அபூர்வமாகப் பார்ப்பேன்.

**கேள்வி:** கிரிக்கெட் தவிர வேறு எதில் ஆர்வம்?

**அகர்கர்:** மியூஸிக். எல்லா வகை மியூஸிக்கும் பிடிக்கும்.

**கேள்வி:** பத்து ஆண்டுகளுக்குப் பிறகு எப்படி இருப்பீர்கள்?

**அகர்கர்:** எனக்கு 30 வயதாகியிருக்கும். அப்போதும் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருப்பேன்.

## வித்தியாச நிறைவு விழா



உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியை நடத்தும் ஃபிரான்ஸ், தொடக்க விழாவின்போது மாயாஜால தோட்டத்தை மைதானத்தில் உருவாக்கிக் காட்டிப் பிரமிக்க வைத்தது.

தற்போது, ஜூலை 12ம் திகதி நடைபெறும் நிறைவு விழாவிலும் வித்தியாசமான நிகழ்ச்சியை நடத்த முடிவு செய்துள்ளது. இதன்படி இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் 22 வீரர்களையும் 300 அழகிகள் மைதானத்திற்கு அழைத்து வருவார்கள். ஒரே மாதிரி உடை அணிந்து வரும் அழகிகள் தட்டையான செருப்பு அணிந்திருப்பார்கள். குதி உயர்ந்த செருப்பு அணிந்து வந்தால் மைதானம் சேதமாகி விடும் என்பதால்தான் இந்த ஏற்பாடு.

இதற்காக அழகிகள் பயிற்சி செய்து வருகிறார்கள். 300 அழகிகளின் அழகும் அனைவரையும் அசர வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதை யாவது ரூபவாஹினி ஒளிபரப்புமா?

## இதிலும் இன்டர் நெட்

பிரேஸில்-நோர்வே அணிகளுக்கிடையே நடைபெற்ற முதல் சுற்றுப் போட்டியில் நோர்வே 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது. இந்த வெற்றிக்கு, கடைசி நேரத்தில் நோர்வேக்குக் கிடைத்த பெனால்டி உதைதான் காரணமாக இருந்தது. அமெரிக்க நடுவரால் வழங்கப்பட்ட இந்த பெனால்டி பற்றிக் கடும் விமர்சனம் எழுந்தது. அந்த பெனால்டி வாய்ப்புக்கான காரணம் தொலைக்காட்சியில் அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இக்காட்சி இன்டர் நெட்டில் காண்பிக்கப்பட்டது. அதில் பிரேஸில் வீரர் ஜூனியர் டியானோ, நோர்வே வீரரான அன்ட்ரி புளோவை ரீ-சேர்ட்டில் பிடித்து இழுக்கும் காட்சி தெரிந்தது. இதனால் பெனால்டி உதை வழங்கப்பட்டது சரியே என்பது புலனாகியது.

அறிவியல் வளர்ச்சியான இன்டர் நெட்டை உதைபந்தாட்டத்தின்போது பயன்படுத்தியது இதுவே முதல் முறை.

## சிந்தியா பதில்கள்

* **கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதற்கு உதாரணம் ஒன்று கூறுங்களேன்?**

வி. ஜெகதீஸ்வரன், மட்டக்களப்பு.

*பாரசீகத்தில் ஒரு காலத்தில் வீட்டுக்கு வீடு அடிமைப் பெண்கள் இருப்பர். சில எஜமானிகள் அவர்களைப் பாடாய்ப்படுத்துவர்.*

*எஜமானி ஒருத்தி சேவல் கூவும்போது தன் அடிமைப் பெண்களை எழுப்பிவிட்டு வேலை வாங்குவாள்.*

*அடிமைப் பெண்கள் அனைவரும் கூடி ஒருநாள் முடிவெடுத்தனர். "இந்த சேவல் இருப்பதால்தானே எஜமானி நம்மை எழுப்பி விடுகிறாள். சேவலை ஒழித்துக் கட்டிவிட்டால்... என்ன செய்வாள்?" என்று நினைத்து சேவலின் கழுத்தைத் திருகி கொன்றுவிட்டனர்.*

*இனித்தான் சேவல் இல்லையே என்று நிம்மதியாகப் படுக்கப்போனார்கள்.*

*கொஞ்ச நேரத்தில் எஜமானி குரல் கொடுத்தாள்: "நேரமாகி விட்டது எழுந்திருங்கள்!"*

*"இன்னமும் சாமமே ஆகவில்லை!" என்று அவர்கள் கூறினார்கள்.*

*"சேவல் இல்லை, அதுதான் நேரம் தெரியவில்லை. நீங்கள் அதிக நேரம் தூங்கி விடக் கூடாதே!" என்றாள் எஜமானி.*

*இப்படியே இரவு முழுக்க, பல தடவைகள் அவர்களை எழுப்பிக் கொண்டிருந்தாள்.*

*வெறுத்துப் போனார்கள், அந்தப் பெண்கள். "சேவல் இருந்தபோது கொஞ்ச நேரமாவது ஒழுங்காகத் தூங்கினோம். இப்போது தூக்கமே போச்சு!" என்றனர்.*

✉ ✍

* **வை.கோ மறுபடி தி.மு.க.வில் சேரப் போகிறார் என்பது உண்மையா?**

சி. ரமீஸ், கல்முனை.

*கலப்படமற்ற வதந்தி! தி.மு.க. ஆதரவு சக்திகள் கிளப்பிய வதந்தியை செல்வியும் நம்பியதுதான் வதந்தி கிளப்பியோருக்கு வெற்றி!*

✉ ✍

* **மாகாணசபைகளுக்கு தேர்தல் நடக்குமா? நடக்காதா?**

வெ. கருப்பசாமி, பண்டாரவளை.

*நடத்தாமல் விடுவதற்கான காரணங்களை தேடுவதில்தான் அரசாங்கம் ஆர்வம் காட்டி வருகிறது! ஐ.தே.கட்சிக்குள் பிளவு தோன்றினால், தேர்தலை நடத்த கொஞ்சூண்டு துணிச்சல் அரசுக்கு வரலாம்! இல்லையானால் பாதை எப்போ திறக்கும், தேர்தல் அப்போ நடக்கும் என்று பாடிக்கொண்டிருக்க வேண்டியதுதான்!*

✉ ✍

* **சிந்தியா! பாதுகாப்பு காரணங்கள்தான் தெற்கில் தேர்தல் நடத்தத் தடையா?**

ஜி. அரவிந்தன், கொழும்பு-06.

*ஆம், நாற்காலியை தொடர்ந்து பாதுகாப்பது என்பதும் ஒரு பாதுகாப்புக் காரணம் தானே?*

✉ ✍

* **மலையக அமைப்புக்களின் ஐக்கியம் குறித்து உமது கருத்து யாதோ?**

பூ. மரியநாயகம், வத்தளை.

*பெரும் கடலும், சில உப்புக் கட்டிகளும் என்பதே எனது கருத்து! ஐக்கியம் கூட இங்கே வியாபாரமாகி விட்டது!*

✉ ✍

* **வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டுவோருக்கு புத்தியே வராதா?**

செல்வி ம. ரம்யா, வவுனியா.

*சிலருக்கு அதுவும் ஒரு சுகம். சமீபத்தில் படித்த சம்பவம் ஒன்று:*

*கவிஞர் வாலியிடம் ஒரு நண்பர் கேட்டாராம்: "ஏன் இந்தப் புனைபெயர் வைத்துக் கொண்டாய்?"*

*அதற்கு வாலி, "இராமாயணத்தில் வரும் வாலி எதிராளியின் பலத்தில் பாதியைப் பெற்றதுபோல, நான் சந்திக்கும் அறிஞர்களின் திறமையில் பாதி வரட்டுமே என்று இந்தப் புனை பெயரைச் சூட்டினேன்!" என்று அடக்கமாகக் கூறினார்.*

*அப்படியும் நண்பர் துடுக்காக: "அப்படி ஒன்றும் உனக்கு அறிவு வந்து விட்டதாகத் தெரியவில்லையே!" என்றார்.*

*"என்ன செய்வது? நான் இன்னும் ஒரு அறிஞனையும் சந்திக்கவில்லையே!" என்றார் வாலி.*

✉ ✍

* **திண்டுக்கல் லியோனியின் பட்டிமன்றத்தில் நீங்கள் இரசித்த தமாஷ் ஒன்று?**

பி. சிந்தரன், நீர்கொழும்பு.

*வேண்டாம்: திண்டுக்கல் லியோனியின் மகள் கூறிய கடி ஜோக் கேளுங்கள்:*

*"ஒரு பொலிஸ் ஜீப் வருகிறது. முன்னாடி இடது பக்கம் கொலைகாரன் ஒருவன் ஓடுகிறான். வலது பக்கம் கொள்ளைக்காரன். பொலிஸ் காரர் முதலில் யாரைப் பிடிப்பார்?"*

*"யாரை?"*

*"முதலில் ஜீப் பிரேக்கை!"*

✉ ✍

* **"கண்ணதாசனை வைரமுத்து ஜெயித்து விட்டார்!" என்று சிவாஜி கூறியது 'குங்குமம்' இதழில் பெரும் சர்ச்சையாகியுள்ளதே?**

வி. ரகுபதி, தெகிவளை.

*சிவாஜி நடிப்புச் சுரங்கமே தவிர, கருத்துச் சுரங்கமல்ல! அவர் கூறியதற்கு அத்தனை சர்ச்சையை 'குங்குமம்' வளர்த்திருக்க வேண்டாம்.*

✉ ✍

* **வடக்கு-கிழக்கு மாகாணசபையில் ஊழல் ஆட்டம் போடுகிறது. தேர்தல் நடந்தால் ஊழல் மறையும்தானே?**

ஆர். மகேந்திரன், திருமலை.

*அப்படியானால் மக்களால் தெரிவான ஏனைய சபைகளில் ஊழல் இருக்கக்கூடாதே! ஆனால் இருக்கிறதே. தேர்தல் நடந்தால் ஊழல் ஒழியும் என்பது, ஊழலின் தோற்றுவாய் பற்றிய அறிவில்லாத கூற்று! ஊழலை மத்திய அரசால்கூட ஒழிக்க முடியவில்லை. தேர்தல் நடந்தால் ஊழலில் பாதி அரசியல்வாதிகளுக்குப்போகும். கூட்டுக் கொள்ளைக்கு 'ஊழல்' ஒழிப்பு என்று அரசியல்வாதிகள் கொள்கை விளக்கம் அளிப்பது நீண்டகால தமாஷ்!*

✉ ✍



'கபடி கபடி' படத்தில் ரசிகா

* **சிந்தியா! மழையால் கிரிக்கெட் போட்டிகள் பாதிப்புற்றுவிட்டனவே! கவலை இல்லையா?**

கா. பிரதீபன், கொழும்பு-11.

*இல்லை! ஒரு புறம் யுத்தம், மறுபுறம் கிரிக்கெட். வானத்திற்கே பொறுக்கவில்லை!*

✉ ✍

* **யாழ் புதிய மேயரின் துணிச்சலை பாராட்டலாம் அல்லவா?**

ஆர். ஆர். கணேசமூர்த்தி, யாழ்ப்பாணம்.

*புதையல் ஆசையில் கிணற்றில் குதிப்பதற்கும், பிறருக்கு உதவ கிணற்றில் குதிப்பதற்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது! முன்னதில் துணிச்சலை விட ஆசைதான் அதிகம்!*

✉ ✍

* **உதைபந்தாட்ட உலக கிண்ணத்தை இம் முறையும் பிரேஸில் கைப்பற்றுமா?**

எச்.எம். அஹமட், புத்தளம்.

*இறுதி மோதல் யாருடன் என்பதைப் பொறுத்தது அது. இம்முறை இத்தாலி அணியும் அசத்துகிறது.*

✉ ✍

* **ஏன் சிந்தியா! பாண்டியராஜனுக்கு பொருத்தமான ஜோடி யார்?**

க. ரஞ்சிதா, சிலாபம்.

*பொருத்தமானதா, விறுத்தமானதா? பின்னழகையே தேடுபவர் பாண்டியராஜன்!*

✉ ✍

* **சிந்தியா! மனித சித்திர வதைக்கு எதிரான தினத்தில் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. னோவில் மணியடித்தனரே! அஞ்சலி செய்யத்தான் மணியடிப்பது வழக்கம். எதிர்ப்புத் தெரிவிக்க மணியடிக்கலாமா?**

இ. துரைராஜ், கொழும்பு-12.

*முறையல்லத்தான்! தவிர, பூசாரிகள் தங்கள் தொழிலுக்குப் போட்டி வரப்போகிறதோ என்று பயந்து கொண்டிருக்கிறார்களாம்!*

✉ ✍

* **யாழ் குடாநாட்டில் தமிழ்க் கட்சிகள் நிவாரண குறைப்புக்கு எதிராகப் போராட்டம் நடத்தியுள்ளனவே?**

ச. வாசன், யாழ்ப்பாணம்.

*வரவேற்கத்தக்க விஷயம்!*

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 16

எபிரேய சமுதாயம் முழுமையாக ஆண்டவரின் சித்தத்தை அறிந்து கொண்டது. மோசேயும் ஆரோனும் ஆண்டவரிட்ட கட்டளைகளை மக்களனைவருக்கும் விளக்கமாகக் கூறிவிட்டனர்.

குறிப்பிடப்பட்ட முதல் மாதத்தின் பதினான்காம் நாள் இரவு இஸ்ரயேலர்கள் அனைவரும் மோசே மூலம் ஆண்டவர் விடுத்த ஆணைப்படியே நடந்தனர். பத்தாம் நாளன்று தெரிவு செய்யப்பட்ட ஆட்டினை வெட்டி, தீயில் வேகவைத்து, புளிப்பற்ற அப்பத்துடனும், கசப்புக் கீரையுடனும் புசித்தனர். ஏழு நாட்கள் தொடர்ந்து புளிப்பற்ற அப்பமே உணவாக உட்கொள்ளப்படவேண்டும் என்றும் ஆண்டவர் கூறியிருந்தார். ஆட்டின் இரத்தத்தை ஒவ்வொரு வீட்டின் முன்புறமும் பூசிவைத்தனர்.

ஆண்டவர் குறிப்பிட்டதுபோல் அன்றிரவு எகிப்தின் மீது மரண தூதரை அனுப்பினார். இரத்த அடையாளமிடப்பட்ட இஸ்ரயேலரின் இல்லங்களைத் தவிர எகிப்தியருக்குச் சொந்தமான இல்லங்கள் அனைத்திலும் அவலக்குரல் எழுந்தது. ஒவ்வொரு வீட்டிலும் பிறந்த தலைமகன்மார்- அவர்களுடைய வயது வித்தியாசமின்றி-திடீர் திடீரென வீழ்ந்து உயிர்துறந்தனர்.

ஏற்கனவே பார்வோனிடம் மோசே கூறிய வார்த்தைகள், பெரும்பாலான எகிப்திய மக்கள் காதுகளுக்கு எட்டியிருந்தன. இதனால் இல்லங்களில் இடம்பெற்ற சாவுகளுக்கு, இஸ்ரயேலர்களை எகிப்தை விட்டு வெளியேற விடாமல் தடுப்பதே காரணம் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

தாக பார்வோனிடமும் அங்கிருந்த ஏனையோரிடமும் கூறிவிட்டு மோசே தனது மக்கள் சமுதாயத்திடம் சென்றார்.

"புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள்!" என்று மகிழ்ச்சியுடன் கூறினார். எபிரேயப் பெருமக்கள் குதூகல மேலீட்டால் ஆரவாரித்துத் தமது மகிழ்ச்சியை வெளிக் காட்டினர்.

மோசே இஸ்ரயேல் சமுதாயத்தைச் சேர்ந்த குழுக்களின் தலைவர்களை அழைத்து, எகிப்திய நாட்டை விட்டு வெளியேறும் நாளின் புனிதத் தன்மையைப் பற்றி ஆண்டவர் தெரிவித்த தகவல்களைக் கூறினார். மக்கள் ஒவ்வொருவருக்கும் அச்செய்தி போய்ச்சேர வேண்டும் என்றும் கூறினார்.

## பாஸ்காப் பலி

எகிப்திய இல்லங்கள் ஒவ்வொன்றிலும் பிறந்த தலை மகன்களை ஆண்டவர் இறந்து போகும்படி செய்ததன் மூலம், இஸ்ரயேலர்களை அந்நாட்டவர்கள் கொடுமைப்படுத்தியமைக்கான பெருந்தண்டனையாக வழங்கினார். இதன் மூலமே இஸ்ரயேலர்களின் விடுதலை உறுதி செய்யப்பட்டது. இதனால் அந்த நாளை ஆண்டுதோறும் நினைவு கூர்ந்து கொண்டாட வேண்டும் என்றும் மோசே மூலம் ஆண்டவர் கேட்டுக் கொண்டார். அன்றைய நாளை பாஸ்கா பலி நாளாகக் கடைப்பிடிக்குமாறும்

அதேபோன்று மற்றுமொரு தொகையினர் சென்றனர். அவர்களுடைய உடைமைகள் எதனையும் விட்டுவைக்கவில்லை. கால் நடைகளையும் உடன் கொண்டு சென்றனர்.

யோசேப்பு தான் எகிப்துக்கு முதன் முதலில் சென்றார். அவரைத் தொடர்ந்து அவருடைய தந்தையாரான யாக்கோபும் அவருடைய ஏனைய பிள்ளைகளும் அவர் வழி வந்தோரும் எகிப்தில் சென்று குடியேறினர். அப்போதிருந்த பார்வோனின் பேரன்புக்குப் பாத்திரராக யோசேப்பு இருந்தார். ஏழு வருடங்கள் எகிப்தை வாட்டிய, கொடிய பஞ்சத்திலிருந்து காப்பாற்றியவர் யோசேப்பு. இதனால் அவருடைய இனத்தவர்களான எபிரேயர் வந்து குடியேற பார்வோன் அனுமதித்தான். யோசேப்பு செய்த உதவியை மதித்து நன்றிக் கடனாக அந்த நாட்டிலுள்ள செழிப்பான பகுதியான கோசேனில், யோசேப்பின் தந்தை, சகோதரர்கள் மற்றும் அவர் வழி மரபினர் பல்கிப் பெருகி வாழ வழி சமைத்தான்.

அப்போதிருந்த பார்வோனைத் தொடர்ந்து வந்த மன்னர்கள் இஸ்ரயேலர்கள் மீது பொறாமையும் சந்தேகமும் கொண்டனர். இதனால் எகிப்தியர்கள் இஸ்ரயேலர்களை அடிமைகளாக்கிக் கொடுமைப்படுத்தினர்.

எகிப்தில் இஸ்ரயேலர் குடியேறி நானூற்று முப்பது ஆண்டுகள் நிறைவு பெறும் நாளன்று தான் இஸ்ரயேலரின் விடுதலைப் பயணம் தொடங்கியது.

## விடுதலைப் பயணம்

பார்வோனின் தலைமகனும் துடிதுடித்து மாண்டான். மந்திரிப் பிரதானிகள், அரச அலுவலர்கள், ஆலோசகர்கள், மதகுருமார் ஆகிய அனைவரின் இல்லங்களிலும் மரணம் சம்பவித்தது. அரண்மனையில் பணிபுரிந்த வண்ணமிருந்த தலைமகன்களும் பார்வோன் முன்னிலையிலேயே வீழ்ந்து மடிந்தனர். நாட்டிலுள்ள சகல மிருகங்களிலும் தலைப்பிறவிகள் மடிந்தன. பறவைகளும் விதிவிலக்கல்ல.



### அல்லோல கல்லோலம்

ஒவ்வொரு வீட்டிலும் இத்தகைய அல்லோல கல்லோலம் எழுந்தமையினால், பார்வோனிடம் பலதரப்பட்ட மக்களும் முறையிட அரண்மனையில் வந்து மொய்த்தனர். மக்களின் முறைப்பாட்டுக்குச் செவிமடுப்பதா, பட்டத்தரசி தன் இறந்த மகனை மடியில் வைத்து அழுது புலம்புவதைப் பார்ப்பதா, என்று தெரியாமல் தடுமாறிய பார்வோன், அந்த இரவிலேயே, மோசேயையும் ஆரோனையும் உடன் அழைத்து வரும்படி காவலரை ஏவினான்.

மோசேயும் ஆரோனும் நிதானமாக மன்னன் முன் வந்து நின்றார்கள். அரண்மனையில் திரண்டு நின்றிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களும் என்றுமில்லாத வகையில் இருவரையும் வணங்கி வழிவிட்டனர். தங்கள் உறவுமுறைகளின் உயிர்களை மீட்டுத்தந்து விடும்படி கேட்டு அவர்களில் பலர் அழுது புலம்பினர்.

மோசேயையும் ஆரோனையும் கண்ட பார்வோன் எழுந்தோடிச் சென்று தழுதழுத்த குரலில், தான் செய்த குற்றங்களை மன்னித்து, இறந்தவர்களை உயிர் மீட்டுத் தருமாறு வேண்டினான். "உடனடியாகவே எபிரேய சமுதாயம் எகிப்திலிருந்து வெளியேறுவதற்கு இனி எதுவித தடையும் கிடையாது. அவர்களுடைய ஆடு மாடுகள், கழுதைகள் ஆகிய அனைத்தையும் உடன் அழைத்துச் செல்லலாம்!" என்றும் பார்வோன் உறுதியாகக் கூறினான்.

பார்வோனின் மனத்தை இறைவன் பூரணமாக மாற்றிவிட்டார் என்பதை மோசே அறிந்து கொண்டார். மன்னன் இனிமேல் ஏமாற்ற மாட்டான் என்றும் நம்பினார். ஆண்டவரைப் பிரார்த்தித்து இத்தண்டனையிலிருந்து எகிப்திய மக்களுக்கு விடுதலை அளிக்க உதவுவ பணித்தார்.

எகிப்தை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர், இஸ்ரயேலர்கள் எகிப்திய இல்லங்களுக்குச் சென்று நகைகளையும் போர்வைகளையும் பெற்றுக்கொண்டனர். இவர்கள் மேலும் தாமதித்தால் தங்களுக்கு என்னென்ன தண்டனைகள் தொடருமோ, என்று பயந்த அவர்கள், இஸ்ரயேலர்களுக்கு வேண்டியதையெல்லாம் கொடுத்து அனுப்பிவைத்தனர்.

இலட்சக் கணக்கான இஸ்ரயேலர்கள் தங்கள் அடிமைத்தனை அறுந்தது என்ற மகிழ்ச்சியில் புறப்பட்டனர். அத்தனைபேரும் ஒரே வேளையில் புறப்பட்டுச் செல்வதைப் பார்த்து எகிப்திய மக்கள் ஏக்கப் பெருமூச்சு விட்டனர். தங்கள் நாடு பொலிவிழந்து சூனியப் பிரதேசமாக மாறிவிட்டதோ என்று வேதனைப்பட்டனர். அவர்கள் வெளியேறிப் போவதைக் கண்டு, அக்காட்சியை அவ்வப்போது அரச அதிகாரிகள் வந்து பார்வோனிடம் முறையிட்டனர். கோபமும் துக்கமும் ஒருங்கே மனதைக் குழப்ப பார்வோன் சிந்தனையிலாழ்ந்தான்.

### கானான் தேசம் நோக்கி

இஸ்ரயேலர்களின் மூதாதையருக்கு ஆண்டவர் தருவதாக வாக்களித்த கானான் தேசத்தை நோக்கி விடுதலைப் பயணம் தொடங்கியது. குழந்தைகள், பெண்கள் தவிர ஆண்கள் மட்டுமே ஆறு இலட்சம் பேர் சென்றார்கள். குழந்தைகளும் பெண்களும்

விடுதலைப் பயணம் தொடங்கி ஏழு நாட்களுக்கு புளிப்பற்ற அப்பமே உண்ண வேண்டும் என்றும் ஆண்டவர் ஆணை பிறப்பித்திருந்தார். இதிலிருந்து எவரும் தவறக் கூடாதென்றும் அவை புனிதமான நாட்களாகக் கொண்டாடப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தார். கானான் தேசம் சென்றடைந்த பின்னரும் ஆண்டு தோறும் பாஸ்கா தினம் பக்தியுடன் கொண்டாடப்பட வேண்டும் என்பதும் இறைவனின் விருப்பம்.

சுக்கோத்து என்ற இடத்திலிருந்து இஸ்ரயேலர்கள் படை அணிபோல அணிவகுத்துச் சென்றனர். பயணம் கட்டுப்பாட்டுடன் நடைபெற வேண்டும் என்பதற்காக மக்கள் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவுக்கும் தலைவர், உபதலைவர் என்று நியமிக்கப்பட்டு பயணம் தொடர்ந்தது.

கானான் தேசத்துக்கு பெலஸ்தியர் நாடு வழியாகச் செல்வதே குறைந்த தூரமாகவும் நேர்வழியாகவும் இருந்தது. ஆண்டவர் மக்களை பாலை நிலத்தினூடாகவே செங்கடலை நோக்கிச் செல்லுமாறு பணித்திருந்தார். நேர் பாதையில் வாழ்ந்த மக்களால் இஸ்ரயேலர்களுக்குத் தீங்கு ஏற்படலாம் என்பதற்காகவே மக்கள் குடியிருப்புக்கள் அதிகமில்லாத சுற்றுப் பாதையால் செல்லுமாறு ஆண்டவர் கூறியிருந்தார்.

### வழிகாட்டல்

பயணத்தில் வழி பிசகாமலிருப்பதற்காக ஆண்டவர் வழிகாட்டிச் சென்றார். பகல் வேளையில் மக்கள் கூட்டத்தின் முன்னால் மேகத்தூண் ஒன்று வழிகாட்டிச் சென்றது. இரவில் அதுவே சுவாலை விட்டெரியும் நெருப்புத்தூணாகவும் மாறியது. இம்முறையிலேயே ஆண்டவரின் வழிகாட்டல் அமைந்திருந்தது. அவர்கள் முதன் முதலில் சென்று கூடார மடித்துத் தங்கிய இடம் பாலைவனத்தின் எல்லையிலிருந்த எத்தாம் என்ற இடமாகும்.

இஸ்ரயேலர்கள் பெருமகிழ்ச்சியில் ஆடிப் பாடி ஆனந்தமாகச் சென்றனர். அவர்கள் செல்லும்பாதையில் மாறு வேடங்களில் சென்ற பார்வோனின் ஒற்றர்கள் மன்னனுக்கு அவ்வப்போது தகவல்களை அனுப்பிக்கொண்டிருந்தனர். அவையினரை ஒன்று கூட்டி அவ்வப்போது கிடைக்கும் தகவல்களை மன்னன் ஆராய்ந்த வண்ணமிருந்தான். இதேவேளை அவனுடைய மனத்தை ஆண்டவரே முன்போல் இறுகும்படி செய்தார்.

தமது நாட்டையும் நகரங்களையும் சிறப்புறக் கட்டியெழுப்பும் பணியினை மேற்கொண்டிருந்த அடிமைகளை 'வெளியேறிப் போக விட்டு விட்டோமே!' என்று ஏங்கினான். இஸ்ரயேலர்களைப் போல் ஊதியம் ஏதுவும் பெறாமல் கடுமையாக உழைக்க எகிப்திலே எவரும் இல்லை என்று பார்வோனின் அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர். அவர்கள் போன பின்னர்- அவர்களால் தொடக்கப்பட்ட பணிகள் அரை குறையாக- கைவிடப்பட்ட நிலையிலிருந்தன. சுறுசுறுப்பாக அதுவரை இயங்கிக் கொண்டிருந்த இடங்களெல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன.

(தொடர்ந்து வரும்)

**திருமறை (14) விடை:** நீர் இரத்தமாதல், தவளைகள் படையெடுப்பு, கல்மழை ஆகியவை.

**பரிசு பெறுவோர்:**

1. லெ.நோனா, சின்ன ஊரணி, மட்டக்களப்பு.
2. செல்வி த. தஷாந்தி, 17/4ஏ, மெண்டிஸ் மாவத்தை, அட்டன்.
3. சாலினி மடோனா, நீர்/தோப்பு அ.த.வித்தியாலயம், கொச்சிக்கடை.
4. ஓரிமா ஜென்சியா, 1164, பாலையூற்று, திருகோணமலை.
5. செல்வி நளினி ஞானமுத்து, மானிப்பாய் வீதி, கைதடி மேற்கு, யாழ்ப்பாணம்.

**திருமறை 16 வினா:-** இஸ்ரயேலர்கள் எத்தனை வருடங்கள் எகிப்தில் தங்கியிருந்தனர்?

ஜூலை 11க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 16—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : அன்றாடப்பிரச்சனை. |
| பெற்றோர் அல்லது பாதுகாவலர் பெயர் | : இனப்பிரச்சனை. யுத்தம். |
| தொழில் | : மக்களை அவலப்படுத்தல். |
| உபதொழில் | : தமிழ்க் கட்சிகளுக்கு அறிக்கைவிட உதவுதல். |
| எதிரிகள் | : தமிழ்க் கட்சிகளல்ல. |
| சமீபத்திய சாதனை | : உள்ளூராட்சித் தேர்தலை நியாயப்படுத்த உதவியது. |
| எதிர்கால சாதனை | : வடக்கு-கிழக்கு மாகாணசபை தேர்தலைக் கோருவோருக்கு பயன்படுவது! |
| பொழுது போக்கு | : நிவாரணங்களை குறைத்தல், வெட்டுதல், நிறுத்தல், கைதுகள், வதைகள், மற்றும் காணாமல் போகச் செய்தல். |
| பிடித்த விளையாட்டு | : குண்டு எறிதல் |
| நம்பும் ஆயுதம் | : அவசரகாலச் சட்டம். பயங்கரவாதத் தடைச் சட்டம். |
| ஒரே இலட்சியம் | : மக்களை வாட்டி மண்டியிட வைப்பது! |

## நவீன உபதேசம்

**அசோக சக்கரவர்த்தி போர் உடை களைந்து, போர் ஆயுதம் துறந்து சமாதானப் பாதையில் செல்ல தயாராகிறார். அப்போது ஒரு மதகுரு ஓடிவருகிறார்.**

மதகுரு: நிறுத்து மன்னா, நிறுத்து!

அ.ச: ஆம் நிறுத்தத்தான் போகிறேன். இரத்தம் சிந்தும் யுத்தத்தை நிறுத்தத்தான் போகிறேன்! சித்தம் தடுமாறும் ஆதிக்க வெறியை நிறுத்தத்தான் போகிறேன்! புத்தம் சரணம் கச்சாமி என்று புத்தர் காட்டிய சாந்தி வழியில் அடி எடுத்து வைக்கத்தான் போகிறேன்!

மதகுரு: மன்னா! உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?

அ.ச: ஆம் சுவாமி! பிடித்துத்தான் இருந்தது பைத்தியம், போர்ப் பைத்தியம்! பகவான் புத்தரின் போதனைகள் அந்த பைத்தியத்திற்கு வைத்தியம் செய்துவிட்டன.

மதகுரு: மன்னா! என்ன கூறுகிறீர்?

அ.ச: முட்டையை உடைப்பதுகூட பாவம் என்று அறிந்தேன்! பதைத்தது நெஞ்சம்! நாம் எத்தனை தலைகளை உடைத்துவிட்டோம்! எறும்பைக் கூட கொல்வது பாவம்! ஐயகோ... சுவாமி, நாம் எத்தனை மனித அரும்புகளை அழித்திருக்கிறோம்!

ம.கு: நிறுத்து மன்னா! நிறுத்து! வெற்றிகர



மாக போரைத் தொடர வேண்டிய நேரத்தில், தத்துவப் புத்தகங்களை புரட்டிய நீ ஒரு பேடி! போரை நிறுத்தப் போவதாக கூறுவதைவிட நீ ஊரைவிட்டே ஓடிப் போயிருக்கலாம்!

அ.ச: சுவாமி! தங்களுக்கு ஓர் விலை உயர்ந்த தேர் அனுப்பி வைத்திருந்தேனே?

ம.கு: ஒரு தேர் அல்ல, ஒரு கோடித் தேர் தந்தால்கூட எங்கள் மடாலயத்தின் தீர்மானங்கள் மாறவே மாறாது!

அ.ச: சுவாமி! கந்தலானாலும் கசக்கி கட்டலாம். அது எளிமை! பிச்சை எடுத்து போர் நடத்தினால் அதன் பெயர் கொடுமை அன்றோ!

ம.கு: மன்னா! உன் தேவைகளுக்காக மடாலயத்தின் படிகளில் ஏறி இறங்கியவன் நீ! உன் ஆட்சி நிலைக்கவும், உன் முடிகாக்கவும் உனக்காக எத்தனை ஓலைகள் எழுதி வெளியிட்டோம் என்பது ஞாபகம் இருக்கிறதா?

அ.ச: மறக்கவில்லை சுவாமி! என் சிம்மாசனம் ஆடிய போதெல்லாம், உங்களை நாடித் தானே ஓடிவந்து ஆதரவு கோரினேன்.

ம.கு: சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது போல, பகவான் பணி நம் கடன் என்று கிடந்த எங்களை அரசியலுக்குள் இழுத்து விட்டது யார் குற்றம்?
உங்கள் சிம்மாசனச் சண்டைகளை மடாலயத்தின் முற்றத்திற்கு கொண்டுவந்தது யார் குற்றம்?
சாதுக்களான எம்மை அரசியலின் சூதுவாதுகளை கற்க வைத்தது யார் குற்றம்? இத்தனை குற்றங்களையும் செய்துவிட்டு, இப்போது எங்கள் கட்டளையை மீற நினைத்தால் என்னாகும் தெரியுமா? சாது மிரண்டால் காடு கொள்ளாது மன்னா!

அ.ச: சுவாமி! சபிக்காதீர்கள்! நான் என்ன செய்யவேண்டும்! ஆணையிடுங்கள்!

ம.கு: எடுத்த பணியை முடி! உன்னால் முடியாவிட்டால் புதிய மன்னன் அமர இடம் கொடு! ஆளப்பிறந்தவர்கள் நாங்கள்! மாளப்பிறந்தவர்கள் எதிரிகள்!

அ.ச: சாந்தியை போதிக்க வேண்டிய உதடுகள், இரத்த வாந்தி எடுக்கும் போர் அரக்கனுக்காக வாதிக்கலாமா சுவாமி?

ம.கு: உந்தக் கதையைப் போய் தொடை நடுங்கும் கோழைகளிடம் கூறும்!

அ.ச: விசித்திரமாக இருக்கிறது சுவாமி!

ம.கு: என்ன விசித்திரத்தை கண்டீர்?

அ.ச: சாதுக்கள் மோதல்களை ஆதரிப்பதும், சன்மார்க்கத்துக்கு மாறாக சண்டை மார்க்கத்தை உபதேசிப்பதும் விசித்திரம் அல்லாமல் வேறென்ன சுவாமி?

ம.கு: அசோகா! மடாலயம் சினந்தால் மகுடாதிபதிகள் நிலைக்க முடியாது!

அ.ச: தெரியும்! அந்த நினைப்பை உங்களிடம் விதைத்தவர்களே மகுடங்களுக் காக மோதிய மகுடாதிபதிகள்தானே!

ம.கு: அது உண்மை! தேர்கொடுத்தீர்கள்! பல்லக்கு தூக்கினீர்கள்! இத்தனையும் பக்தியாலோ கொடுத்தீர்கள்? எங்கள் ஆதரவை நாடும் புத்தியோடுதானே தந்தீர்கள்!

அ.ச: போரை தொடர சம்மதிக்கிறேன்! எங்கள் யானைப் படைகளும், குதிரைப் படைகளும், மற்றும் சகல வகைப் படை களும் எதிரிமீது பாய உத்தரவிடுகிறேன்! ஒரே ஒரு விண்ணப்பம் சுவாமி!

ம.கு: என்ன உமது விண்ணப்பம்?

அ.ச: தொடர்ந்து நானே அரியாசனத்தில் அமர்ந்திருக்க அருள் பாலிக்கவேண்டும்!

ம.கு: (மர்மமாக சிரித்தபடி) இங்கே ஆள்வது யார் என்பது எமக்கு முக்கிய மல்ல, அங்கே எதிரிகள் மாள்வதுதான் எமக்கு முக்கியம்! அந்தக் காரியத்தை செவ்வனே செய்யும் சிறப்பு உமக்கு இருப்பதாகக் கண்டால், எம் ஆதரவு தொடரும்! இல்லையெனில் தளரும்!

அ.ச: உத்தரவு சுவாமி! ஒழித்துக் கட்டும்வரை போர்! போதும் நிறுத்து என்று நீங்கள் உத்தரவிடும்வரை, எதிரிகளை வீழ்த்தும் வரை போர்! என்றும் உனக்கே சிம்மாசனம் என்று நீங்கள் என்னைப் புகழும் வண்ணம் போர்க்களம் சிவப்பு வண்ணமாகும் சுவாமி! இது சத்தியம்!

## மாபெரும் கால்பந்து போட்டி

வடக்கு-கிழக்கு மாகாணசபை வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்து போட்டிக்கு தமிழ்க் கட்சிகள் பயிற்சி செய்ய ஆரம்பித்துள்ளன. அன்றாடப் பிரச்சனை மைதானத்தில், தமிழ் மக்கள் என்ற பந்தை உதைத்து சிறப்பாக பயிற்சி பெறத் தொடங்கியுள்ளன.

அறிக்கை உதை, பேட்டி உதை, முழக்க உதை, உண்ணாவிரத உதை, எச்சரிக்கை உதை, சவால் உதை, வாக்குறுதி உதை என்று பலரக உதைகளில் தீவிர பயிற்சி பெற்று வருகின்றன.

அன்றாடப் பிரச்சனை என்ற மைதானத்தை மேலும் பெரிது படுத்தி உதவுமாறு அரசிடம் இரகசியக் கோரிக்கையும் விடுத்துள்ளன.



**காதிலை பூ கந்தசாமி!**



படிப்பகம்

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன
கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

➡ 'ஷார்-பீ' என்ற வகையான நாய் விசித்திரமான தோற்றமுடையது. இதன் உடலமைப்புக்குத் தேவையானதைவிட அதிகமான அளவு சதை பலபக்கங்களிலும் தொங்கும். வரிவரியாகத் தெரிகிறதே. அது சதைதான்.

மிகப் புராதனமான காலத்திலிருந்து சீனாவில் காணப்படும் நாய் இதுவாகும்.

படம் இரண்டில் பளீர் வெண்மையாக காணப்படுவது 'பெட்லிங்டன் டெரியர்' இந்த வகை நாய்கள் பெரும்பாலும் வேட்டைகளுக்குப் பயன்படுகின்றன.

# பப்பி



ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657





➡ 'டெரா' என்ற இலத்தின் மொழிச் சொல்லுக்கு 'மண்' என்று அர்த்தமாகும்.

பெரும்பாலும் 1800ம் ஆண்டுகளிலிருந்து இங்கிலாந்தின் அரசகுடும்பங்களிலும் பிரபுக்கள் இல்லங்களிலும் இவை வளர்க்கப்படுகின்றன.

மண் குழிகளிலும் புதர்களிலும் பதுங்கியிருக்கும் குள்ளநரி, முயல் மற்றும் வெள்ளெலி ஆகியவற்றைத் தேடிக் கண்டுபிடிக்கும் ஆற்றல் இவைக்குண்டு என்பதனால் 'மண்'ணுடன் இணைந்த பெயரை இந்த ரகங்களுக்குச் சூட்டியுள்ளனர்.

அசப்பில் பொம்மைகள் போலவே இவை காணப்படுகின்றன அல்லவா. அதனால்தான் வீடுகளுக்குள் விரும்பி வளர்க்கிறார்கள். இப்போதெல்லாம் நாய்களை வீட்டில் அல்ல, வீட்டின் உள்ளே வளர்ப்பதுதான் பாஷன்.

# அவுஸ்திரேலியாவில்



➘ ரொசெல்லா கிளிகள் அவுஸ்திரேலியா கிழக்கு மற்றும் தென் பிராந்தியங்களில் காணப்படுகின்றன. ரோஜாக் குன்றில் முதன் முதலில் இக்கிளிகள் தென்பட்டமையினால் இவற்றுக்கு 'ரொசெல்லா' என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

இவற்றின் உடலில் கடும் சிவப்பு, மஞ்சல் மற்றும் நீலம் ஆகிய வர்ணங்களே அதிகமாகக் காணப்படும். மரப்பொந்துகளில்தான் இவை கூடுகட்டும். ஒரு தடவையில் 4 முதல் 7 முட்டைகளை இடும். பழங்களையும் பருப்புவகைகளையுமே இவை உணவாகக் கொள்ளும்.

'ரொசெல்லா' கிளிகள் கூட்டமாகத் திரண்டு வந்தால் இவற்றின் அழகில் மயங்கும் பண்ணையாளர்களே இவற்றைக் கொன்று குவிக்கத் தயங்கமாட்டார்கள். அத்தனை தூரம் பண்ணைப் பயிர்களை இவை நாசம் பண்ணிவிடும். அழகால் நாசமும் ஏற்படும் என்பதற்கு இக்கிளிகளும் ஓர் உதாரணம்.



➶ இந்தியாவிலும் மிகப் பெறுமதி வாய்ந்த வைரக்கற்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் கோகினூர் வைரம்தான் அதி சிறந்தது எனக் கணிக்கப்படுகிறது.

இந்திய மன்னர்களும் பின்னர் பாரசீக மன்னர்களும் சொந்தம் கொண்டாடிய இக்கல்லை கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி கல்கத்தாவில் பஞ்சாபில் வைத்து 1849ல் கொள்முதல் செய்து பிரிட்டிஷ் ஆட்சி பீடத்திடம் கொடுத்தது.

பட்டை தீட்டப்படாத வைரக் கற்கள் (மத்தியில் காணப்படும் பெரியவை) எவ்வாறிருக்கும் என்பதையும் நிபுணர்களின் கைத்திறனால் சிறிது சிறிதாகப் பட்டை தீட்டப்பட்டபின் எவ்வாறு இருக்கும் என்பதனையும் படத்தில் காணலாம்.

உண்மையான அளவைவிட 3/4 அளவில்தான் இங்கு காட்டப்பட்டுள்ளன.

# வைரம்

⬆ வைரத்தை வைரத்தால்தான் வெட்ட வேண்டும் என்பார்கள். மண்ணில் பெறப்படும் எந்தப் பொருளையும் விட-எத்தகைய உலோகத்தைப் பார்க்கிலும் உறுதிவாய்ந்தது வைரம்.

நவரத்தினங்களில் மிகவும் பெறுமதி வாய்ந்தது வைரமே. நம்மவர்கள் வைரக்கல் ஆபரணங்களுக்கு அழகூட்டுவது என்று மட்டுமே தெரிந்து வைத்துள்ளோம். ஆனால் தொழிற்சாலையில்தான் வைரக்கற்களின் உபயோகம் உயர்ந்து நிற்கிறது. எத்தகைய உறுதியான பொருளையும் வெட்டுவதற்கு வைரக்கற்களே பயன்படுத்தப் படுகிறது. ஆபரணங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதே அதிகமாகும்.

வைரக்கல் இரசாயன ரீதியில் வெறுமனே கரிதான். பூமியின் தளங்களுக்குள் சிக்குண்டு, கடும் வெப்பத்தினாலும் அமுக்கத்தினாலும் இறுகி உறுதியான கல்லாக மாற்றமடைகிறது. பூமியை அகழ்ந்து முரட்டுத்தனமாகக் கிடக்கும் இக் கற்களை வெளியே கொண்டு வருகிறார்கள்.

தேர்ச்சி பெற்ற வைரக்கல் வெட்டும் நிபுணர்கள் உரிய வடிவமைப்புக் கொடுத்து இவற்றை வெட்டி எடுக்கிறார்கள். இவற்றை வெட்டுவதற்கும் வைரக்கல்லே பயன்படுகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆற்றுப் படுகைகளில் வைரங்கள் மண்ணோடு இடக்காகக் காணப்பட்டன. அவற்றைக் கண்டெடுத்தவர்கள் அரசர்களிடமும் வசதிபடைத்தவர்களிடமும் அவற்றைக் கொடுத்தனர். தென் ஆபிரிக்காவில்தான் மிகப் பெரிய அளவிலான வைரச்சுரங்கங்கள் காணப்படுகின்றன. 1867ம் ஆண்டில் ஒரேஞ்ச் ஆற்றின் கரையோரமாகச் சென்ற ஒரு விவசாயியின் மகள் ஒளி உமிழ்ந்து கொண்டிருந்த ஒரு கல்லைக் கண்டெடுத்தாள். இதிலிருந்துதான் அந்நாடு வைரக்கல் தொழிலில் மேலோங்கியது.

உலகிலேயே மிகப் பெரிய வைரக்கல் 1905ம் ஆண்டில் தென் ஆபிரிக்காவில் கண்டெடுக்கப்பட்டது. இது 3,106 கரட் எடைகொண்டது. (0.6 கிலோகிராம்) இதனை ஒரு வர்த்தக நிறுவனம் கொள்முதல் செய்து பிரிட்டனின் ஏழாவது எட்வட் மன்னருக்குப் பரிசளித்தது.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் விதுஷன் விஜயசீலன் (02.07.1998)

மன்னார் மூர்வீதியைச் சேர்ந்த விஜயசீலன்-சுபர்சினி தம்பதியினரின் செல்வப் புதல்வன் விதுஷன் தனது 1வது பிறந்த தினத்தை வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, இந்தியாவிலுள்ள அப்பம்மா, அப்பப்பா, சித்தப்பா, சித்தி, மாமா, மாமி, அம்மம்மா, அம்மப்பா மற்றும் கனடாவிலுள்ள கனகம்மா பூட்டி, ஜேர்மனியிலுள்ள அம்மப்பா, பெரியம்மா, பெரியப்பா, மன்னாரிலுள்ள ராஜா, வேலு குடும்பத்திலுள்ளவர்களும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களும் விதுஷனை சீரும், சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

*தகவல்: ஆர். விஜயசீலன்-அயின் தியேட்டர்,மன்னார்.*



# கோ(ல்)லாகலம்

உலகில் மிக அதிக ரசிகர்கள் கால்பந்து விளையாட்டுக்குத்தான்.

இந்த நூற்றாண்டில் இறுதியான கால்பந்து கிண்ணப்போட்டிக்கான ஆரம்ப விழா ஃபிரான்சில் கோலாகலமாக நடந்தது. இங்கே ரூபவாஹினி அரைகுறையாகக் காட்டி வெறுப்பேற்றியது. (அந்தளவுக்கு இரசனையே இல்லாத நிர்வாகம் அரசியல் சிபாரிசால் ரூபவாஹினிக்குள் குப்பை கொட்டுகிறது.)

உலகெங்கும் பல கோடி மக்கள் கண்டுகளித்த கோலாகல ஆரம்பவிழா நிகழ்ச்சியின் ஒரு துளிதான் இந்தக் காட்சி. கோடி கோடியாக பணத்தைக் கொட்டி ஆரம்பவிழாவை வெகு விமரிசையாக நடத்திக் காட்டிவிட்டது ஃபிரான்ஸ்.

-★-



இந்த முறை முதல் சுற்றில் கச்சிதமாக உதைத்தார் பாஜியோ. இத்தாலியின் சூப்பர் ஸ்டார்.

# உதைமன்னர்

கால்பந்து போட்டிகளில் ரசிகர்களும் ரசிகைகளும் வைத்த கண் வாங்காமல் கவனிக்கும் சூப்பர் ஸ்டார்களில் ஒருவர் இத்தாலிய வீரர் போர்டே பாஜியோ. 31 வயது. ஆளைப் பார்த்தால் நோஞ்சான் போல இருப்பார். நுட்பமாக கோலைத் தள்ளுவதில் சூரர். 1994ல் உலகக் கிண்ணப் போட்டிகளில் இந்த சூப்பர் ஸ்டார் வசை மழையில் நனைந்தார். இறுதிப் போட்டியில் பிரேஸில் அணிக்கு எதிரான 'பெனால்டி' உதை ஒன்றை கச்சிதமாகக் கொடுக்கத் தவறிவிட்டார். அதனால் பிரேஸில் வென்று கிண்ணத்தை கைப்பற்றியது.

இம்முறை முதல் சுற்றுப் போட்டிகளில் 'பெனால்டி' உதைகளை கச்சிதமாகக் கொடுத்து இன்ப அதிர்ச்சி கொடுத்திருக்கிறார்.

1988 இல் சர்வதேசப் போட்டிகளில் ஆடத் தொடங்கினார். அக்காலகட்டத்தில் பாஜியோ பெற்ற ஊதியம் உலக சாதனை. ஒருகோடியே பத்து இலட்சம் டொலர்கள். இத்தாலியின் தங்கப் பையன் என்ற பட்டமும் பெற்றார்.

1993இல் ஐரோப்பாவின் சிறந்த கால்பந்து வீரர் என்ற பெருமை தேடி வந்தது.